www.padippakam.com

# துன்ப அலைகள்



செ. குணரத்தினம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# துன்ப அலைகள்

செ. குணரத்தினம்

தேசிய கலை இலக்கியப் பேரவை



படிப்பகம்

www.padippakam.com

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு - 92

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | துன்ப அலைகள் |
| பதிப்பு | : | ஜூலை, 2002 |
| வெளியீடு | : | தேசிய கலை இலக்கியப் பேரவை |
| அச்சிட்டோர் | : | கௌரி அச்சகம் |
| முகப்பு ஓவியம் | : | இரா. சடகோபன் |
| விநியோகம் | : | சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் (பிறைவேற்) லிமிெட்,<br>44, மூன்றாம் மாடி,<br>கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி,<br>கொழும்பு -11.<br>தொலைபேசி : 335844. |
| விலை | : | ரூபா. 125/= |

| | | |
|---|---|---|
| Title | : | Thunpa Allaikal |
| Edition | : | July, 2002 |
| Publishers | : | Theshiya Kalai Ilakkiyap Peravai |
| Printers | : | Gowry Printers |
| Cover Design | : | R. Shadagopan |
| Diustributors | : | South Asian Books,<br>Vasantham (Pvt) Ltd,<br>No. 44, 3rd Floor,<br>C.C.S.M. Complex,<br>Colombo -11.<br>Tel : 335844 |
| ISBN No | : | 955-8637-07-6 |
| Price | : | Rs. 125/= |




படிப்பகம்

www.padippakam.com

## பதிப்புரை

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்படும் நாவல்கள் வரிசையில் இது மூன்றாவதாகும். முதலில் திக்குவல்லை கமால் எழுதிய 'ஒளி பிறந்தது' என்ற நாவலும் இரண்டாவதாக சுபைர் இளங்கீரன் எழுதிய 'அவளுக்கு ஒரு வேலை வேண்டும்' என்ற நாவலும் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் பிரபல எழுத்தாளருள் ஒருவரும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மண்ணின் மைந்தருமான செ. குணரத்தினம் அவர்களின் 'துன்ப அலைகள்' என்ற இக் குறுநாவல், தேசிய கலை இலக்கியப் பேரவையும் தமிழகத்தின் 'சுபமங்களா' ஏடும் இணைந்து நடாத்திய ஈழக் குறுநாவல் போட்டியில் பங்கு பற்றி முதற் பரிசு பெற்ற நாவலாகும்.

'சுபமங்களா' ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் 1994ன் முற்பகுதியில் தேசிய கலை இலக்கியப் பேரவையால் அழைக்கப்பட்டு மிக நெருக்கடியான போர்க்காலச் சூழ்நிலையிலும் கொழும்பு, மட்டக்களப்பு, மலையகம், திருகோணமலை, வவுனியா எனப் பல இடங்களுக்கும் எமது பேரவையின் தலைமைச் செயலரும் எழுத்தாளருமான ந. இரவீந்திரனுடனும் யாழ்ப்பாணத்திற்கு 'தாயகம்' ஆசிரியர் க. தணிகாசலத்துடனும் இ.கா.கணபதிப்பிள்ளையுடனும் (சூடாமணி) சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்கள். இத்தருணத்தில் பிற ஈழத்திலக்கியப் பிரமுகர்களும் எம்முடன் சேர்ந்து ஒத்துழைத்து உதவி புரிந்தமை இன்பகரமான நிகழ்வாகும்.

இச்சுற்றுப்பயணத்தின் நிறைவாக தமிழகம் சென்ற கோமல் சுவாமிநாதனின் விருப்பிற்கிணங்கவும் தமிழகத்தின் பிரபல பதிப்பாசிரியர் எம். பாலாஜி அவர்களின் ஆலோசனையின்படியும் ஈழக் குறுநாவல் போட்டியினை நடாத்தும் முயற்சியில் சுபமங்களாவுடன் தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து செயற்பட்டது.

இப்போட்டியில் முதற்பதிப்பு பெற்ற இந்நாவல் 1995ல் சுபமங்களாவில் தொடர்ந்து பிரசுரமாகியது. தற்போது ஏழு வருடங்களின் பின்பே இந்நூலை வெயிடும் வசதி வாய்த்துள்ளது.

இச்சமயத்தில் எழுத்தாளர் செ. குணரத்தினம் அவர்களுக்கும் இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய கொழும்பு தமிழ்ச் சங்க இலக்கிய செயலாளரும் கவிஞரும் எழுத்தாளருமான த. கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்) அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக கொள்கிறோம்.

அட்டைப்படம் வரைந்த கவிஞரும் ஓவியரும் பத்திரிகையாளரும் சட்டத்தரணியுமான இரா. சடகோபன் அவர்களுக்கும் கணனி வடிவமைத்த சோபனா, சிந்தியா ஆகியோருக்கும், இந்நூலை அச்சிட்டு வழங்கிய கௌரி அச்சகத்தினருக்கும், திரு. எஸ். இராஜரட்ணம் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

விமர்சனங்களை வரவேற்கிறோம்.

தேசியகலை இலக்கியப் பேரவை
இல. 44, 3-ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி
கொழும்பு - 11, தொலைபேசி : 335844.



படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

துன்ப அலைகளின் மத்தியில் துவண்ட ஒரு குடும்பத்தின் கதைதான் இந்த நாவல்.

குழம்புக்கறிக்கு மணமூட்டப் போடப்படும் கறிவேப்பிலையாக கற்பனை கலந்து எழுதப்பட்ட உண்மைச் சம்பவம் இது.

எனது குடும்பத்தின் கதைதான். என்றாலும் இது உங்கள் கதையாகவும் கூட இருக்கலாம். நம் நாட்டில் உண்டான இனக்கலவரம் பல அழிமதிகளை இழைத்துவிட்டபோதிலும், எழுத்தாளனாகிய எனக்கு ஏதோ ஒரு வகையில் இலக்கிய உலகில் ஒரு தகுதியையும், பணப் பரிசையும் இந்த நாவலினூடாக தந்திருக்கிறது.

இலங்கையின் வடகிழக்கில் உண்டான பல துயரச் சம்பவங்களில் ஒரு சிறு நிகழ்வை இந்நாவலின் மூலம் நான் வெளிக் கொண்டு வந்திருக்கிறேன்.

தேசிய கலை இலக்கியப் பேரவையும், தமிழ்நாடு 'சுபமங்களா' இலக்கியச் சஞ்சிகையும் நடாத்திய குறுநாவல் போட்டியில் இந்நாவல் முதற் பரிசைப் பெற்றது எனக்கு மகிழ்வைத் தந்தது.

இன்று அழிந்து தரைமட்டமாகிக் கிடக்கின்ற ஒரு கிராமம் நாளை எப்படியோ புதுப்பொலிவோடு மிளிர முடியும். ஆனாலும் அக்கிராமத்தின் பழைய இயற்கை எழிலும், வனப்பும், சூழலும், மக்களின் வாழ்வு, கலை, கலாசாரமும் அப்படியே இருக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆகவே அந்தக் கிராமம் முன்பு எப்படி இருந்தது என்பதை பின்னால் வரும் சந்ததியினரும் அறிந்து கொள்ள வைப்பதில் நாவல் இல்கிகியம் முக்கிய பங்காற்றுகிறது.

இந்த வகையில் 'துன்ப அலைகள்' ஒரு காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளை படம் பிடித்திருக்கிறது. என்று நம்புகிறேன். இதை வாசகர்களும் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்நாவலின் பரிசளிப்பு விழாவன்று சுபமங்களா ஆசிரியரும், பிரபல எழுத்தாளருமான கோமல் சுவாமிநாதன் அவர்கள் நேரடியாகவே வந்து எனக்கு பரிசளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தும், அது முடியாமற் போயிற்று.

அன்னாரின் திடீர் மரணத்தால் அது சாத்தியப்படவில்லை. இது எனது துர் அதிஷ்டமே. எவ்வாறாயினும் தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர் 'வல்லிக் கண்ணன்' அவர்கள் பரிசளித்து என்னை மகிழ்வித்தார்.

இந்த நாவல் நூலாக வெளிவர வேண்டும் என்பதில் மிக்க ஈடுபாடு கொண்டு உழைத்த கொழும்பு தேசிய கலை இலக்கியப் பேரவையின் அமைப்பாளர், சட்டத்தரணி சோ. தேவராஜா அவர்கட்கும், சிறப்பானதொரு அணிந்துரையை எழுதி தந்த 'செங்கதிரோன்' த. கோபாலகிருஷ்ணன் அவர்கட்கும் மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.


3ம் குறுக்குத்தெரு,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

இப்படிக்கு,
அன்புடன்,
செ. குணரத்தினம்.




படிப்பகம்

www.padippakam.com

## முன்னுரை

செய்யுள்களாலான காவியங்கள்/காப்பியங்கள் எனப்பட்ட மரபு இலக்கிய வடிவங்களிலிருந்து கூர்ப்படைந்து உரைநடை இலக்கியமாகப் பரிணமித்ததே நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல். ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சி - அச்சுப்பொறி அறிமுகம் - ஆங்கிலமொழி இலக்கியப் பரிச்சயம் என்பனவே தமிழில் நாவல் இலக்கியம் எழ ஏதுவாகின. 18ம் நூற்றாண்டில் ஆங்கிலமொழியில் உருவான நாவல் (Novel) ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழுக்கும் அறிமுகமாகிற்று என்பதே தமிழில் நாவலின் தோற்றத்தை அறிவுபூர்வமாக ஆராயும் எவருக்கும் எட்டும் முடிவு ஆகும். ஆனால் கி.பி. 2ம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரமே முதல் தமிழ் நாவல் எனக்கூறும் எழுத்தாளர் அகிலனின் கருத்தைச் சார்ந்தவர்கள் இதனை மறுத்தல் கூடும்.

எது எப்படியிருப்பினும் இந்தியாவில் மாயூரம் ச. வேதநாயகம்பிள்ளை எழுதிய ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ (1879) தான் தமிழில் எழுந்த முதல் நாவல் எனப் பரவலாகப் பேசப்படுகிறது. அதேபோன்று ஈழத்தின் முதல் தமிழ் நாவல் 1890இல் வெளிவந்ததும் திருகோணமலையைச் சேர்ந்த திரு.எஸ்.இன்னாசித்தம்பி என்பவரால் எழுதப்பட்டதுமான ‘ஊசோன் பாலந்தை கதை’ என்பதே இலக்கிய உலகில் இதுவரை பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் எஸ்.அகஸ்தியர் எழுதிய ‘ஒரு நூற்றாண்டின் இரு நாவல்கள்’ (1988) எனும் நூலில் அறிஞர் ஜனாப்.சித்திலெப்பை எழுதி 1885ல் வெளிவந்த ‘அசன்பே சரித்திரம்’ தான் ஈழத்தின் முதல் தமிழ் நாவல் எனக் கூறுகின்றார். தமிழறிஞர் மு. கணபதிப்பிள்ளை அவர்களோ சில்லையூர் செல்வராஜன் எழுதிய ‘ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி’ (1967) எனும் நூலுக்கு வழங்கிய முன்னுரையில் ‘மூர்’ என்பவர் இயற்றி யாழ்ப்பாணத்தில் 1856இல் வெளிவந்த ‘காவலப்பன் கதை’ என்ற



படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பு நாவலே தமிழகத்திலும்/ஈழத்திலும் எழுந்த முதல் தமிழ்நாவல் எனும் தகவலைத் தருகிறார்.

ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள் மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் நாவல்களாகவும் அரச அல்லது மேல்தட்டுவர்க்க கதைகளைக் கொண்டதாகவும் அமைந்து பின் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களின் தாக்கங்களுக்கு உட்பட்டு அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் சாதாரண மனிதவாழ்க்கைப் பிரச்சினைகளைச் சித்தரிக்கும் சமூக நாவல்களாகப் பரிணமித்துள்ளமையை நாம் பார்க்கலாம். பின்பு குறித்த ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பாரம்பரிய நடத்தைகள், அவர்களின் சமகால வாழ்க்கைப் பிரச்சினைகள்/அனுபவங்களை அப்பிரதேசப் பேச்சுமொழியில் சித்தரிக்கும் பிரதேசநாவல்கள் அல்லது மண்வாசனை நாவல்கள் எனும் வருகை நிகழ்கிறது. அந்த வகையிலே இந்தியாவில் கொங்குநாட்டுக் கிராமத்தின் மண்வாசனை கமழும் வண்ணம் மணிக்கொடி எழுத்தாளர்களில் ஒருவரான ஆர்.சண்முகசுந்தரம் எழுதிய 'நாகம்மாள்' (1942) நாவலே தமிழில் தோன்றிய முதலாவது பிரதேச நாவல் என அறியப்படுகிறது.

இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் கோமல் சுவாமி நாதனின் 'சுபமங்களா' இலக்கிய ஏடும் இணைந்து நடாத்திய ஈழக் குறுநாவல் போட்டியில் ரூபா. பத்தாயிரம் முதற்பரிசு பெற்று சுபமங்களா செப்டம்பர் 1995இலிருந்து டிசம்பர் 1995 வரையிலான இதழ்களில் பிரசுரமான கவிஞர்.செ.குணரத்தினம் (இலக்கியமணி) அவர்களின் இந்த 'துன்ப அலைகள்' நாவலை பிரதேச நாவல் எனும் வகைக்குள்ளே வைக்கலாம். இலங்கையின் கிழக்குமாகாணத்தின் மட்டக்களப்பு பிரதேச நாவல்களில் ஒன்றாக இதன் வரவைப் பதிவு செய்யலாம்.

மட்டக்களப்பு பிரதேசம் என்பது வடக்கே வெருகல் ஆற்றையும், தெற்கே குமுக்கன் ஆற்றையும், கிழக்கே வங்காள



படிப்பகம்

விரிகுடாக் கடலையும், மேற்கே ஊவாவலைக் குன்றுகளையும் அதாவது தற்போதைய மட்டக்களப்பு-அம்பாறை நிர்வாக மாவட்டங்கள் இரண்டையும் உள்ளடக்கிய நிலப்பரப்பேயாகும். 1961ல் முன்னைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பட்டு புதிதாக அம்பாறை மாவட்டம் உருவாக்கப்படும் வரை தற்போதைய அம்பாறை மாவட்ட நிலப்பரப்பு முன்னைய மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதியாகவே உள்ளடங்கியிருந்தமை மனங்கொள்ளத்தக்கது.

மட்டக்களப்பு பிரதேசம் வடகிழக்கின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான கலாசார/ பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், மரபுகளையும், பழக்கவழக்கங்களையும் கொண்டதாகும். மட்டக்களப்பு பிரதேச முதல் நாவல் 1934ல் வெளிவந்ததும் மட்டக்களப்பு தாமரைக்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட வே. ஏரம்பமுதலி என்பவரால் எழுதப்பட்டதுமான 'அரங்கநாயகி' ஆகும். Sriwalter Scot என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட Kenilworth எனும் கதையின் தழுவலான இந்நாவலை மட்டக்களப்பின் முதல் நாவல் எனக் கொள்ளலாமே தவிர 'பிரதேச நாவல்' எனும் வகைக்குள் இதனை வைத்துப் பார்க்க முடியாது.

ஈழத்தில் தமிழ் நாவலின் தோற்றம் 1856ல் அல்லது 1885ல் அல்லது 1890ல் நிகழ்ந்ததெனக் கொண்டாலும் கூட மட்டக்களப்பில் சுமார் அரைநூற்றாண்டின் பின்னர்தான் அதாவது 1934ல் தான் முதல் தமிழ் நாவல் வெளிவருகின்றது. ஆங்கிலமயமாக்கம் மட்டக்களப்பு மண்ணைச் சற்றுப் பிந்தித்தான் பீடித்தது இதற்குக் காரணம் எனலாம். ஈழத்து தமிழ் நாவல்களைப் பொறுத்தவரை பிரதேச/மண்வாசனை 1940களிலிருந்தே வீசத் தொடங்கிற்று என்பதே நா.சுப்பிரமணியம் ('ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்')அவர்களது கூற்று. ஆனால் மட்டக்களப்பைப் பொறுத்தவரை அத்தகைய போக்கு 1970களின் பின்பே தான் புறப்படத் தொடங்கியது.

www.padippakam.com

அந்தவகையில் மட்டக்களப்பு படுவான் கரைக் கிராமமான கன்னன் குடாவைக் களமாகக் கொண்டு எஸ்.ஸ்ரீ.ஜோண்ராஜன் படைத்த 'போடியார் மாப்பிள்ளை' (1976); வாழைச்சேனை எனும் ஊரைக் களமாக வைத்து வை.அஹ்மத் ஆக்கிய 'புதிய தலைமுறைகள்' (1976); காத்தான்குடியைச் சேர்ந்த ஜுனைதா ஷெரீப் (ஜனாப். K.M.M.ஷெரீப்) எழுதிய 'சாணைக்கூறை' (1985); செ.குணரத்தினத்தின் நூலுருப்பெற்ற முதல் நாவலான 'தெய்வ தரிசனம்' (1988); திமிலைத்துமிலன் (S.கிருஸ்ணபிள்ளை) எழுதிய 'மஞ்சு நீ மழைமுகில் அல்ல' நாவலின் 1ம், 2ம் பாகங்கள் (1988/91); மட்டக்களப்பு பிரதேசத்தின் ஆரையம்பதிக் கிராமத்தைக் கதை நிகழும் களமாகக் கொண்ட அன்புமணி (இரா.நாகலிங்கம்) எழுதிய 'ஒரு தந்தையின் கதை' (1989); மட்டக்களப்பு அமிர்தகழி முகத்துவாரப் பகுதியினைக் களமாகக் கொண்டு ஏ.கே.குணநாதன் எழுதிய 'ஊமை நெஞ்சின் சொந்தங்கள்' (1992); திமிலைமகாலிங்கம் (எஸ்.தங்கவேல்) எழுதிய 'அவனுக்குத்தான் தெரியும்' (1995); கல்லடியைக் களமாக வைத்து சுமதி அற்புதராஜா படைத்த 'புதிய பாதை' (குறுநாவல் - 1990); இவற்றுடன் புலம்பெயர்ந்த எழுத்தாளரான திருமதி.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களால் அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட 'தில்லையாற்றங் கரையிலே'; அக்கரைப்பற்றைச் சேர்ந்த அ.ஸ.அப்துல்ஸமது எழுதிய 'பனிமலர்' ஆகியவற்றையும் குறிப்பிடலாம். ரவிப்பிரியாவின் (V.K.ரவீந்திரன்) 'ஒரு வானவில் ரோஜாவாகிறது' (1989); மண்டூர் அசோகாவின் 'பாதை மாறிய பயணங்கள்' (1992) என்பன மட்டக்களப்பிலிருந்து வெளிவந்திருந்தவையெனினும் மட்டக்களப்பு பேச்சுவழக்கு இவற்றில் கையாளப்படவில்லை. மட்டக்களப்பின் பேச்சுவழக்கினை நாவல்களில் நன்கு கையாண்டவர்களில் செ. குணரத்தினம் அவர்களே முதன்மையானவர். இந்தப் பின்னணியில் இனி நாம் இந்த 'துன்ப அலைகள்' நாவலுக்குள் நுழையலாம்.

* * *



படிப்பகம்

www.padippakam.com

'துன்ப அலைகள்' நாவல் மட்டக்களப்பு வாவி வங்காள விரிகுடாக் கடலுடன் கலக்கின்ற கழிமுகத்தையொட்டிய கிராமமொன்றினை (அதுவே நாவலாசிரியரின் கிராமமும் கூட) கதை நிகழும் களமாகக் கொண்டது. கடல் அலைகள் மோதும் கரையை அண்டிய அம்மக்களின் வாழ்க்கை துன்ப அலைகள் மிகுந்ததாக காணப்படும் கருத்தை நாவலின் தலைப்பு உள்ளடக்கியிருப்பது கதை நிகழும் களத்தோடு பொருந்துகிறது. பெரிய பீடிகையொன்றுமில்லாமல் 'கிழக்கு வெளுத்ததோ இல்லையோ, காக்கைகளின் பூபாளம் கேட்கத் தொடங்கியது' என நாவல் ஆரம்பிக்கப்படும்போதே கதை நிகழும் களம் திரைப்படம் போல் நம் கண்முன்னே விரிவது போன்றதோர் தோற்றப்பாட்டினை ஏற்படுத்துவது இந்நாவலின் ஆற்றோட்டமான மொழிநடைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

ஆக்க இலக்கியப் படைப்பாளி தனது படைப்பிற்கான கருவை இரண்டு வகையாகப் பெறுகிறான். ஒன்று கற்பனை, மற்றது தனது சொந்த வாழ்க்கை அனுபவங்களினூடாகப் பெறுகிறான். இந்நாவல் நாவலாசிரியரின் வாழ்க்கை அனுபவங்களினூடாகப் பிரசவிக்கப்பட்டதாகும்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. புரையோடிப்போன இலங்கையின் இனப்பிரச்சனையானது 1983இன் பின் போராக வெடித்தபோது மட்டக்களப்பு மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுத்திய அவலங்களை இந்நாவல் சித்தரிக்கின்றது. அரச பாதுகாப்பு படையினரின் திடீர் சோதனைகள், வழமையான சோதனைச் சாவடிகளில் நிகழும் பாதுகாப்பு கெடுபிடிகள், சுற்றி வளைத்துத் தேடுதல், ஊரடங்கு சட்டம், ஹர்த்தால் இவற்றால் அப்பாவி மக்கள் அடைந்த அவலங்களைக் காட்டும் குறியீடாக பூபாலனின் குடும்பம் வார்க்கப்பட்டுள்ளது.

எளிமையான மொழிநடை, சிறிய வசனங்கள், பாத்திரங்களின் யதார்த்தமான உரையாடல்கள், மட்டக்களப்பு



படிப்பகம்

www.padippakam.com

பிரதேச பேச்சு வழக்குப் பயன்பாடு, சிறிய அத்தியாயங்கள் மூலம் நாவல் நகர்த்தப்படுவது நேர்த்தியானது. எளிமையான இயற்கை வர்ணனையும், காட்சி வர்ணனையும் நன்கு எடுபடுகின்றன. (உ +ம்) 'நிலவு கடலின் அடிவானத்தில் தங்கத்தாம்பாளமாக தலையை நீட்டிப் பார்த்தது'. (அத்தியாயம் – 05)
'கச்சான் காற்றின்வேகம் சற்று அதிகரிக்கத் தொடங்கியது. தென்னை மரங்களெல்லாம் பேயாட்டம் ஆடின. கிணற்றடியில் குலை தள்ளிப் போய் நின்ற வாழைமரம் நிலத்தில் விழவா? விழவேண்டாமா? என்று கேட்பதைப் போல மேலும் கீழும் சாய்ந்தாடியது'. (அத்தியாயம் – 12).

மட்டக்களப்பு பேச்சுவழக்குப் பயன்பாடு நாவலுக்கு உயிர்ப்பை அளிக்கிறது. (உ+ம்) 'இதென்ன நாசமறுப்படா இது! நாள் குறஞ்சாலும் வெடிக்குக் குறைச்சலில்ல! ஒவ்வொரு நாளும் மனிசனப் போட்டு வதைக்காம ஒரே நாளில எல்லாரையும் வந்து சுட்டுப் பொசுக்கிப் போட்டுப் போகலாமே! ஆரச் சுடுறெண்டும் தெரியா, என்னத்த உடைக்கிறதெண்டும் தெரியா! ஒவ்வொரு நாளும் இதே கோதாரிதான்' என்று புறுபுறுத்தாள் மாலதி. (அத்தியாயம் – 07).

* 90க்குப் பின்னர் நாட்டின் இனப்பிரச்சினை காரணமாக பொலநறுவைக்கு அப்பால் மட்டக்களப்பிற்கான புகையிரத சேவை நிறுத்தப்பட்டமை.
* இந்திய அமைதிப் படை வந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.
* போராளி இயக்கங்கள் பலவந்தமாக இளைஞர்களைப் பிடித்து இயக்கங்களில் சேர்த்தமை.
* பெற்றோருக்குத் தெரியாமல் பிள்ளைகள் ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்குச் சென்றமை.
* "நம்ம ஊரிலும் அந்த நாளைய எம்.பி.மாரெல்லாம் இருந்தவங்கதான். இப்பவும் இருக்கிறாங்கதான். ஒரு மண்ணாங்கட்டியும் செய்யல்ல. செத்துப்போனான் அந்த மனிசன் நல்லையா. அவர் காலத்திலதான் இந்த தொழிற்சாலை (வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை



படிப்பகம்

www.padippakam.com

- இத்தொழிற்சாலையில்தான் பூபாலனுக்கு வேலை) கட்டுப்பட்டது'' (அத்தியாயம் 06) எனும் உரையாடல் மூலம் 1943/47ல் மட்டக்களப்பு தெற்கு தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சட்ட சபை உறுப்பினராகவும், 1947/56ல் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும்/தபால், தகவல் அமைச்சராகவும் விளங்கிய அமரர் வல்லிபுரம் நல்லையா அவர்கள் ஆற்றிய சேவைகள்.

ஆகிய விடயங்கள் இந்நாவலில் பதிவு செய்யப்படுகின்றன.

'அணுங்காட்டம்' சுருட்டியது - (அத்தியாயம் 01)

'குழந்தைப்பிள்ளையாட்டம்' பூபாலன் படுக்கையில் கிடந்து உருண்டபோது ... - (அத்தியாயம் 01)

பிள்ளைகளெல்லாம் பூபாலனைக் கண்டதும் சட்டென வாயடைத்து 'பூனைக்குட்டியாட்டம்' குசினிக்குள்ளிருந்து பார்வையை வேறுபக்கம் திருப்பினார்கள் - (அத்தியாயம் 06)

போன்ற மட்டக்களப்பு பிரதேச பேச்சு வழக்கிலுள்ள உவமைச் சொற்றொடர்களும்,

பூபாலனுக்கு 'முழிசாட்டம்' பிடித்துக்கொண்டது-(அத்தியாயம் 09)

* ஒரு 'உம்பாரம்' சூரமீன் - (அத்தியாயம் 10)

* 'சுணங்கினால்' மீன் நாறினாலும் நாறிப்போகும். மாலதியும் கொம்புவாள் - (அத்தியாயம் 11).

* இதென்ன 'பஞ்சமாபாதகமான கதை' -(அத்தியாயம் 13).

போன்ற சொற்பிரயோகங்களும், நாவலில் மட்டக்களப்பின் மண்வாசனை கமழச் செய்கின்றன.



படிப்பகம்

மேலும், சம்பவ விவரிப்புக்கள் நாவலின் கருப்பொருளோடு கச்சிதமாய்ப் பொருந்தும்படி அமைந்திருப்பதும் ஓர் சிறப்பு. (உ+ம்) இடுக்காட்டை ஊடறுத்துச் செல்வதுபோல தொழிற்சாலை பஸ் நடுக்கத்தோடு போய்க் கொண்டிருந்தது. பூபாலனின் விழிகள் மாத்திரமல்ல அங்கிருந்த அனைவரது விழிகளும் ஆமை முட்டைக்கண்களாக - உயிர்களை அவரவர் மடிக்குள் வைத்து பொத்திப் பிடித்தபடி அப்படியே தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வழக்கமான கலகலப்பு, சலசலப்பு எதுவும் பஸ்ஸில் இருக்கவில்லை. ஒரு சாண் வயிற்றுக்காக அவர்களது எண்சாண் உடம்பையும் அடக்கி ஒடுக்கிக்கொண்டு மூச்சுவிடக் கூடப் பயந்து நேரே றிங்கோ றோட்டில் ஓடும் பஸ்ஸுக்குள் அவர்கள் பிரயாணம் செய்வதைப் பார்த்தால் பரிதாபமே உண்டாகும் (அத்தியாயம் - 09).

இந்நாவலைக் காய்தல் உலத்தலின்றி நடுநிலை விமர்சனப் பார்வையுடன் நோக்கும்போது பின்வரும் விடயங்களையும் குறிப்பிடுவது இலக்கிய தர்மம் ஆகும்.

மொத்தம் 17 அத்தியாயங்களில் இந்நாவல் அமைந்திருக்கிறது. முதல் 12 அத்தியாயங்கள் வரை இயல்பான ஓட்டத்துடன் மாறாவேகத்தில் செல்லும் நாவல் இறுதி அத்தியாயங்களில் சற்று ஆர்முடுகலுடன் செல்வதால் இறுதி அத்தியாயங்களில் கதை சொல்லும் பாணியில் விபரணத்தன்மை விரவிக் கிடக்கிறது. நீண்ட நாவல் ஒன்றிற்குரிய கால இடைவெளியும், சம்பவங்களும், விடயங்களும் குறுநாவலாகக் குறுக்கப்பட்டதன் விளைவாக இது ஏற்பட்டிருக்கக்கூடும்.

சிறந்த புனைகதையொன்றிற்கு அது சிறுகதையாயிருந்தாலென்ன அல்லது நாவல்/ குறுநாவலாயிருந்தாலென்ன அதன் நிறைவு அப்படைப்பிற்கு மகுடம் சூட்டியது போல வார்த்தைகள் அமையுமாறு இருக்கவேண்டும். இந்நாவலின் உள்ளடக்கம் தலைப்பிலேயே உட்கிடைக்கையாக அமைந்துள்ளபோது

அத்தலைப்பிற்கு மேலும் விளக்கம் அவசியமற்றது. எனவே இந்நாவல்... ''அவள் (மாலதி) கதறிய பரிதாபத்தைப் பார்க்க முடியாமல் அந்தக் கடலலைகளும் கரையை மோதியடித்து ஒப்பாரி வைக்கத் தொடங்கின''.
என்ற வரிகளுடன் நிறைவுபெற்றிருக்குமாயின் இன்னும் சிறப்பாயிருக்கும். தலைப்புக்கு விளக்கம் தருமாற்போல தொடர்ந்து வந்த 'இந்தக் கடலலைதான் ஒருவேளை ஓய்ந்தாலும் அப்பாவி மனிதர்களின் துன்ப அலைகள் எப்போதுமே ஓய்வதில்லை'. எனும் வரிகளைத் தவிர்த்திருக்கலாம் என்பது எனது எண்ணம்.

எனினும் நாவலின் ஏனைய நல்ல அம்சங்களுடன் ஒப்பு நோக்குகையில் இவ்விரு குறைபாடுகளும் பெரிதுபடுத்தப்பட வேண்டியனவல்ல.

'கிழக்கின் வாழ்வு தனித்துவமானது. அங்கு நிலவும் சமூக அமைப்பும், தொழில் முறைகளும் உறவு முறைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் வாழ்க்கை முறைகளும் ஏனைய பிரதேசங்களிலிருந்து வித்தியாசமானவை. அவற்றை ஊனோடும் உதிரத்தோடும் தரும் ஆக்கங்கள் இதுவரை அங்கிருந்து வராதிருப்பது பெருங்குறையே. அது உங்கள் வெளியீட்டின் மூலம் நீங்குமென எதிர்பார்க்கிறேன்' என கூறி கலாநிதி. சி. மௌனகுரு அவர்கள் 1988இல் மட்டக்களப்பு உதயம் வெளியீட்டாளருக்கு அவர்கள் தம் சேவையைப் பாராட்டி எழுதிய கடிதத்தில் ஆதங்கப்பட்டிருந்தார். (ஆதாரம்- 'பண்பாடு' பருவ இதழ் 8 - இதழ் 1 - 1998 சித்திரை - 19வது இதழ் - இந்துசமய- மலர், கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு - பக்கம் 36 - றூபி வலன்ரீனா பிரான்சிஸ் - 'மட்டக்களப்பு பிரதேச நாவல்கள்' கட்டுரை) அவரது ஆதங்கத்தை ஓரளவு 'துன்ப அலைகள்' குறுநாவல் ஈடுசெய்கிறது என்பது எனது எண்ணம்.

மேலும், இத்'துன்ப அலைகள்' குறுநாவலை 'மட்டக்களப்பு பிரதேச/மண்வாசனை நாவல்' என வகைப்படுத்தினாலும் கூட இதன் உள்ளடக்கமானது ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு

www.padippakam.com

பதம் என்பதுபோல இலங்கையின் இனப்பிரச்சினை தோற்றுவித்த போர்க்காலச் சூழலில் வடகிழக்கு மாகாணத்தில் அப்பாவி மக்கள் படும் அவலங்களைச் சித்தரிக்கும் ஓர் பொதுமையையும் கொண்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

செ. குணரத்தினம் அவர்களின்,

1. 'நினைவொன்று நிறைவேறுகிறது' (1981) - தினகரனில் பிரசுரம்
2. 'தெய்வ தரிசனம்' * (1988) - உதயம் வெளியீடு மட்டக்களப்பு இந்துசமய, கலாசார அமைச்சின் பரிசு பெற்றது. யாழ் இலக்கியவட்டம் இவ்வாண்டின் சிறந்த நாவலாகத் தெரிவு செய்தது.
3. 'அலைகடல் ஓய்ந்தாலும்' (குறுநாவல்) - கொழும்பு மெய்கண்டான் ஸ்தாபனம் 'கலாவல்லி' சஞ்சிகை நடாத்திய போட்டியில் பரிசு பெற்றது.
4. 'துருவங்கள் இணைகின்றன'- வீரகேசரி எழுத்தாளர் ஆண்டுப் போட்டியில் பரிசு பெற்றது.
5. 'நிம்மதியைத் தேடி' (குறுநாவல்) - அமரர் கனக. செந்திநாதன் நினைவுப் போட்டியில் பரிசு பெற்றது.

*6. 'சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்' * (1990) (குறுநாவல்) உதயம் வெளியீடு, மட்டக்களப்பு

7. 'தூரத்து நட்சத்திரங்கள்' (1997)- தினகரன் தொடர்கதை



படிப்பகம்

www.padippakam.com

8. ‘மின்னல் சிரிப்பு’ (1997) - மித்திரன் வாரமலரில் பிரசுரம்

9. ‘நீ போகும் பாதையெல்லாம்’ - தினகரன் தொடர்கதை

10. ‘கலைந்த மேகங்கள்’ (1999)- வீரகேசரி நடாத்திய தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்றது.

*11. ‘ஒரு கிராமம் தலை நிமிர்கிறது’*(2001) - தமிழ் நாடு மணிமேகலைப் பிரசுரம்

ஆகிய நாவல்/குறுநாவல்களின் வரிசையில் இத் ‘துன்ப அலைகள்’ குறுநாவல் 12வது படைப்பாகும். நூலுருப் பெறுபவற்றுள் இது 4வது இடத்தைப் பெறுகிறது.

எந்தவிதமான கலை, இலக்கிய கோட்பாடுகளையும் வரித்துக் கொள்ளாமல் கட்டுப்பாடின்றியும் ஓயாமலும் தொடர்ந்து தனது வாழ்க்கை அனுபவங்களை இலக்கியப் படைப்புகளாக வடித்துக் கொண்டிருக்கும் இலக்கியவாதியான நண்பர் செ. குணரத்தினம் தனது எழுத்தின் யதார்த்தத்தை இவ்வாறு ஏற்றுக்கொள்பவர்.

‘முத்துக்குளிப்பவன் கண்ணில்படும் எல்லாச் சிப்பிகளையும்தான் நீரில் மூழ்கி எடுக்கிறான். அவற்றில் முத்துச் சிப்பிகளும் இருக்கும். வெறும் சிப்பிகளும் இருக்கும். முத்தை எடுத்துவிட்டு மற்றவைகளை வீசிவிட வேண்டியதுதானே. அதேபோல்தான், எனது எழுத்துக்களையும் இலக்கிய உலகு எடுத்துக் கொள்ளட்டும்’ என்கிறார். எவ்வளவு பக்குவப்பட்ட பார்வை அவருடையது. இலக்கியச் செருக்கற்ற ஓர் சிறந்த படைப்பாளியான செ. குணரத்தினம் அவர்களுக்கு இத் ‘துன்ப அலைகள்’ குறுநாவல் இலக்கிய உலகில் நிச்சயம் ஓர் இடத்தை தேடிக் கொடுக்கும் சிறந்ததொரு படைப்பாகும். ஈழத்தின் சிறந்த பிரதேச/ மண்வாசனை நாவல்களென சிலாகித்துப் பேசப்படும்



படிப்பகம்

www.padippakam.com

பாலமனோகரனின் 'நிலக்கிளி'; செங்கையாழியான் க. குணராசா அவர்களின் 'காட்டாறு'; அமரர் அ.ஸ.அப்துல்ஸமதுவின் 'பனிமலர்'; அமரர் வ.அ.இராசரத்தினத்தின் 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' வரிசையில் செ. குணரத்தினம் அவர்களின் 'துன்ப அலைகள்' குறுநாவலும் நின்று நிலைக்கும் என்பது நிச்சயம். இந்நாவலுக்கு முன்னுரை எழுதக்கேட்ட நாவலாசிரியர் நண்பர் செ. குணரத்தினம் அவர்களுக்கும் இந்நூலை வெளியிடும் இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த நண்பர் சோ. தேவராஜா அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

* நூலுருப் பெற்றவை

த. கோபாலகிருஸ்ணன்
(செங்கதிரோன்)

97 'சி', ஹம்டன் ஒழுங்கை
கொழும்பு - 06.
01-06-2002.



படிப்பகம்

www.padippakam.com



# 1

கிழக்கு வெளுத்ததோ இல்லையோ காக்கைகளின் பூபாளம் கேட்கத் தொடங்கியது.

'நிலவு வெளிச்சத்தைக் கண்டாலும் இந்தக் காகங்கள் கத்தும்தானே!' என்று தனக்குள்ளேயே தீர்ப்புச் சொல்லித் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு பூபாலன் படுக்கையில் திரும்பிப் படுத்தான்.

வியர்வை தாங்காமல் தென்றலின் வருகைக்காகத் திறந்து வைத்திருந்த ஜன்னலின் ஊடாக ஜில்லென்று குளிர்காற்று வந்து பூபாலனை அணுங்காட்டம் சுருட்டியது. அவ்வளவுதான் டாண்! டாண்! என்று சுவர்க் கடிகாரம் ஐந்து முறை பூபாலனின் முதுகில் சவுக்கடி கொடுத்தைப் போல அடித்து ஓய்ந்தது.

www.padippakam.com



'சைக்! இண்டைக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமையாக இருக்கக் கூடாதா?' என்று அலுத்தபடி குழந்தைப் பிள்ளையாட்டம் பூபாலன் படுக்கையில் கிடந்து உருண்ட போது தூரத்தில் வெடிச் சத்தமொன்று கேட்டது. தட்டுத்தடுமாறி மெல்ல எழுந்து மண்டப லைற்றைப் போட்டான். 'ஸ்விச்' வேலை செய்தது. வெளிச்சம்தான் பல்ப்போடு கோபித்துக் கொண்டது. ஒரு வாரத்தில் ஐந்து நாட்களுக்கு கரண்ட் 'கட்'டாவது இப்போது வழக்கமாகி விட்டது.

"மாலதி ! மாலதி !"

பூபாலனின் குரல் கேட்டதும், அவள் திடுக்குற்று கண்களைத் திறந்து கொண்டாள்.

"ஆண்டவனே நானும் அயத்து மறந்து கிடந்துத்தன் நல்லாவிடிஞ்சி பொயித்து" என்றபடி அவசர அவசரமாக மண்டபக் கதவைத் திறந்து கொண்டு குசினியை நோக்கி விரைந்தாள் மாலதி.

பிள்ளைகளோடும் வீட்டு வேலைகளோடும் கிடந்து இரவு பகலாக மாரடிக்கும் அவளைப் பார்த்த போது பூபாலனுக்கு வாய் விட்டுக் கதறி அழவேண்டும் போலிருந்தது.

"மாலதி, நேரம் பொயித்து ! இண்டைக்கு மாத்திரமாவது உண்ட கையக் கால வெச்சித்து சும்மாகிட! லைற்றும் இல்லாத நேரம். நான் வீரசாமிட புண்ணியத்தில் 'கன்டினி'ல் எதையாவது பார்த்துக் கொள்ளுவன்".

பூபாலன் கிணற்றடிக்கு ஓடிப் போனான். எவ்வளவுதான் கோபதாபம் என்றாலும் காலை மதியச்சாப்பாட்டைக் கட்டி கணவனின் கையில் கொடுத்து விட்டு அவன் வேலைக்குப் போவதை கடைக்கண்களாலாவது பார்த்து ஆறுதல் அடைவதில் மாலதி என்றுமே தவறியதில்லை. இன்று கணவனுக்குத் தேநீர் கூட வைத்துக்கொடுக்க முடியாமல் போய் விட்டதே என்பதை நினைத்துப் பார்த்தபோது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

"தேத்தண்ணியாவது வெச்சித்தாறன். குடிச்சுத்துப் போங்களன்". அவள் பேச்சுக்குக் காது கொடுக்காமல் பூபாலன் மளமளவென்று வெளிக்கிட்டுக் கொண்டு, சைக்கிளைத் தள்ளினான்.

"ஐடிண்டிக்காட், சீசன் டிக்கெட்டெல்லாம் எடுத்துத் தீங்களா?" அவசரத்தில் இவைகளை எடுக்க மறந்து போயிருப்பாரோ என்ற சந்தேகம் அவளுக்கு.

"எல்லாம் இருக்கு."



படிப்பகம்

www.padippakam.com



பூபாலன் றோட்டு வாசற் கதவைத் திறக்கும்போதே இளைய மகனும் மகளும் நித்திரை மயக்கம் தெளிந்தது பாதி தெளியாதது பாதியாக ஓடி வந்து "அப்பா டட்டா!" என்றார்கள் அவர்கள் வழக்கமாக டட்டா சொல்வார்கள்தான். ஆனால் அன்று 'அப்பா' 'டட்டா' என்ற இரு சொற்களுக்கும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்தே சொன்னார்கள்.

இரவு பத்து மணி வரை நாளைக்கு எடுக்கப் போகும் 'சம்பள அரியர்ஸ்' பணத்தில் எதையெதை வாங்கலாம், என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றியெல்லாம் பூபாலனும், மாலதியும் பிள்ளைகளை வளைத்து வைத்துக் கொண்டு பேசிய பேச்சின் எதிரொலிப்புத்தான் இந்த அப்பா-டட்டாவுக்கு சின்னஞ் சிறுசுகள் கொடுத்த அழுத்தம் என்பதை பூபாலன் மாத்திரமல்ல, மாலதியும் புரிந்து கொண்டாள்.

பூபாலன் பிள்ளைகளுக்கு பதிலுக்கு 'டட்டா' சொல்லி விட்டு சைக்கிளில் ஏறும்போது "அப்பா எனக்கு சட்டை" என்றாள் ரதி. "அப்பா எனக்கு ஏ.கே-47" என்றான் ராமு. பூபாலன் சிரித்தபடியே தலையை மட்டும் ஆட்டிக் கொண்டு விரைந்தான்.

மாலதிக்குப் புகைவண்டியை நினைக்க நினைக்க ஆத்திரமாத்திரமாக வந்தது. "எப்போதுதான் இந்தப் புகைவண்டி மீண்டும் ஓடப் போகிறதோ? எப்போதுதான் ஆறுதலாக எழுந்து, கட்டுச் சோற்றைக் கட்டி அவர் கையில் கொடுத்து அனுப்பப் போகிறேனோ?" என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள். அவளுக்கு கணவன் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் உபத்திரவங்களையெல்லாம் அவன் வாயால் அவளுக்குச் சொல்லக் கேட்டதன் பிரதிபலிப்புத்தான் இது பெருமூச்செறிந்தபடி வளவிற்குள் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு மாலதி வந்தபோது பூபாலன் சென்ற பக்கம் துப்பாக்கி வேட்டுக்களின் மளமளப்புகள் பெரிதாகக் கேட்கத் தொடங்கின. அந்தளவில் மாலதி ஓடிச்சென்று வீட்டுச்சுவரில் தொங்கிய பிள்ளையார் படத்தின் முன்னால் கும்பிட்டபடி நின்றாள். கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.



படிப்பகம்

www.padippakam.com



# ௨

விடிந்தும் விடியாத கலங்கல் பொழுது. பூபாலனின் சைக்கிள் 'கிண்ணறம்' பாடியது. எதிர்ப்பட்ட வளைவு சுழிவுகளை நிமிர்த்தி நேர்ப் பாதையில் சைக்கிளைத் திருப்பியபோது சற்றுத் தூரத்தில் காக்கிச்சட்டைகளின் வேலி போல தெரிந்தது. வெடிச்சத்தங்கள் கேட்ட திசை வேறு. இந்தக் காக்கிச்சட்டைகளின் ஊர்வலம் வரும் திசை வேறு.

"ஆண்டவனே, மாசம் முடிய இன்னும் ஐந்து நாட்கள்தான் இருக்கின்றன! இன்றைக்கு இவர்கள் கையில் அகப்பட்டு 'வஸ்'ஸைத் தவற விட்டு விட்டால்.... 'அற்றன்டன்ஸ்' காசுக்கு அதோ கதிதான்! இந்தப் பணத்தை நம்பித்தானே மனைவிக்குத் தெரியாமல் 'செக்ஷ'னில் சீட்டுப் புடிக்கிறன். ம்... என்ன செய்யலாம்?"

பூபாலனின் மூளை பலமாக வேலை செய்தது. ஏதோ ஒரு முடிவை அவன் எடுத்து முடிப்பதற்குள்ளாகவே சைக்கிள் கிர்ரென... ஓடிப் போய் காக்கிச் சட்டைக்காரார்களின் முன்னால் நின்றது.

www.padippakam.com



"அந்தப் பக்கம் போய் நில்!'' என்று ஒருவன் உலுக்கிச் சொன்னான். அதைக் கேட்டுக் கொண்ட பூபாலன் 'ஐடின்டிக் காட்'டை எடுத்து நீட்டி, "மாத்தையா, நான் பேப்பர் கோப்பறேஷனில் வேலை!'' என்றான். "பேப்பர் கோப்பறேஷன்'' அவனுக்குத் தெரிந்திருந்தது. "பேப்பர் கோப்பறேஷன் வேலையா? சரி சரி போ நீ!'' என்றான். பூபாலனுக்கு வெளியே போன மூச்சு மீண்டும் உள்ளே வந்தது. நேரத்தைப் பார்த்தான். ஆறு இருபத்தி நாலு! 'இண்டைக்கு வஸ்ஸப் புடிச்சாப்லதான்! புட்போட்டிலே கூட இடமிருக்காது! கடவுளே! கடவுளே!' என்றபடி நெஞ்சு படபடக்க சைக்கிளை வேகமாகச் செலுத்தினான். வழக்கமாக சைக்கிளை வைத்துப் பூட்டும் தேநீர் கடைக்குப் போய்ச் சாத்தி விட்டு பஸ்ஸில் ஏறவும் அந்தப் பஸ் மெல்ல நகரவும் நேரம் சரியாகவே இருந்தது.

புட்போட்டில் நிற்பதற்கென்றே சிலர் புட்போட்டைக் குத்தகைக்கு எடுத்ததைப் போல அங்கே நின்றார்கள். ஒரு மாத போனஸ் பணத்தை மேலதிகமாகக் கொடுத்தாலும் பூபாலனுக்கு புட்போட்டில் நிற்க மனமில்லை. மெதுவாக நழுவி நழுவி பஸ்ஸின் நடுப் பகுதிக்கு வந்து நின்றான். ஏற்கனவே விழுந்தடித்துக் கொண்டு நேரகாலத்திற்கு வந்தவர்களெல்லாம் சீற்றில் ஹாயாக அமர்ந்திருந்தார்கள். சில இடங்களில் கைலேஞ்சிகளும் பேக்குகளும் கூட இருந்தன. பெண் தொழிலாளியாக இருந்திருந்தால் பூபாலனுக்கு கண்டிப்பாக இடம் கிடைத்திருக்கும். என்ன செய்வது ? தலைவிதியென்று வெளவாலாக கம்பியில் தொங்கிக் கொண்டான்.

நாட்டின் இனப் பிரச்சினை காரணமாக பொலநறுவைக்கு அப்பால் மட்டக்களப்புப் பகுதிக்கான புகையிரத சேவை நிறுத்தப்பட்டிருந்தது. புகை வண்டி ஓடாமல் விட்டதால் பூபாலனைப் போல பல ஆண் தொழிலாளிகள் சீற்றில்லாமல் இப்படி வெளவால்களாகத் தொங்க வேண்டிய பரிதாப நிலை. நேரத்திற்கு வந்து இடம் பிடித்தாலும் வந்தாறு மூலைக் 'கேம்'போடு நிற்க வேண்டியதுதான். 'செக்கிங்'கிற்காக இறங்கி மீண்டும் அடிபட்டு ஏறும் போது இருக்கைகள் பறிபோய்விடும். பெண்களுக்கு ஆண்கள் பாவமென்று இடம் கொடுப்பதை அவர்கள் 'மிஸ்யூஸ்' பண்ணுவதும் அவர்கள் மாத்திரம் இருந்து



படிப்பகம்

www.padippakam.com



பிரயாணம் செய்தால் போதும்; ஆண்கள் அவர்கள் முதியவர்களாக இருந்தால்தான் என்ன என்று சுயநலமாக நடந்து கொள்வதும் கொஞ்சம் ஓவர் போலவே பூபாலனுக்கு மனதில் பட்டாலும் அவன் அதை வெளியில் சொல்வதில்லை. அவர்களுக்கும் 'மனஸ்' இருக்க வேண்டுமே! 'மியூசிக்கல் செயார்' போட்டி போல சீற்பிடிப்பதில் பெண்களுக்கெல்லாம் ஒரு அலாதிப் பிரியம். 'பெக்ரறி பஸ்' சரியாக ஏழு முப்பத்தைந்திற்கு காகித ஆலையைப் போய் முட்டியதும் எல்லோரும் போல பூபாலனும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். பெக்ரறிக்குள் கால் வைத்ததுமே சம்பள 'அரியஸ்' கொடுப்பனவின் மணம் கமகமவென மூக்கைத் துளைத்தது.

பூபாலன் 'காப்பென்ட'ராக பெக்டரியில் சேர்ந்து உழைத்து முதல் முதல் எடுக்கப் போகும் கூடுதலான அரியஸ் நாலாயிரம் ரூபா இதுதான். 'இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் என்ன செய்வது?'

மனைவி, பிள்ளைகளின் ஆசாபாசங்களுக்கு இந்த நாலாயிரம் போதுமானதா? கூரை வீட்டுக்கு ஓடு போடுவதா? அல்லது மனைவிக்கும் மக்களுக்கும் உடுபிடவை வாங்குவதா? அல்லது மக்கள் வங்கியில் அடவுவைத்த நகைகளை மீட்டெடுப்பதா? -பலத்த யோசனையோடு பூபாலன் அவனுடைய செக்ஷனுக்குப் போய்ச் சேரும்போதே அவனுக்காக ஒரு ரெலிபோன் ஹோல் காத்துக் கொண்டிருந்தது. என்னவோ? எதுவோ? என்று நடுங்கியபடி ஓட்டத்தில் சென்று ரெலிபோன் றிஸீவரை பூபாலன் தூக்கினான்.

"மகன் ராகவனைப் பிடித்துக் கொண்டு கேம்பிற்குப் போகிறார்கள். உடனே திரும்பி வரவும்." இதுதான் அந்த ரெலிபோனில் வந்த செய்தி. தந்தி அடிப்பது போல சொல்லப்பட்டது. குரலுக்குரியவர் யார் என்பது கூடப் புரியவில்லை. கேட்கவும் மறந்து போனான். பூபாலனுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. இதற்கிடையில் காகித ஆலையெங்கும் இச்செய்தி பரவி விட்டது. பூபாலன் செக்ஷனில் போய் விசயத்தை சொல்லி லீவைப் போட்டுக் கொன்டு வந்த வழியே திரும்பினான். அவனுக்கு கண்கள் பஞ்சடைந்த நிலை.



படிப்பகம்

www.padippakam.com



கால்களை அவனா தூக்கி வைத்தான்? இல்லை அவனிடம் கேட்டுக் கொள்ளாமலேயே கால்கள் நடக்கின்றனவா? உருவேறியவனைப் போல நடந்தான். ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் சக தொழிலாளர்கள் பூபாலனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மகன் ராகவனை விடுவிக்க வேண்டிய சிலபல வழிகளையும் அவர்கள் சொல்லாமலில்லை. தொழிலாளர்களின் உண்மையான அன்பையும், பாசத்தையும் நேருக்கு நேர் பார்த்த போது, பூபாலன் ஒரு வினாடி தன் மகன் பிடிபட்டதையே மறந்து போனான். பஸ்ஸில் இடம்பிடிக்கும் போது காணப்படும் அவசரமும், சுயநலமும் இப்போது எவரிடமும் இல்லாது இருந்தது. என்னதான் இருந்தாலும் தொழிலாளர்கள் யாவரும் ஒரு குடும்பம்தான். அவர்கள் வெளியிலே சில சந்தர்ப்பங்களில் பாராமுகமாக நடந்து கொண்டாலும், மதிப்பு, மரியாதைகளைச் செலுத்த மறந்தாலும், ஒரு தொழிலாளிக்கோ, அல்லது அவன் குடும்பத்திற்கோ ஏதும் நடந்து விட்டால் சும்மா இருக்கவே மாட்டார்கள். துடிதுடித்துப் போவார்கள்.

குடும்பத்தில் அண்ணன், தம்பி, தங்கைகளுக்குள் பிரச்சினை ஏற்படுவதில்லையா? ஆனாலும் சட்டென அந்தக் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு வேறு யாரும் ஏதாவது செய்துவிட்டால், ஒரு கயிற்று நாயாட்டம் அவர்கள் ஓரணியில் திரண்டு போர்க்கொடி உயர்த்துவதில்லையா? அதைப்போல சக தொழிலாளர்களெல்லாம் பூபாலனைச் சூழ்ந்து நின்று அவனுக்கு ஆறுதல் மொழி சொல்லி, அவனைத் தேற்றி அனுப்புவார்கள்.

அன்றைய லீவு நாள், அற்றன்டன்ஸ் பணம் எல்லாம் வீணாகப் போனதைப் பற்றி அவனால் எண்ணிப் பார்க்கத்தான் முடியுமா? எண்ணுவது நடக்காமல் விடுவதும் எண்ணாததொன்று நடப்பதும்தான் உலக நியதியாயிற்றே!

அவசர அவசரமாக பூபாலன் வீட்டிற்கு பெரும்பாடுபட்டுச் சென்றபோது, ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தன. முற்றத்தில் ஊரவர்கள் குழுமி நின்றார்கள். அவன் விறைத்தபடி அப்படியே நின்றான்.

# 3

பூபாலன் முற்றத்தில் கூடிநின்ற சனக் கும்பலை விலத்திக் கொண்டு எட்டிப் பார்த்தான். அங்கே மாலதி தலைவிரி கோலத்தில் அழுதபடியிருந்தாள். பூபாலனுக்கு ஒரு சந்தேகம்! 'கேம்'பிற்குக் கொண்டு சென்றது இவளையா அல்லது ராகவனையா? மாலதிக்குப் பக்கத்தில் சிரித்தபடி இருக்கிறானே ராகவன்!

பூபாலனைக் கண்டதும் மாலதி எழுந்து நின்றாள்.

"இண்ணைக்கு ராகவனுக்கு நூறு வயது! மாமாங்கப் பிள்ளையார்தான் காப்பாத்தியிருக்கார்" என்றாள் அவள். அதைக் கேட்டதும் பூபாலன் மாலதியை மாத்திரமல்ல ராகவனையும் நெருப்புப் பொறி தெறிக்கப் பார்த்தான்.

'டேய் ராகவா நீ இண்டைக்குப் பள்ளிக்குப் போகல்லையாடா?"

"இல்ல..... ஹர்த்தாலாமெண்டு.... ஸ்கூலுக்கு ஒருத்தரும் வரல்லப்பா."

"உன்ன எங்க வச்சிடா ஆமிக்காரனுகள் புடிச்சவனுகள்?"

"இவடத்த நம்மட ஊட்டடியிலே வெச்சித்தான்." இதைக் கேட்டதும் பூபாலன் சன்னதம் கொண்டு சீறினான்.

www.padippakam.com



“டேய் உன்னைத் துலச்சிப் போடுவன் துலச்சி! ஆத்துக்குள்ள பொடிகளோட சேந்து நீச்சலடிக்கக்கதானேடா உன்ன அவனுகள் புடிச்சவனுகள்! உனக்கு எத்தின தரம்டா நான் சொல்லியிருக்கன். பள்ளிக்குப் போகாட்டி ஊட்டிலேயே கிடண்டு! உன் கொம்மாக்குத்தான் மூள இல்லாட்டியும் உனக்குமாடா இல்ல? ஏன்டா நீங்களெல்லாருமாச் சேர்ந்து என்னைச் சித்திரவத செய்யிறயள்?”

வந்த ஆத்திரத்தையெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்ட பூபாலன் முற்றத்தில் கூடி நின்றவர்களையெல்லாம் நன்றியோடு பார்த்தான்.

“சரி சரி விட்டுப் போட்டு நடக்கிறதப் பாருங்க! எப்படியோ ராகவன் ‘கேம்’பிற்குப் போய்த்தப்பி வந்ததே பெரிய காரியம். இந்த நாளையில நம்ம பிள்ளகுட்டிகள் எங்கிருந்தாலும் தப்ப ஏலாது. அவன் பொடியனும் நல்லாப் பயந்து பொயித்தான். மேலும் பயம் காட்டாம இதோட மறந்து போயிருங்க!” என்று முற்றத்தில் நின்ற பக்கத்து வீட்டுகார மாணிக்கம் சொன்னதும் பூபாலன் மேற்கொண்டு பேசாமல் விறாந்தைப் படிக்கட்டில் ஏறி நின்றான். அந்தளவில் குசலம் விசாரிக்க வந்தவர்களும் உண்மையிலேயே அனுதாபம் கொண்டு வந்தவர்களும் புதினம் பார்க்க வந்தவர்களும் மெல்ல மெல்லப் பிரிந்து சென்றார்கள்.

கலைந்து போய்க் கிடந்த கூந்தலை ஒழுங்காகக் கட்டிக் கொண்டு மாலதி பூபாலனுக்குப் பக்கத்தில் வந்தாள்.

“வேலைய விட்டுப் போட்டு நீங்கள் வீட்டோட வந்து கிடவுங்க. எனக்கு இந்தப் பிள்ளைகளோட காலம் தள்ள ஏலாது! இதுகளோட கத்திக் கத்தி என்ர அடிவயிறெல்லாம் பச்சப் புண்ணா நோகுது” என்று மாலதி முறைப்பட்டுகொண்டதும் பூபாலன் எதுவும் பேசாமல் விறாந்தையின் ஓரமாகக் கிடந்த சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்து கொண்டான். அவனையுமறியாமல் பெருமூச்சுப் பறந்தது.

“மாலதி இன்னும் ஆறேழு வருஷம்தான் நான் பெக்ரறியில வேலை செய்வன். அதுக்கு முதல் வேலைய விடுறதப் பத்தித்தான் யோசிக்கிறன். இஞ்ச வந்துதான் என்னால் என்ன செய்து கிழிக்கேலும்? பெக்ரறி வேலையில்லாட்டி



படிப்பகம்

எங்களால பிழைக்க முடியாதா? என்று வீரம் பேசி விலகிப்போனவனுகளெல்லாம் படுறபாட்ட நான் நேரிலயே கண்டிருக்கன். அதனால அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கிறது சரியில்ல. நம்மட புள்ளைகளில் ஒன்றாவது நான் வேலையை விட முதல் ஏதாவதொரு தொழில்ல சேந்துத்தா பிறகு நிம்மதியா வேலைக்கு முழுக்குப் போட்டுத்து கழிவுக்காசெடுத்து வங்கியில போட்டுத்து குந்திக் கொள்ளலாம். அதுக்கும் இப்ப நாட்டு நிலம சரியில்ல. பயந்து பயந்து சீவிக்க வேண்டியிருக்கு. இப்படியான நிலையில நாம எப்படிப் பிள்ளைகளக் கண்டிக்கலாம்? நம்ம பிள்ளைகள்ற வயதில நாமெல்லாம் இப்படியா பெட்டிப் பாம்பாகச் சீவிச்சம்? விளையாடுற வயசில விளையாடம படிக்கிற வயசில படிக்காம அதுகள் படுற கஷ்டங்களைப் பார்த்தால் அடிக்கிறதுக்கு ஏசிறதுக்கு மனம் வருமா? ஆத்திரத்தில ஏசிறதுதான் அடிக்கிறதுதான். பிறகு அத நினைச்சி மனவருத்தப்படாமலும் இருக்க முடியல்லயே!

பூபாலனின் காலடியில் குந்தியிருந்து மாலதி எதையோ சிந்தித்தபடி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“நான் இண்டைக்குச் சரியாப் பயந்து போனன்! பஞ்சமாபாதகனுகள் என்ர புள்ளைய நாயக் கட்டித்துக் கொண்டு போனதப் போலெல்லோ என்ர கண்ணுக்கு முன்னாலேயே இழுத்துக் கொண்டு போனானுகள். நான் ஓடிப் போய் பிறின்சிப்பலிட்ட கடிதத்த வாங்கிக் கொண்டுபோய் கேம்புக்கு குடுக்கிறதுக்கு முன்னாலேயே தம்பிய விட்டுத்தானுகள். நல்லவேள பிள்ளைக்கு அடிக்கல்லையாம். என்ர பிள்ளைக்கு என்னவும் நடந்திருந்தால் நான் பிறகு.... என்று எதையோ சொல்ல வந்த மாலதி சற்று நிறுத்தி விட்டு உங்களுக்கு இன்னொரு புதினம் தெரியுமா? இவன் சின்னவன் முத்தல் ராமு ஓடிவந்து என்ர அண்ணைக்கட்டியிழுத்துப் போறவனுகளச் சுடப் போறன்! நல்லம் நல்லம் இண்டைக்கு அப்பா துவக்கு வாங்கி வரட்டும்! என்றான். எனக்கு வந்த துக்கத்தில் இவன்ட கதையைக் கேட்டுச் சிரிக்காமலும் இருக்க முடியல்ல!”

“சரி சரி அந்தக் கதையள விட்டுத் தள்ளு! நான்

www.padippakam.com



வரக்குள்ள எல்லாத்தையும் கேட்டறிஞ்சிதான் வந்தனான். என்ன செய்யித. ஆண்டவன் என்ன நினைக்கிறானோ அதன் படிதான் எல்லாம் நடக்கும். அது சரி எங்க சின்னவன் ராமு ரதியாக்களக் காணல்ல?'' என்றபடி அங்குமிங்கும் பார்த்தான் பூபாலன்.

''ரெண்டு பேரையும் பாதுகாப்பாக இவர் விதானையார்ர பொஞ்சாதிட்ட விட்டுப் போட்டுத்தான் கேம்புக்கு ஓடினனான். இனித்தான் போய்க் கூட்டி வரவேணும்'' என்று சொல்லிய மாலதி பூபாலனை ஒரு மாதிரியாகப் பார்த்து ''அரியஸ் எவ்வளவு போல கிடச்சிது?'' என்று ஆவலோடு கேட்டாள்.

''இந்தச்சிக்கலுக்குள்ள உனக்கு அரியஸ் நினைப்பு வேற இருக்கா? தம்பி பிடிப்பட்டதக் கேட்டதுமே எனக்கு எல்லாம் மறந்து பொயித்து. நாளைக்குப் போய்த்தான் எடுக்க வேணும். அது கிடக்கட்டும் போய்ச் சோத்தக் கறிய ஆக்கு. இண்டைக்கு ஊட்டுச் சாப்பாடெண்டு எழுதிப் போட்டான் ஆண்டவன்!''

''ஏன் இவ்வளவு நாளும் கடச்சாப்பாட்டையா சாப்பிட்டனீங்க? உங்கட புதினக் கத!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு மாலதி குசினிப்பக்கம் நடந்தாள். அப்போது ராகவன் பூனை போல மெல்ல எழுந்து நடந்து வீட்டிற்குள் போயிருந்து ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்தான். அதை அவதானித்த பூபாலன் ''இவங்கட படிப்பும் இவங்களும். இவங்கட வாத்திமாரும்! என்ர பிள்ளைகளையும் குஸ்திக்கரணம் போட்டாவது வாத்தி வேலைக்குத் தான் படிப்பிச்சுட வேணும்! வாத்திச் சம்பளமெண்டும் ரியூசன் சம்பள மெண்டும் எவ்வளவு காசத்தான் அள்ளுறானுகள். பாடசாலையில இந்த வாத்திமாரெல்லாம் ஒழுங்காப் படிப்பிச்சா ஏன் பிள்ளைகள் ரியூசன் ரியூசனெண்டு ராப்பகலா அலைய வேணும்?'' என்று அன்றைய சம்பவத்துக்கு சம்பந்தமில்லாமல் புறுபுறுத்தபோது மாலதி குசினிப்பக்கமிருந்து அங்கே வந்தாள். அவள் வந்த வரத்தில் அசைந்து குலுங்கிய அங்கங்களின் வனப்பு ஒரு கணம் பூபாலனை எதையெதையோவெல்லாம் எண்ண வைத்தது. ''என்ன மாலதி?'' என்று அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான். ''கறிக்கு ஒண்டுமில்லை, இவடத்த துறையடிக்குப் போனா ஏதாவது வாங்கிக் கொண்டு வரலாம். அதுதான் சொல்ல வந்தனான்'' என்றாள் அவள்.

பூபாலனுக்குத் திடீரென ஒரு 'ஐடியா' உதயமானது. அடித்



படிப்பகம்

www.padippakam.com



தொண்டையில் "ஏய்! இப்படிக் கொஞ்சம் கிட்டவாவன்!" என்றான்.

மாலதிக்கு அதன் அர்த்தம் புரிந்தது. "என்னத்துக்கு?" என்று முகத்தை வெட்டித் திருப்பி கொடுப்பிற்குள் சிரித்தாள்.

"மாலதி மீன் வாங்க தம்பிய அனுப்பன். நான் உன்னோட ரகசியமாப் பேச வேணும். சின்னதுகளும் வீட்டில இல்லத்தானே!" என்றபடி சடக்கென எட்டி அவள் கையைப் பிடித்து இழுத்தான். அவள் நாணத்தால் முகம் சிவக்க பூபாலனின் கையில் ஒரு கிள்ளு விட்டாள்.

"உங்களுக்கு இன்னும் இளந்தாரி நினைப்புத்தான். மூத்தவன் ஊட்டுக்க இருக்கான்."

"அதுதான் அவன கெதிபண்ணி மீன் வாங்க அனுப்பன்! இந்தச்சந்தர்ப்பத்த விட்டால் உன்னோட தனிமையில ரகசியம் பேச வேற நேரமேது?" "ஏன் இவ்வளவு காலமும் கதச்சது போதாதா?"

"அந்த நாளையப் போல மனம் விட்டு இந்த நாளையில எப்ப கதச்சிருக்கம்? பகலெல்லாம் வேல வேலெண்டு பெக்ரறியிலேயே காலமெல்லாம் ஓடுது. ராத்திரியில படிப்பு! படிப்பு! என்று பிள்ளைகள் வேறு என் உயிரை வாங்குதுகள். இன்றைய நாளை விட்டால் இனி நல்ல சுபநாள் கிடைக்கவே கிடைக்காது மாலதி!" பூபாலனைப் பார்க்க மாலதிக்குப் பாவம் பாவமாக வந்தது. "மெல்லக் கதையுங்கவன்!" என்று பச்சைக் கொடி காட்டினாள். ராகவன் பிடிபட்டதையும் கேம்பிற்குப் போய் வந்ததையும் ஒருகணம் இருவருமே மறந்தார்கள். "தம்பி ராகவா ஓடிப் போய் இவடத்த துறையடியில ஏதாவது பாத்து வாங்கித்துவா ராசா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே பூபாலனை கடைக்கண்ணால் பார்த்து மாலதி சிரித்தாள். "அப்பாடா!" என்றவாறே கால்களை நீட்டி ஹாயாகப் படுத்துக் கொண்டான் பூபாலன். ராகவன் எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் பணத்தை மாலதியிடம் பெற்றுக் கொண்டு சைக்கிளில் கிளம்பினான். அவன் கேற்றைத் தாண்டியிருக்க மாட்டான். பூபாலன் திடீரென எழுந்து மாலதியை இழுத்து வைத்து அணைத்தான். அவ்வளவு தான் "அம்மோ!" என்ற ராகவனின் குரல் பலமாகக்கேட்டது. இருவருமே ஆளையாள் விடுவித்துக் கொண்டு எட்டிப் பார்த்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# 4

துறையடிக்கு மீன் வாங்கப் போன ராகவன் இவ்வளவு விரைவாகத் திரும்பி வருவானென்று பூபாலனும் மாலதியும் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை.

“துறையடிப் பக்கம் கொமாண்டோக்கள் நிக்கிறானுகள்! என்னால போகேலாது!” என்று சொல்லிக் கொண்டே ராகவன் சைக்கிளை உருட்டிக் கொண்டுவந்து குசினியோரம் சாத்தி விட்டு உள்ளே வந்தான்.

“சைக்!”

பூபாலன் கைகளைப் பிசைந்தபடி “இந்த ஆமிக்காரனுகள் எதுக்குத்தான் மனிசன விடுறானுகள்?” என்று இரெண்டுபட்ட கருத்தில் சொல்லி விட்டு மீண்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

“இனியென்ன செய்யிற? கிடக்கிற பருப்பப் போட்டு ஒரு ஆணத்த வெச்சி மத்தியானப் பாட்டச் சரிக்கட்டுவம்” என்று மாலதி ஓரக்கண்ணால் பூபாலனைப் பார்த்துச் சொல்லிக் கொடுப்பிற்குள் சிரித்துக் கொண்டே குசினியை நோக்கி நடந்தாள்.

பூபாலனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சிவந்து போயிருந்த கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டான்.

* * *



படிப்பகம்

www.padippakam.com



பூபாலன் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். வாடகைக் கார் டிரைவராக தொழில் பார்த்த கந்தையாவிற்கும் கமலத்திற்கும் பிறந்த ஒரேயொரு மகன். கந்தையாவிற்கு குடும்பத்தின் மேல் அவ்வளவான அக்கறை கிடையாது. உழைப்பதையெல்லாம் குடித்து வெறி வைத்து விட்டு தினமும் வந்து ரகளை பண்ணுவான்.

அன்றன்று உழைப்பதெல்லாம் அன்றன்றோடு சரி. கந்தையா ஒழுங்காகக் குடும்பம் நடத்தத் தெரியாதவன் என்ற சங்கதி கடவுளுக்குத் தெரியாதா என்ன! அதனால் பூபாலனுக்குப் பிறகு கமலத்தின் வயிற்றில் கந்தையாவின் கரு தங்கவேயில்லை. கந்தையாவிற்குப் புத்தி சொல்லிச் சொல்லி கமலத்தின் முன்னம் பற்கள் கழன்று போனதல்லாமல் வேறெதுவும் நடக்கவில்லை.

''முற்பிறப்பில் செய்த வினையை இந்தப் பிறவியில் இப்படி இவரோடு கிடந்து அனுபவிக்கிறன்!'' என்று கமலம் மனம் புழுங்கி ஆறுதல்பட்டுக் கொள்ளவே அவளால் முடிந்தது.

பெற்றோரில்லாமல் அனாதையாக 'திறேசா கொன்வன்'றில் படித்துக் கொண்டிருந்தபோதுதானே கந்தையாவை அவள் மணம் செய்ய நேரிட்டது. அதனால் அவளுக்கு கணவனான கந்தையாவைத் தவிர அப்போது வேற சொந்தமே இருக்கவில்லை. மகன் பூபாலன் பிறந்த பிறகு அந்தக் கிராமத்தில் உறவென்று சொல்லிக்கொள்ள அவளுக்கு கணவனும், மகனும்தான் இருந்தார்கள்.

பூபாலனாவது பெரிதாக வளர்ந்து படித்து தன்னை மகிழ்விப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். பூபாலன் பட்டம் பதவி பெற்று பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டுமென்று அவள் பெரிய மனக்கோட்டை கட்டவில்லை. சின்னதாகவாவது ஒரு தொழிலில் சேர்ந்து அவள் கண்மூடுவதற்குள் தனக்கொரு கைத்தறிச்சேலையாவது வாங்கித்தரமாட்டானா? என்று ஏங்கினாள்.

காலத்தின் ஓட்டத்தில் பூபாலன் வளர்ந்து பெரியவனானான் என்றாலும் அவன் உடல் வளர்ந்த அளவிற்கு அறிவு வளராமை பூபாலனை மாத்திரமல்ல கமலத்தையும் குழப்பியடித்தது.



படிப்பகம்

www.padippakam.com



நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை என்பதைப் போல சரியாக அவளைப் போலவே ஒன்பதாம் வகுப்போடு பூபாலனின் படிப்பு முடிந்தது. தந்தை கந்தையாவைப் போல பூபாலனும் எதுவித அக்கறையுமில்லாமல் திரிந்ததைப் பார்த்தபோது கமலம் மிகவும் கலங்கிப் போனாள்.

“அடே கெடுவானே! கொப்பனைப் போல நீயும் கூத்துக் காட்டாமல் ஒழுங்காக வாழப் பார்டா!” என்று கமலம் கத்திக் கத்தி ஒருநாள் மூச்சையே விட்டு விட்டாள். கமலம் கண்களை மூடி ஒரு மாதம் கூடக்கடந்திருக்காது. கந்தையா யாரோ ஊர், பேர் தெரியாத ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து “மகனே! இவள்தான் உனக்கு இனிமேல் அம்மா!” என்றான்.

அப்போதுதான் பூபாலனுக்கு ஞானம் ஓரளவு பிறந்தது. தாய் இறந்தபோது அழுததை விட மோசமாக அன்று மூலைக்குள் குந்தியிருந்து ஒப்பாரி வைத்தான்.

இதையெல்லாம் அவதானிக்கக்கூடிய நிலையில் கந்தையா இருக்கவில்லை. பூபாலனின் முன்னாலேயே புதிதாகக் கட்டிக் கொண்டு வந்தவளை இழுத்து கொண்டு போய் வீட்டிற்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான். தலைகெட்ட வெறி அவனுக்கு. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பூபாலன் அங்கு வாழ விரும்பவில்லை. வெறுப்போடு வெளியேறியவனை கந்தையாவின் தாய்க்கிழவி - அப்பம்மா, ஆதரவோடு அழைத்து அரவணைத்துக் கொண்டாள்.

வயது ஏறி விட்டது. இனிமேல் படிக்க முடியாது. படித்தாலும் அவனைப் பொறுத்தளவில் ஏறவேயேறாது. கிழவி எடுக்கும் பிச்சைச் சம்பளத்தில் எப்படி அவளும் அவனும் சீவியம் நடத்துவது?

பூபாலன் ஆழமாகச் சிந்தித்தான். அவனுடைய எதிர்கால வாழ்விற்காக அவன் தந்தை சிறிதேனும் கவலைப்படாமல் திரிந்ததும் தாய் கமலம் மாத்திரம் படிப்பதற்கு ஓரளவு ஊக்கம் காட்டியதும் சட்டென அவன் நினைவுத் திரையில் வந்து மோதிச்சென்றன. இளமைக் காலத்தை மண்ணாக்கி விட்டோம். வாவென்று அந்தப் பசுமைக் காலத்தை அழைத்தாலும் அது திரும்பி வரப்போகிறதா? இனிமேல் என்ன செய்வது?

www.padippakam.com



எப்படியாவது வாழத்தானே வேண்டும்? துணிச்சலோடு எழுந்தான். கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ‘காப்பென்டர் பயிற்சி’ வகுப்பில் சேர்ந்து ஆறு மாதங்களைக் கடத்தினான். மாதா மாதம் ஏதோ கூலியாகவும் கிடைத்தது. கையோடு ஒரு சேட்டிபிக்கட்டும் இருந்தது.

‘காப்பென்டர்’ றெயினிங்கை முடித்துக் கொண்ட பின், இரண்டு மூன்று வருடங்கள் கிராமத்திலுள்ள வேலுப்பிள்ளை ஓடாவியாரோடு சேர்ந்து ‘முட்டாளாக’க் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தபோதுதான் அவனுக்கு அதிர்ஷ்டவசமாக காகித ஆலையில் இடம் கிடைத்தது. வாழைச்சேனைக் காகித ஆலைக்கு தன் பேரன் வேலைக்குப் போய் வரும் கோலத்தைப் பார்த்து அந்தக்கிழவி சிரித்த சிரிப்பு, தன் தாய் கமலம் இருந்திருந்தால் இப்படித் தானே சிரித்திருப்பாள் என்று பூபாலனை எண்ணத் தூண்டியது.

‘துயரம் வந்தால் தொடர்ந்து வரும். இன்பம் வந்தால் இடைவிடாமல் வரும்’ என்பதில் எவ்வளவு உண்மையிருக்கிறது. பூபாலன் காகித ஆலையில் சேர்ந்து ஒரு வருடத்தை முடிக்கு முன்பே அவன் மாலதியைக் கரம்பிடித்துக் கொண்டான். தூரத்து உறவுதான். பூபாலனுக்கு வேலை கிடைக்கும் வரை தூரத்திலேயே எந்தவித தொடர்பும் வையாமல் வாழ்ந்தவர்கள், காகித ஆலையில் சேர்ந்து உழைக்கும் செய்தியை அறிந்ததும் நெருங்கி வந்தார்கள். இந்த நெருக்கம் அவர்கள் உறவைக் கொஞ்சம் இறுக்கமாக்கி வைத்தது.

மாலதி பூபாலனுக்குத் துணைவியானதும், அவன் பாட்டி மெல்லக் கண்களை மூடிக்கொண்டாள். பேரனை தன்னந்தனியே விட்டு விட்டுப் பிரியக் கூடாதென்று அவள் நினைத்தாளோ என்னவோ?

‘கசுவல்’ ஊழியனாக வேலைக்குச் சேர்ந்த பூபாலன் மாலதியை மணம் செய்து கொண்ட அதிர்ஷ்டம் மிக விரைவாகவே நிரந்தர ஊழியனானான். பிறகென்ன? அவன் குடும்பத்தில் ஒளி மட்டுமா வீசத்தொடங்கியது? மழலைச் செல்வங்களும் அங்கே விளையாடத் தொடங்கின.

இந்த இடைவெளிக்குள் ஒருநாள் பூபாலனின் தந்தையான

www.padippakam.com



கந்தையா குடிவெறியில் காரோட்டிச் சென்று புகையிரதக் கடவையில் சிக்குப்பட்டு இறந்ததும், அவன் கூட்டிக் கொண்டு வந்து வைத்திருந்தவள் தலைமறைவாகி எங்கோ தொலைந்து போனதும் இப்போதும் கூட பூபாலனுக்கு நினைவில் வந்து நின்றாலும், அந்தச் சம்பவங்கள் அவனை அவ்வளவாகப் பாதிக்கவில்லை.

* * *

சாய்வு நாற்காலியில் கண்களை மூடியபடி கடந்தகால நிகழ்வுகளை அசை போட்டுப் பார்த்த பூபாலன், தொடையில் யாரோ பலமாகக் கிள்ளியதும் திடுக்குற்று எழுந்தான். எதிரே மாலதி சிரித்தபடி நின்றாள். பூபாலனைப் பொறுத்தமட்டில் அன்றைய நாள் எல்லாவிதத்திலும் அதிஷ்டமில்லாத நாளாகவே கழிந்தது.

மாலை ஆறு மணியிருக்கும். அந்தக் கிராமத்தில் அவன் போல பெக்ரறியில் வேலை பார்க்கும் தொழிலாளர்களில் சிலர் அவசரமாக சைக்கிளில் ஓடிக் கொண்டிருந்தார்கள். வேலை விட்டு வீட்டிற்குச் செல்லும் அவசரம். ‘சைக்! என்ன சீவியமிது? காக்கைகள் விழிக்குமுன் எழுந்து அவைகள் தூங்கிய பின் வீட்டுக்கு வரும் வேலை! வேலை வேலையென்று காலம் இப்படியே கழிந்து கொண்டிருக்கிறது. ஊரில் ஆரும் இறந்தால் கூடத் தெரிவதில்லை. முழுக் கவனத்தையும் உழைப்பிலேயே ஈடுபடுத்துவதால் ஒரு சாவீடு, கல்யாண வீடென்று போக முடிவதில்லை. இதனால் நெருக்கமான உறவுகள் கூட அந்நியர்களைப் பார்ப்பது போல பார்க்கிறார்கள். இன்றைய நாட்டு நிலமையில் தொழில் உயிருக்கு ஒரு பாதுகாப்பு என்று மட்டும்தான் சொல்ல முடியும். பகல் வேளையில் அவசியமாகவும், அனாவசியமாகவும் அந்த நாட்களைப் போல மாலை ஆறு மணிக்குப் பிறகு எங்குமே போக முடியாது. நம்ம காலம் ஒரு மாதிரியாகக் கழிந்து போய்விட்டது. நம்ம குழந்தை குஞ்சுகள் எப்படித்தான் எதிர்காலத்தில் சீவிக்கப்போகுதுகளோ? எல்லாம் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்?’’ இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது இளைய மகன் ராமு ஓட்டத்தில் வந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



"அப்பா! அப்பா! உங்களைத் தேடிக் கொண்டு ஆரோ வாறாங்க!" பூபாலன் எழுந்து பார்த்தான்.

பெக்ரறியில் அவன் கூட வேலை செய்யும் கோவிந்தனும், குணராசாவும் சைக்கிளைச் சாத்தி விட்டு உள்ளே வந்தார்கள்.

"வாங்க மச்சான் வாங்க! என்ன இப்பதானா வேலையால வாறீங்க?" என்றபடி இருவரையும் கதிரைகளில் அமர வைத்து விட்டு, அவர்களின் முன்பாக பூபாலனும் இருந்துகொண்டான். அப்போது அவர்களில் அரியசின் மணம் மணத்தது.

"மாலதி, இங்க கோவிந்தனும், குணராசாவும் வந்திருக்கிறாங்க. தேத்தண்ணி போட்டுக் கொண்டு வா!" என்று இருந்தபடியே பூபாலன் குசினிக்குள்ளிருக்கும் மாலதிக்குக் குரல் கொடுத்தான்.

"இஞ்ச, எங்களுக்கு ஒண்டும் வேணாம் மச்சான். வரக்குள்ள கொஞ்சம் போட்டுத்தம்" என்று பூபாலனைப் பார்த்து அவர்கள் மெலிதாகச் சிரித்தார்கள்.

"ஓ இண்டைக்கு அரியசெலுவா! நானும் இந்தக் கரச்சலுக்க எல்லாத்தையும் மறந்து பொயித்தன். என்ன அரியஸ் எவ்வளவு போல கிடச்சது?"

"என்ன மச்சான் ஆக மூவாயிரத்து இருநூறு போலதான் எனக்குத் தந்தானுகள். நானும் நாலாயிரத்துக் கிட்டத் தேறுமெண்டு நினைச்சிருந்தன். அத நம்பி நேரத்தோடயே மூவாயிரமளவில கடன்பட்டும் போனன். கணக்கில ஏதோ பிழயிருக்க வேணும். எக்கவுண்டனிட்டத்தான் கேட்டுப் பாக்க வேணும். அவனுகளென்ன கணக்கு வழக்க ஒழுங்காவா பாக்கிறானுகள்? நாளைக்கு எக்கவுண்டன் முன்னால போய் நிண்டுதான் ஒரு கலக்கு கலக்க வேணும்!"

குணராசாவின் வயிற்றுக்குள் போனசாராயம் நன்றாகவே வேலை செய்தது.

அரியஸ் கதை, பூபாலனின் மகன் பிடிபட்டு வெளியே தப்பி வந்த கதையையெல்லாம் எல்லோருமாக அள்ளிப் போட்டு அலசினார்கள். இதற்குள் மாலதி தேநீரைக் கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றாள்.

"இதென்னத்துக்கு எங்களுக்கு இதெல்லாம்?"என்றான் குணராசா.



படிப்பகம்

www.padippakam.com



“குடிங்க! குடிங்க!” என்றான் பூபாலன்.

“லேகியம் போட்டாத்தான் தேத்தண்ணி சரி. சாராயத்துக்கு ஒத்துவராது, முறிஞ்சி பொயித்திரும்” என்று சொல்லிச் சிரித்தான் கோவிந்தன்.

“எனக்கு எவ்வளவு மச்சான் அரியஸ் கிடக்கு?” என்று கேட்டான் பூபாலன்.

“நான் சரியாப் பாக்கல்ல. மத்தவங்கட சம்பளத் தொகையப் பாத்துக் கொண்டே இவன்ட இடத்தில் கையொப்பம் வைக்கிற இவன் கோவிந்தனக் கேட்டுப்பார். அவனுக்குத்தான் தெரியும்” என்று குணராசா ‘நக்கல’டிக்க. அதைப் பொருட்படுத்தாமல் “மச்சான் பூபால், உனக்கு நாலாயிரத்து முன்னூறு போல கிடக்கு. நாளைக்கு உன்ர கணக்கில ஒரு போத்தல் எடுக்கவேணும்” என்று கோவிந்தன் சொல்லி விட்டு எழுந்தான். உடனே குணராசாவும் எழுந்து, “மச்சான் போக்குள்ள ஒரு குத்துக் குத்தித்துப் போவம் என்ன? வீட்ட போனால் அவள் விட மாட்டாள். உழைக்கிற நாம! கணக்குக் கேக்கிற அவள்” என்று சொன்னபோது பூபாலன் உட்பட குசினிக்குள்ளிருந்து மாலதியும் சிரித்துக் கொட்டினாள்.

இருக்கும்போது ஒழுங்காக வைத்திருந்த இருவரது கால்களும் எழுந்து நின்றபோது தள்ளாடின.

“பொழுது பொயித்து. அங்கயிங்க போய் மினக்கிடாம ஊட்ட போங்க நாளைக்குக் கதைக்கலாம், என்று கோவிந்தனையும், குணராசாவையும் வழியனுப்பி வைக்கும்போதே, “மெய்தான், உனக்கொரு குட்நியூஸ் சொல்ல மறந்து பொயித்தம். டே பூபால், நாளையிலயிருந்து பெக்டரிக்கு மீண்டும் றெயின் ஓடப்போகுதாம்” என்றான் கோவிந்தன். அதைக்கேட்ட மாத்திரத்தில் எல்லாக் கவலைகளையும் மறந்து பூபாலன் வாய் திறந்து “மெய்தானா மச்சான்!” என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.



படிப்பகம்

www.padippakam.com



# 5

நிலவு கடலின் அடிவானத்தில் தங்கத் தாம்பாளமாக தலையை நீட்டிப் பார்த்தது. மெலிதான இளம் காற்று சலசலத்தது. இனம் புரியாத ஒரு இனிய உணர்வு எங்கும் பரவியது. பூபாலன் ஆற்றங் கரையோரம் சாய்ந்து நின்ற தென்னை மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு கடல் பரப்பையே பார்த்துக் கொண்டு நின்றான்.

“இந்தக் கடலுக்கும், நிலவுக்கும், காற்றுக்கும் எவ்வளவோ வயதிருக்கும். ஆனாலும் இன்றும் இளமையோடு இனிய சுகத்தை எல்லோருக்கும் அள்ளித் தந்து கொண்டே இருக்கின்றனவே! சுயநலம் பாராத சேவையினாலா இப்படி? ஆனால் மனிதர்கள்?“ பூபாலன் என்றுமில்லாதவாறு அன்று கொஞ்சம் அதிகமாகவே கற்பனை பண்ணினான். இல்லாமை-இயலாமை வரும்போதுதானா மனிதன் கற்பனை பண்ணுகிறான்? அதனால்தானா வறுமையில் வாடும் பலர் கவிஞர்களாய் இருக்கிறார்கள்?

நேரம் மாலை ஆறரை மணியைத் தாண்டியது. கையிலிருந்த குறைச் சுருட்டை ஆற்றுக்குள் எறிந்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பினான்.



படிப்பகம்

www.padippakam.com



தெருக்கதவைத் திறக்கும்போது சின்னவன் ராமு ஓடிவந்து விளையாட்டுத் துப்பாக்கியை நீட்டி ''ஹேஎன்ட்ஸ் அப்'' என்றான். பூபாலன் சட்டென கைகளிரண்டையும் மேலே உயர்த்திப்பிடித்து ''ஐயா, எனக்கு ஒன்றும் தெரியாது. சுட்டு விடாதீர்கள்'' என்றான்.

ராமு விழுந்து விழுந்து சிரித்தான். பூபாலனும் சிரித்துக் கொண்டே ராமுவை அப்படியே குண்டுக் கட்டாகத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, முற்றத்தில் வந்து இறக்கி விட்டான்.

எடுத்த அரியஸ் பணத்தை நினைவூட்டிக் கொண்டிருப்பது ராமுவுக்கு வாங்கிக் கொடுத்த அந்த விளையாட்டுத் துப்பாக்கியும், மனைவி மாலதியின் காதில் கிடந்து மின்னுகின்ற சின்னத்தோடும்தான்.

நட்சத்திரம் விழுந்து எரிந்து சாம்பலாகிப் போனதைப் போல ''அரியஸ்'' பணமெல்லாம் கரைந்து போய்விட்டது. ஏற்கனவே பட்டகடன், மனைவி தனியாகப்பட்டகடன், அது இதுவென்று அரியர்சின் கதை முடிந்து விட்டது.

மனைவி, பிள்ளைகளுக்கு உடுப்பு வாங்கித் தைக்க வேண்டுமென்று கொஞ்சப் பணத்தை அவனிடம் கேட்டு வாங்கிப் பத்திரமாக வைத்திருக்கிறாள். அதில் ஒரு அஞ்சப்பத்தைக் கேட்டு வாங்கினால்தான் சைக்கிள் பின் டயரை மாற்றலாம். அவள் தரவா போகிறாள்? கடலில் போட்ட கல்லைச் சுழியோடி எடுத்தாலும் இவள் கையில் கொடுத்ததை வாங்கமுடியாது. ''ம்... அடுத்த மாதச் சம்பளத்தில்தான் சைக்கிளை ரிப்பேர் பண்ண வேண்டும். என்னைப் போலவே என் சைக்கிளும் கிழவனாகப் போய் விட்டது. அதற்காகவாவது ''பாட்ஸ்'' சாமான் வாங்கலாம். ஆனால் எனக்கு?''

சிந்தித்தபடியே பூபாலன் மண்டபத்திற்குள் ஏறினான். பிள்ளைகள் வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு விரைவாகத்தான் இந்தப் பொழுது ஓடுகிறது? நாளைக்கு விடிவதற்கு முதல் வேலைக்குப் போகவேண்டும். தினமும் ஓடியோடி அலுத்துப் போய் விட்டது. பசியென்று ஒன்று இல்லாது விட்டிருந்தால் சும்மாவே கிடந்திருக்கலாம். இல்லையென்றால் ஆண்டவன் எனக்கொரு சக்தியைத் தந்தால் இரவோடிரவாக வாழைச்சேனைக்குப் போய், தொழிற்சாலையை அப்படியே தூக்கிக் கொண்டுவந்து இந்தக்



படிப்பகம்

www.padippakam.com



கல்லடிக் கடற்கரையில் வைத்து விடலாம்.

"நம்ம ஊரிலும் அந்த நாளையில 'எம்பி'மாரெல்லாம் இருந்தவங்கதான். இப்பயும் இருக்கிறாங்கதான். ஒரு மண்ணாங்கட்டியும் செய்யல்ல! செத்துப்போனான் அந்த மனிசன் நல்லையா. அவர் காலத்திலதானே இந்தத் தொழிற்சாலை கட்டுப்பட்டது. எப்பிடியோ ரெண்டாயிரம் மூண்டாயிரம் குடும்பங்கள் தளப்பமில்லாம இண்டைக்கு வாழுறது அந்த மனிசண்ட தயவால தானே! இதப்போல இன்னும் கனக்க வேணாம். இன்னமொரு தொழிற்சாலை யிருந்தாப் போதும். நம்மட நாட்டில வீணான குழப்படிகள், சண்டைகள் வரவே வராது. சில வேள தம்பி ராகவண்ட காலத்தில உருவாகுதோ என்னவோ...."

"சாப்பிட வாங்க..." - குசினிக்குள் இருந்தபடியே மாலதி குரல் கொடுத்தாள். அவ்வளவுதான். பூபாலனை முந்திக் கொண்டு பிள்ளைகள் எல்லோரும் குசினிக்குள் ஓடினார்கள். பூபாலனும் போய் அமர்ந்து கொண்டான்.

அரைவட்ட வடிவமாக எல்லோரையும் அமர வைத்து மாலதி உணவு பரிமாறினாள். சின்னவன் ராமு, பூபாலனின் பீங்கானையே பார்த்தபடியிருந்தான். அதை அவதானித்த மாலதி, "இஞ்ச ராமு, அப்பாட சோத்துப் பீங்கான ஏன் பாக்கிறா? உனக்கும் வைப்பன்தானே!" என்று அதட்டியபடி மரையிறைச்சி வத்தல் குழம்பை வைத்தாள்.

"ஏன் ஏசிறா! பிள்ளைகளுக்காகத்தானே இந்தச் சூட்டிறச்சபெக்ரறியடியில வெச்சி வாங்கித்து வந்தனான். திண்டுற பிள்ளைகளுக்குத்தான் ஆசயிருக்கும்" என்றவாறே சோற்றைப் பிசைந்தான் பூபாலன்.

"எல்லாருக்கும் முழு இறைச்சியையும் படச்சா உங்களுக்குக் கட்டுச்சோத்துக்க வைக்க நானெங்கபோற? அதோட வாய் பாக்கிற பழக்கம் எனக்குப் புடிக்கிறல்ல!"

"அப்பாட சாப்பாட்டத்தானே பிள்ள வாய் பாக்கிறான். வேறார்ர வாயயுமா பாக்கிறான்? அதோட சின்னப் பிள்ளைகள்!"

"சின்னனும் பெரிசும்! இந்தப் பழக்கம்தான் பெரிசா வளந்தாலும் வரும்!" விட்டுக் கொடுக்காமல் பேசிக் கொண்டே அவள் வேலையில் ஈடுபட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com



"மாலதி, இன்னும் ரெண்டொரு நாளையில திரும்பவும் றெயின் ஓடாமல் நிக்கப் போகுதாம்!"

சாப்பிட்டுக் கையைக் கழுவும் போது, பூபாலன் இப்படிச் சொல்லிக் கொண்டு எழுந்தபோது மாலதிக்கு 'திகீர்' என்றது.

"என்ன இழவுடா இது! ஒரு கிழம பஸ்! ஒரு றெயின்! என்ன கூத்தாம் இது? றெயினுக்கு சீசன் ரிக்கட் எடுத்துப் போட்டு, பஸ்ஸுக்குப் போக பணம் மடியில கட்டி வெச்சிருக்காங்களாமா?"

"ஆரிட்ட ஆர் கேக்கிற? வரவர நாடு மோசமாப் பொயித்து. பென்சன் திட்டமெண்டாலும் சரிவந்திருமெண்டால் உட்டுப்போட்டு வந்திரலாம்!"

"அதுதானே இதென்ன வேலையும் வட்டியும்? நீங்க இனிமே அப்படி றெயின் வந்தா ரிக்கெட் எடுக்காமச் சும்மாவே போங்க!"

"அப்பிடித்தான் சில ஆக்கள் செய்யிறாங்க. நேர்மைக்கு நீதிக்குப் பயந்த நாம அப்பிடிச்செய்யலாமா? அதுக்கு மனம் வேணும்".

"என்ன நீதியும் நேர்மையும்? இப்ப அதுக்குக் காலமில்லை".

"சேச்சே! அப்பிடிச் சொல்லப் போடா ! இண்ணைக்கு நாம எவ்வளவு பிரச்சினைக்குள்ளயும் ஒரு முள்ளுக் கொப்பும் முறியாமச் சீவிக்கிறது நீதி, நேர்மையாக வாழுறபடியாத்தானே!"

பூபாலன் சொல்லியபடியே முற்றத்தில் வந்து உலாத்தினான். மாலதி பிள்ளைகளுக்குச் சாப்பாட்டைக் கொடுத்து விட்டு, அவளும் சாப்பிடத் தயாரானாள். அந்தவேளை யாரோ "பூபாலன் பூபாலன்" என்று கூப்பிட்ட சத்தம் கேட்டது. பூபாலன் தெருவாசல் பக்கம் போய்த் திரும்பி வந்தான்.

"என்னவாம்?" மாலதி கேட்டாள்.

"நாளைக்கு ஹர்த்தாலாம். வேலைக்குப் போக முடியாது!" என்றான் அவன்.



படிப்பகம்

www.padippakam.com



# 6

அடிக்கடி தலையிடி ஏற்படுவதும், அதைத் தணிக்க 'டிஸ்பிறின்' போடுவதும் பூபாலனுக்கு வழக்கம். ஆனால் நாட்டில் அடிக்கடி ஹர்த்தால், ஊரடங்கு என்று ஏற்பட்டால் அவனால் என்ன செய்ய முடியும்?

'வேலைக்குப் போகமுடியவில்லையே' என்ற மன வருத்தம் அவன் முகத்திலும் கோலமிட, அன்று படுக்கையை விட்டெழுந்தான். இன்னும் நன்றாக விடியவில்லை.

'இன்றைக்கு அதிகாலை நேரத்திற்கு எழும்பாமல் ஹர்த்தால்தானே! கொஞ்ச நேரம் நிம்மதியாகப் படுத்துத் தூங்கலாம்' என்று எண்ணியபடி படுக்கையில் கிடந்த மாலதி கணவனின் ஆரவாரத்தைக் கேட்டு மெதுவாக விழிகளைத் திறந்தாள்.

"என்னங்க, இண்ணைக்கு வேலையில்லைத்தானே! ஏன் நீங்க நேரத்தோட ஒழும்பித்து நிண்டு ஆரவாரப்படுறீங்க? ஆறுதலாகப் படுங்கவன். விடியறதுக்கு இன்னும் நேரமிருக்கு!" என்றாள்.



படிப்பகம்

www.padippakam.com



"பழக்கதோசம்! வேலைக்குப் போகாத நாட்களிலும் அதே நேரத்துக்கு வழக்கம் போல எழும்பாமல் இருக்க முடியல்லையே! மாலதி, போன மாதமும் ஒரு ஹர்த்தால் வந்தது தெரியுமா? அந்த ஹர்த்தாலன்று யாருமே வேலைக்குப் போயிருக்க மாட்டாங்கென்னு நானும் நினைச்சிருந்தன். ஆனா அடுத்தநாள் வேலைக்குப் போன பிறகுதான் நம்ம தொழிலாளிகளின் ஒற்றுமையைப் பற்றி அறிய முடிஞ்சிது, என்னைப் போல இரண்டொரு பயந்தாங்கொள்ளிகளை விட மற்றவர்களெல்லாம் வேலைக்குப் போயிருந்தார்கள்!"

"என்ன கதையிது ? வேன் வஸ் ஓடாம எப்பிடிப் போனவங்களாம்?" "சைக்கிள்ள போயிருக்கிறானுகள் மாலதி!"

"நீங்களும் அப்படிப் போயிருக்கலாம்தானே!"

"வாழைச்சேனைக்குச் சைக்கிள்ள அதுவும் இந்தச் சைக்கிள்ள நான் போறதாவது! ரவுணுக்குப் போய் வாறதுக்கிடையிலேயே முப்பத்திரெண்டு தடவைகள் செயின் கழன்று போட்டிருக்கன்".

"அப்ப ஏன் அதப்பத்திக் கதைக்கிறீங்க? சும்மா வந்து படுங்க".

"இனியென்னத்தப் படுக்கிறதும், ஒழும்புறதும்! நீ படுத்துக்கோ. நான் ஒருக்கா றோட்டுப் பக்கம் போய் ஆரெண்டாலும் வேலவட்டிக்குப் போறாங்களாண்டு பாத்தித்து வாறன்".

கதவைத் திறந்து கொண்டு பூபாலன் வெளியேறி நடந்தான். பனிக்குளிர் ஜில்லென்று உடலைத்தொட்டது. மடிக்குள் வைத்திருந்த சுருட்டையெடுத்துப் பற்றவைத்துக் கொண்டான்.

ஆற்றங்கரையின் ஓரமாக சாரைப்பாம்பு போல் நீண்டிருந்த றோட்டில் கால் பதித்தபோது கிழக்கு வானம் சுருட்டுத் தணலாகச் சிவந்திருந்தது. குளிர் தாங்காமல் சூரியனும் சுருட்டுப் பற்ற வைக்கிறானோ? என்று பூபாலன் தனக்குள்ளேயே எண்ணியபடி, சற்று தூரம் நடந்தபோது எதிரே ஒருவரின் சைக்கிளை இரண்டு பையன்கள் மறித்து, வால் கட்டையைப் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



"தம்பிமாரே! நான் வேலைக்குப் போகல்ல, மெயின் வீதியிலுள்ள மின்விளக்குளை அணைத்து விட்டுத் திரும்பி விடுகிறேன்!''என்று அந்த மனிதர் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். பையன்கள் விடுவதாயில்லை.

"இன்றைக்கு ஹர்த்தால், எவரும் வெளியில் வரக் கூடாது! என்று ஒரேயடியாகச் சொல்லி, வால் கட்டையையும் கழற்றி ஆற்றுக்குள் எறிந்தார்கள்.

அவ்வளவுதான், வாயிலிருந்து புகைந்த சுருட்டை லபக் கென கையில் எடுத்துக் கொண்டு பூபாலன் விரைவாக வீட்டிற்குத் திரும்பினான்.

அவன் வளவிற்குள் காலடி எடுத்து வைக்கும்போதே மாலதியும், பிள்ளைகளும் குசினிக்குள் கிடந்து அடிபிடிப்படுவதைப் போல சத்தம் கேட்டது.

"என்னடாப்பா அது சத்தம்?''

"இந்தா நீங்கதான் வந்து கேளுங்க! தேத்தண்ணிக் குள்ளயும் சீனிபோட்டுக் கலக்க வேணும், கையிலயும் அதேயளவு கொடுக்க வேணும்! நானெங்க போறதாம்?''

''சரி சரி, சத்தம் போடாமக் குடுத்துத் துலையன்!'' என்றபடி அங்கே சென்றான் பூபாலன்.

தாயுடன் கட்டிப் புரண்ட பிள்ளைகளெல்லாம் பூபாலனைக் கண்டதும் சட்டென வாயடைத்து, பூனைக் குட்டிகளாட்டம் குசினிக்குள்ளிருந்து பார்வைகளை வேறு பக்கம் திருப்பினார்கள்.

"என்னங்க நிலம் தெளிந்தும் வெகுநேரமாப் பொயித்து. ஒரு காகம் குருவிகளின் சத்தத்தைக் கூட கேட்க முடியல்லையே? அதுகளுக்கும் இப்ப ஹர்த்தால், ஊரடங்கு என்ற விசயமெல்லாம் தெரியும் போல!'' என்று சொல்லிக் கொண்டே தேநீரைக் கலந்து பூபாலனுக்கு கொடுத்தாள் மாலதி.

"நாடு போற போக்கைப் பார்த்தால் நம்மட சீவியம் கன நாளைக்கு இல்லப்போல தெரியுது! ம்......'' என்றபடி தேநீரைக் குடித்து விட்டுக் கோப்பையை அவளிடம் நீட்டினான்.

"இந்தா அப்பா என்ன சொல்லுறாரெண்டு கேளுங்க பிள்ளையள். நாளைக்கு பெக்ரறிய மூடினாத்தான் அதுர அருமபெரும எல்லாருக்கும் தெரியவரும். நம்ம வீட்டு நிலமைய அறியாம உங்கட கதையும், நையாண்டியும்!''

www.padippakam.com



"நீ வேணுமெண்டால் இருந்து பார். பெக்ரறிக்கு மூடுவிழா ஒருநாளைக்கு நடக்கத்தான் போகுது!"

"அப்பிடி நடக்கக்கூடா! அப்படி ஏதுமெண்டால் என் பிள்ளைகள், என் குடும்பம் மாத்திரமா பாதிக்கப்படும்? கிட்டத்தட்ட ரெண்டாயிரம் குடும்பங்கள் வரை தெருவில் நிற்க வேண்டியதுதான்! அப்பிடி வேலையில்லாமப் போனால் நம்ம ஊர்! நம்ம நாடு...?" அதற்கு மேல் சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள் மாலதி.

"மாலதி, இண்டைக்கு எவனும் சைக்கிள்ள கூட வேலைக்குப் போக ஏலாது. நான் பாத்திருக்கவே முனிசிப்பால்டியில வேலை செய்யிற இவன் தருமலிங்கத்தின் சைக்கிள் வால் கட்டைய இரெண்டு வக்கட்டுப் பொடிகள் கழட்டியெறிஞ்சி போட்டானுகள்!"

இப்படி பூபாலன் புதுச் செய்தியைச் சொன்னதும், "இண்டைக்கு நீங்களும் சைக்கிள்ள வேலைக்குப் போகலாமா என்று தானே யோசிச்சீங்க? போயிருந்தால் என்ன நடந்திருக்கும்?"

"என்ன நடந்திருக்கும்? என்ர சைக்கிள் இருக்கிற நிலவரத்தில வால் கட்டையோடு சேத்து றிம், ரியூப்பெல்லாம் வெளியால வந்திருக்கும்!"

இதைக் கேட்டதும் எல்லோரும் கலகலவெனச் சிரித்துக் கொட்டினார்கள்.

சின்னவன் ராமு எப்போதுமே ஒரு சுட்டிப் பயல்தானே! மற்றப் பிள்ளைகளை விட சற்று வித்தியாசமான பேர்வழியும் கூட, மாலதியின் பக்கத்தில் இவ்வளவு நேரமும் குந்திக் கொண்டிருந்தவன் திடீரென எழுந்து பூபாலனின் பக்கம் வந்தான்.

"அப்பா, நீங்க ஒரு நாளும் இனிமேல் வேலைக்குப் போக வேணாம். எல்லாருக்கும் நானே உழச்சித் தாறன்!" என்றான்.

இதைக் கேட்டு மாலதி கொடுப்பிற்குள் சிரித்தாள். பூபாலன் அவனை அணைத்துப் பிடித்தபடி, "மனே நீ சின்னப் பையன். இன்னும் அண்ணாவைப் போல கூடப் படிக்கல்ல. அப்படியிருக்க எப்பிடி ராசா எங்களுக்கு உன்னால உழச்சித்தர ஏலும்?" என்று கேட்க, எல்லோரும் ராமு என்ன சொல்லப் போகிறானோ என்று கேட்கும் ஆவலில் அவனையே பார்த்தபடியிருந்தார்கள்.

"ப்பூ! இதென்ன பெரிய காரியமா? அக்கா டான்ஸ் ஆடுவாள். அண்ணா நல்லாப் பாடுவான். நான் கிழிஞ்ச காச்சட்டையைப் போட்டுக் கொண்டு வீடு வீடாகப் போய் பிச்சை கேட்டு உழச்சி



படிப்பகம்

www.padippakam.com



வருவன்!''

''சோக்கான தொழில்!'' என்று சிரித்தாள் மாலதி.

பூபாலனுக்குச் சற்றுத் தடுமாற்றம் உண்டானது. 'குழந்தைகள் கடவுளுக்குச் சமானமென்று சொல்வார்கள். நாளைக்குச் சிலவேளை தொழிற்சாலையை மூடிவிட்டால் என் பிள்ளைகள் வாழ்வதற்கு சின்னவன் ராமு சொன்னதைப் போல பிச்சையெடுத்துப் பிழைக்க வேண்டிய நிலைதான் வரும். கள்ளம், கபடம் எதுவுமே அறியாத என் பிள்ளைகள் என் கண்ணுக்குப் பிறகு இந்த நாட்டில் எப்படி வாழப் போகிறார்கள்?'

சில நிமிடங்கள் இப்படிச் சிந்தித்துப் பார்த்தபோது மூச்சுத் திணறி வருவது போலிருந்தது. என்றாலும் சுதாரித்துக் கொண்டு ராமுவை அப்படியே அள்ளித் தூக்கிக் கொஞ்சினான்.

''ராமு பிச்சையெடுத்துப் பிழைப்பது ஒரு தொழிலேயில்ல! நன்றாகப் படித்தால் நிறைய உழைக்கலாம். பாடுபட்டு உழச்சிச் சாப்பிடுறதிலதான் மனே உண்மையான ருசி இருக்கும். இந்தா பார்! அப்பா படிக்காததனால்தானே இண்டைக்குக் கிடந்து கஷ்டப்படுறன். சுத்தியலும், வாளும் புடிச்சிப் புடிச்சி கையிரெண்டும் மரத்துப் பொயித்து! உன்ர சின்னக் கையப் பார்! பூப்போல சிவந்து எவ்வளவு மெதுமெதுப்பாயிருக்கெண்டு! நீ வளந்து பெரியவனானாலும் உன்ர கைகள் இப்படியே இருக்க வேணுமெண்டால் நீ நல்லாப் படிச்சி பெரிய உத்தியோகம் பாக்க வேணும்! என்ன?''

அந்தச் சின்னப் பையன் ராமுவுக்கு பூபாலன் சொன்னது புரிந்ததோ என்னமோ ''அப்பா! நான்தான் நம்ம வீட்டில எல்லாருக்கும் முந்தி படிச்சிப் பாஸ் பண்ணி உத்தியோகம் பாத்து உங்களுக்கு உழச்சித் தருவன்!'' என்றான்.

அது நடக்கக் கூடிய காரியமில்லை என்றாலும், அந்தச் சின்ன உள்ளத்திலிருந்து வெளிவந்த உயர்ந்த எண்ணத்தையெண்ணி தனக்குள்ளேயே வியந்து கொண்ட பூபாலன் மண்டபத்திற்குள் செல்லக் காலெடுத்து வைத்தபோது 'பளீர்' என்ற வெடிச்சத்தம் அண்மையில் கேட்டது.

''மாமாங்கரே'' என்று கத்தியபடி மாலதி குசினிக்குள்ளிருந்து வெளியே பாய்ந்தாள். அதைப் பார்த்து ராமு கலகலவெனச் சிரித்தபடி ஒரு துள்ளுத் துள்ளினான்.



படிப்பகம்

www.padippakam.com



# 7

ஹர்த்தால், ஊரடங்குச் சட்டம், அது இதுவென்று காலம் வெகு வேகமாக நரக வேதனையைக் கொடுத்துக் கொண்டே நகர்ந்தது.

இரெண்டு நாட்கள் வேலை, மூன்று நாட்கள் வீடு என்று இப்படியே பூபாலனின் வாழ்நாளும் காலவெள்ளத்தில் இழுபட்டுச் சென்றது.

'எப்போ இந்த நாடு உருப்படப்போகிறதோ, எப்போது பிள்ளை குட்டிகளையெல்லாம் ஒரு கரை சேர்த்து விட்டு ஆறுதலாகக் கண் மூடப்போகிறோமோ' என்று வழமைபோலவே அன்றும் எண்ணிப் பெருமூச்சை விட்டுக் கொண்டான் பூபாலன்.

அவனுடைய காகித ஆலை வேலையைப் போலவே பிள்ளைகளின் படிப்பும் சீரழிந்து கொண்டிருந்தது. பிள்ளைகளை தன் கண்ணோடு படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவரவேணடும் என்ற அவன் எண்ணத்தில் இடியே விழுந்து விடும் போலிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



'நம்ம சமூகத்தில படிச்சித் தலை நிமித்தி நின்ற பெரியவர்கள் அந்தக் காலத்தில விட்ட பிழ இண்டைக்கு நாட்டக் குழப்பிப் போட்டிருக்கு. இது சரிவாறதுக்கு இப்போதைக்கு ஏலாது. இந்த நாட்டில் நாம இனி மேல், மழையும் பெய்யிறதான் தவளையும் கத்திறதான், என்று வாழப்பழகிக் கொள்ள வேணும். அப்படி ஏலாதபட்சத்தில் எல்லோருமாச் சேர்ந்து நஞ்சக் குடிச்சித்துச் சாக வேண்டியதுதான்!'

பூபாலனின் மனம் வேதனையால் துடித்தது. வேலைக்குப் போகாமல் படுத்துப் படுத்து சாய்வு நாற்காலியின் பிரம்புப் பின்னலும் அறுந்து போய்விட்டது.

மாலதி குசினிக்குள் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். மூத்தவன் ராகவனும், மகள் ரதியும் அவரவர் பாட்டிற்கு வீட்டுக்குள்ளிருந்து எதையோ படித்துக் கொண்டிருந்தார்கள்.

பூபாலன் அறுந்து பிய்ந்து போய்க் கிடந்த சாய்வு நாற்காலியில் கையிரெண்டையும் பின்னால் தலைக்கு மேலால் வைத்தபடி படுத்துக் கிடந்தான்.

இளையவன் ராமு முற்றத்தில் நாய்க் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

அவ்வளவுதான், தூரத்தில் படபடவென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

''இதென்ன நாசமறுப்புடா இது! நாள் குறஞ்சாலும் வெடிக்குக் குறைச்சலில்ல! ஒவ்வொரு நாளும் மனிசனப்போட்டு வதைக்காம ஒரே நாளில எல்லாரையும் வந்து சுட்டுப்பொசுக்கிப் போட்டுப் போகலாமே! ஆரச் சுடுறெண்டும் தெரியா, என்னத்த உடைக்கிறதெண்டும் தெரியா! ஒவ்வொரு நாளும் இதே கோதாரிதான்'' என்று புறுபுறுத்தாள் மாலதி.

''அம்மா, நானும் சுடப்போறேன்!'' என்றபடி முற்றத்தில் நின்று விளையாடிய ராமு தாயின் முன்னால் வந்து நின்றான்.

''நாடு கிடக்கிற கிடக்குள்ள அவரும் அவர்ர செல்லமும்! போடா அங்கால!'' என்று கத்தினாள் மாலதி.

அதைக் கேட்டு ராமு ஒப்பாரி வைத்து அழுதான்.

தாய் ஏசியது சரியே! என்று ஆமோதிப்பதைப் போல

www.padippakam.com



மூத்தவன் ராகவனும், ரதியும் ஒப்பாரி வைத்தழும் ராமுவை வெறிக்கப் பார்த்தார்கள்.

பூபாலன் ஓடிவந்து, ராமுவை அப்படியே அணைத்துக் கொண்டான். அப்போது ராமு செல்லத்தில், "அப்பா, அம்மாவத்தான் முதல்ல சுடவேணும் எலுவாப்பா?" என்று கேட்க, பூபாலன் "ஓம்மனே நீ சுடுடா அவளுக்கு" என்றான்.

"உங்களுக்கு உங்கட செல்ல மகனுக்கும் ஒரே விளையாட்டும், வேடிக்கையும்தான்".

"என்னடியம்மா செய்யச் சொல்லுறா! அவன் விளையாட்டுப் பிள்ள. அவன் சொல்லுறதையெல்லாம் பெரிசா எடுக்கலாமா? பகல் ராவெல்லாம் ஒரே வெடிதான் கேக்குது. நேத்தும் இவடத்த காலடியில ஒரு பெரிய வெடிச்சத்தம் கேட்டுது. என்ன நடந்ததெண்டு ஒருவருக்குமே தெரியா. இந்தா இப்பவும் கேக்குது! ஆரோ எங்கேயோ சுடப் பழகிறானுகளாக்கும்! நீதான் எடுத்ததுக்கெல்லாம் மாமாங்கப் பிள்ளையாரே! மாமாங்கப் பிள்ளையாரேயெண்டு கத்தி எங்களையும் பயமுறுத்தாட்டுறா!"

"ஓ, உங்களுக்கு வெடிக்குப் பயமில்ல........!"

"பயமில்லாமலா..... பயந்தான். எண்டாலும் பயப்படாம இருக்கிறதுக்கு இப்படிச் சொல்லிச் சொல்லிப் பழகிப் பாக்கிறன்!"

இப்படி இவர்கள் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தபோது வெளியே தெருப்பக்கம் "பொலிஸ் நிலயத்தைத் தாக்கிறாங்களாம்!" என்று யாரோ ஒருவர் சொல்லிக் கொண்டே சைக்கிளில் விரைவாக ஓடிச் சென்றார்.

"இப்ப என்ன சொல்லுறியள்? ஆரோ சுடப்பழகுறானுகள் எண்டீங்களே! இப்ப கேட்டீங்களா கதைய!" என்றபடி மாலதி மண்டபத்திற்குள் வந்தாள். அவ்வளவுதான் அவள் வாய் புலம்பியது. "கடவுளே! என்ன நடக்கப் போகுதோ, ஏது நடக்கப் போகுதோ! என்ட குஞ்சி குருமானெல்லாத்தையும் எங்க கொண்டு போய் ஒளிக்கப் போறன் கடவுளே!"

பொலிஸ் நிலையம் உடைபடும் செய்தியும், மாலதியின் அலறலும், சட்டென பூபாலனை மாத்திரமல்ல, பிள்ளைகளையும் கதிகலங்க வைத்தது.



படிப்பகம்

www.padippakam.com



பூபாலன் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தெருப்பக்கம் போனான்.

"வெளியால கடவுளுக்காகப் போகாதீங்க. உள்ள வாங்கவன்!" என்று கத்தினாள் மாலதி.

"இஞ்ச மாலதி. ஏன் கிடந்து கத்திறா? இந்த ஊரில நாம மட்டும்தானா குடியிருக்கிறம்? ஊரோட ஒத்ததுதான் நமக்கும். சத்தம் போடாமச் சும்மா நில்லு! நான் வெளியில போய் என்ன நடக்குதெண்டு கேட்டுத்து வாறன்! பொலிஸ் நிலயத்த உடைக்கிறானுகளெண்டு சொன்னா சனங்களெல்லாம் ஊடுகள உட்டுப்போட்டு ஓடிருங்கள். பிறகு நாம கழவெடுக்கலாமெண்டு நம்மட ஊரில கிடக்கிற ஐ.ஆர்.சி பாட்டி பொய்யச் சொல்லியிருக்கும்! எதுக்கும் நான் பாத்தித்து வாறன்!" என்றபடி முன்னேறியபோது, "அப்பா உங்களுக்கென்ன பைத்தியமா? வெளியால போகாம வாங்க! என்னவோ றோட்டால, 'இரஞ்சி' வாற சத்தமும் கேக்குது!" என்று பூபாலனைப் போகவிடாமல் தடுத்தான் ராகவன். அந்தளவில் பூபாலன் திரும்பி வந்தான்.

"எனக்கும், என்ர பெட்டக்குட்டிக்கும் பயமில்ல. மூத்தவன் ராகவனும், நீங்களும் இஞ்ச இருக்காம எங்கெண்டாலும் ஒடிப்போய் ஒளியுங்க" என்று அவசரப்படுத்தினாள் மாலதி.

"இந்த நேரத்தில நாங்க எப்பிடிப்போற? எங்க போற? வானத்தில பறந்தாலும் அங்கயும் ஹெலி வரும். வானத்துக்குக் கீழ ஊட்டக்கட்டித்து என்னடி செய்யேலும்? சும்மா கிட, இயமன அறியாம உயிர் போகாது!"

"உங்களுக்கு எப்பவும் இந்தப் பழமொழிகளும், இந்தக் கதையும்தான்!"

"சண்ட புடிக்கிறதுக்கு ஊரூரா, கிராமம் கிராமமா பொடிகளப் புடிச்சி வேன் வேனா ஏத்தக்குள்ள எல்லாரும்தான் அவங்கவங்கட பிள்ளையள கொழும்பெண்டும், வெளி நாடெண்டும் கொண்டோடினாங்க! ஆனா நாம என்ன செய்தம்? கடவுள நம்பித்து ராகவன ஊட்டத் தானே வெச்சிருந்தம்! நமக்கிட்ட பணவசதி ஆள்வசதி இல்லாதது ஒரு காரணமாக இருந்தாலும், கடவுள்ற நம்பிக்கையினாலதான் நம்ம பிள்ளைக்கு



படிப்பகம்

www.padippakam.com



ஒண்டும் நடக்கல்ல. எல்லாத்துக்கும் கடவுள்தான்!''

இப்படி பூபாலன் மாலதியைச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும் போது, ராகவன் வெளியே முற்றத்தில் இறங்கி வேலிப்பக்கமாக நடந்தான். அவன் பின்னால் ரதியும் போனாள். அதை அவதானித்த பூபாலன், மாலதியைப் பார்த்து தன் பக்கம் வரும்படி தலை அசைத்தழைத்தான்.

“இஞ்ச மாலதி உனக்கு எந்தக் கதைய எந்த இடத்தவெச்சிக் கதைக்கோணுமெண்டு கொஞ்சமும் தெரியாது! துவக்கு வெடிக்கு ஆருக்குப் பயமில்ல! எனக்கும் பயம்தான். ஆனாலும் அந்தப்பயத்த உங்களுக்கு முன்னால நான் காட்டினால் நீங்கள் மேலும் பயப்பட மாட்டீங்களா? உனக்கும், பிள்ளைகளுக்கும் கொஞ்சம் துணிவ வரவழைக்க வேணுமெண்டுதான் நான் பயப்படாதவனப் போல நடந்து கொண்டனான். நீ என்னடாண்டா பிள்ளைகளுக்கு முன்னாலே கிடந்து மாரடிக்கிறா! ராகவன் இளந்தாரிப் பிள்ளதான். ஆனா, அவன்ட நெஞ்சிக்க எவ்வளவு பயத்த வெச்சிக் கொண்டு சீவிக்கிறானெண்டுறது எனக்குத்தான் தெரியும். அவனோடொத்த பெடிகளெல்லாம் அங்குமிங்குமெண்டு தலைமறைவாக ஓடி ஒளிச்சித்தானுகள். அப்பிடியெல்லாம் ஓடுறதுக்கு அவனுக்கும் துணிச்சலில்ல! எனக்கும் மனமில்ல! பாப்பம்! பாப்பம்! நானும் யோசியாம இல்ல! ஆனா ஒண்டு. இப்பிடியான வசனங்கள் இனிமேப்பட்டு அவன முன்னுக்கு வெச்சித்து கதச்சிராத!''

இப்படி பூபாலன் சொன்னதும், அவற்றையெல்லாம் அப்படியே கேட்டுக் கொண்ட மாலதி, “நீங்க சொல்லுறதிலயும் ஒரு பக்கம் ஞாயம் இருக்குத்தான். என்னெண்டாலும் என்ர மனம் கேக்கிதில்லையே!'' என்றபடி ஓரளவு மனதைத் தேற்றிக் கொண்டதுதான் தாமதம், வேலியோரமாக நின்று எட்டிப் பார்த்துக் கொண்டு நின்ற ராகவனும், ரதியும் பீதி கலந்த முகங்களோடு மீண்டும் மண்டபத்திற்குள் ஓடி வந்தார்கள்.

www.padippakam.com



# 8

நாட்டில் உண்டான இனப்பிரச்சினை பலரை வீரர்களாகவும், இன்னும் பலரை அஞ்சி நடுங்குபவர்களாகவும் மாற்றி வைத்திருக்கிறது.

பூபாலன் தம்பதியினரின் மூத்த புதல்வன் பயந்து நடுங்குபவர்களின் பட்டியலில் சேர்ந்து கொள்கிறான். பாவம், அவன். இளம் வயதில் - எந்தக் குற்றமும் செய்யாத அவனை ஆமிக்காரர்கள் கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்று ‘கேம்ப்பை’க் காட்டி வெளியே விட்ட பிறகு அவனுக்குள்ளிருந்த துணிச்சலெல்லாம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. இப்போது அவன் எடுத்ததற்கெல்லாம் பயப்படுகிறான். ராகவனும் ரதியும் வேலியோரம் எட்டிப்பார்த்துக் கொண்டு நின்றவர்கள் பீதி கலந்த முகங்களுடன் ஓடி வந்தார்களல்லவா! ஆம்! அதைப் பார்த்ததும் பூபாலனும் மாலதியும் “என்ன நடந்தது? ஏன் பயத்தோட ஓடிவாறீங்க?” என்று ஒரே குரலில் கேட்டார்கள். ராகவன் பேசுவதற்கு வார்த்தைகள் வராமல் நின்று நடுங்கினான்.

“ரதி, நீயாவது சொல்லன்! ஏன் அண்ணா ஒரு மாதிரியா நிண்டு நடுங்கிறான்?” மாலதி கேட்டாள்.

“ஆமிக்காரனுகள் ‘மூவ்’ பண்ணி வாறானுகளாம்!”

“என்ன?”

பூபாலன் அவனையுமறியாமல் திடுக்குற்று, “யார் பிள்ள சொன்னவன்?” என்றான்.

ஆரும் சொல்ல வேணுமா! இந்தா நம்மட றோட்டாலெல்லாம் பெடிகள் ஓடுறதப் பாருங்கவன்!” என்றாள் ரதி.

எல்லோரும் எட்டிப் பார்த்தார்கள்.

படையெடுத்து வரும் இராணுவத்தினரின் பிடியில் அகப்படக் கூடாதென்ற எண்ணத்தில் ஊரிலுள்ள இளைஞர்கள் மட்டுமல்ல முதியவர்களும் கூட ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது.



படிப்பகம்

www.padippakam.com



ராகவன் குழந்தைப் பிள்ளையைப் போல மண்டபத்திற்குள் குந்தியிருந்து, ''ஊரில ஒரு பொடிகளுமில்ல! எல்லாரும் ஓடிப் பொயித்தானுகள்! நான் மட்டும்தான் நிக்கிறன்'' என்று அழுதான். இளந்தாரிப் பிள்ளை.

அவனைப் பார்த்தபோது பூபாலனுக்கு மாத்திரமல்ல தாய் மாலதிக்கும் வயிறு வாயெல்லாம் பற்றி எரிந்தது! கையாலாகாத தந்தையாக தன்மகன் ராகவனுக்கு முன்நிற்கவே பூபாலனுக்கு கூச்சமாகவிருந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, ''ராகவா, நீ பயப்படாத! எல்லாத்துக்கும் நானிருக்கன்! உனக்கு என்னவும் என்றால் நான் சும்மா பாத்துக் கொண்டு நிக்க மாட்டன். அதோட நீ படிக்கிற சின்னப் பையன், ஆர் வந்தாலும் நான் சொல்லிச் சமாளிப்பன். நமக்கொண்டும் நடக்காது. ஓடினாத்தான் பயம், அவனுகளுக்கும் ஐமிச்சம் வரும். சும்மா நிண்டால் வந்து செக் பண்ணிப்போட்டு பொயித்திருவானுகள். அதோட பொலிஸ்டேசன் எவ்வளவோ தூரத்துக்கு அங்கால இருக்கு. இங்கொண்டும் நடக்கலையே! அப்ப நாமேன் சும்மா பயப்படுவான்? பயப்படாம நிண்டால்தான் வாறவனுகளும் சந்தேகப்பட மாட்டானுகள்!'' என்று ராகவனுக்கு துணிச்சல் மருந்தைப் பாய்ச்சினான்.

ஆனால் ராகவனின் பீதி தணிந்தபாடாயில்லை, பூபாலனின் இந்தப்பேச்சை அவனுக்குப் பக்கத்தில் உரசியபடி நின்ற சின்னவன் ராமு மாத்திரம்தான் நம்பியிருப்பான். மற்ற எவராலும் நம்புதற்கு முடியவில்லை.

ஆனாலும் எதிர்ப்பார்த்ததைப் போல இரண்டு நாட்கள் கழிந்தும் எவரும் வரவில்லை. ஓடிச்சென்றவர்களெல்லாம் அன்று பிற்பகலே திரும்பி வந்து விட்டார்கள். ஆனால் ''கொமாண்டோக்கள் வரப் போகிறார்கள்'' என்ற கதை. நேரத்திற்கு நேரம் தென்றலில் கலந்து வந்து மூன்றாம் நாள் புயலாக வீசத் தொடங்கியது.

அதிகாலை ஐந்து மணிக்கே மளமளப்புகள் கேட்கத் தொடங்கின. பல இளைஞர்கள் - எதிலுமே சம்பந்தமில்லாதவர்கள் வழமைபோலவே உயிர்களைக் கைகளில் பிடித்தபடி ஓடினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



பூபாலன் ராகவனை ஓடச்சொல்லவுமில்லை. ராகவன் அதற்குத் துணியவுமில்லை, வீட்டோடு பாடப் புத்தகமும் கையுமாக இருந்தான்.

வெளுத்த வெள்ளை வேட்டி, சேட்டை அவனுக்கு மாலதியே கொண்டு வந்து, "தம்பி நீ இதைக் கட்டிக்கொள்!" என்று கொடுத்தாள்.

கையில் பாடப்புத்தகம் இருந்தாலும் அவன் சிந்தனை யெல்லாம் வரப்போகின்ற கொமாண்டோக்கள் ஏதாவது கேட்டால் என்ன சொல்லித் தப்பலாம் என்பதிலேயே இருந்தது.

துப்பாக்கிகளின் மளமளப்புகள் முன்னால் வர - அந்த நாட்களில் மணியோசை முன்னே யானை பின்னே என்பது போல- பின்னால் பட்டாளம் வந்து கொண்டிருந்தது.

வேலிக்குள் நின்று பூபாலனும், மாலதியும், ராகவனும் மெல்ல எவரும் காணாதவாறு எட்டிப் பார்த்தார்கள். மாலதியின் இரண்டு கைகளும் தலைக்கு மேல் கும்பிட்டபடியிருக்க, அவள் வாய் "முருகா! பிள்ளையாரே! அம்மாளே!" என்று பல நேர்த்திகளைச் செய்து கொண்டிருந்தது. அப்பாடி! ஒரு படியாக பட்டாளம் உள்ரோட்டில் திரும்பி வீடு வீடாக வராமல் மெயின் பாதையிலேயே போய்க் கொண்டிருந்ததில் ஒரளவு எல்லோருக்கும் திருப்தி.

"பாத்தீங்களா, இவ்வளவுக்குத்தானே கிடந்து பயப்பட்டனீங்க? மடியில கனமிருந்தாத்தான் வழியில பயப்படவேணும். மத்தப் பெடிகளப் போல ராகவனும் ஓடியிருந்தா இப்ப நம்மட மனம் என்ன பாட்டப்படும்?" என்று பூபாலன் சொல்லி விட்டுத் திரும்பவில்லை. வீட்டின் பாழ்வளவுப் பக்கம் நாய்கள் வேகமாகக் குரைக்கும் சத்தம் கேட்டது.

"அவனுகளுக்குத்தான் குலைக்குதுபோல கிடக்கு!" என்று முணுமுணுத்துக் கொண்டே மாலதி பாழ்வளவுப் பக்கம் மெல்லப்போய் பார்த்தாள். அவ்வளவுதான், இந்தா வாறானுகள் பின்வளவுக் கம்பியெல்லாத்தையும் வெட்டிப் போட்டு! தம்பி, நீ போய் மண்டபத்துக்குள்ள பேப்பர வாசிச்சிக் கொண்டிரு!" என்று ஓட்டத்தில் வந்து சொன்னாள்.

www.padippakam.com



மீண்டும் ஓடிப்போன பயம் எல்லோரையும் வந்து பிடித்துக் கொண்டது.

"நீ என்ன இழவுக்கு வாசல்ல வந்து நிக்கறா? நீயும் ஒரு புத்தகத்த எடுத்து வச்சித்து வாசியன்!" என்று அதட்டிய பூபாலன் பாய்ந்து சென்று, அவனும் ஒரு பழைய அம்புலி மாமாப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டான்.

அவனைப் பார்த்து ரதியும், இளையவன் ராமுவும் கைகளால் வாயை மூடிக்கொண்டு சிரித்தார்கள்.

தெருவாசல் கதவும், பின்பக்க வளவுவாசலும் ஒரே சமயத்தில் திறக்கப்பட்டதைப் போல இரண்டு பக்கங்களாலும் சிற்றெறும்புக் கூட்டம்போல ஒரே பட்டாளக் கும்பல், அவர்களுக்குள் இரண்டொரு முசுறுகளைப் போல ஏதோவொரு இயக்கப்பெடிகளும் நின்றார்கள். அவர்கள் நிற்பதைப் கண்டதும் ஓரளவிற்கு பூபாலனின் மனதில் 'ஒன்றும் நடக்க விடமாட்டார்கள்' என்று நம்பிக்கை லேசாகத் துளிர் விட்டது.

மண்டபத்திற்குள் இரண்டு மூன்று பேர் ஏற, படிக்கட்டு குசினிவாசல், கக்கூஸ் கதவு, தெருவாசல், கிணற்றடி, குடத்தடி, வாழைப் பாத்தியடி என்று பலர் நின்றார்கள்.

பூபாலன் எவருக்கும் தெரியாமல் உமிழ்நீரை விழுங்கிக் கொண்டான்.

மண்டபத்திற்குள் ஏறியவர்கள் பெரிய வீட்டையும், சின்ன வீட்டையும் கதவைத் திறந்து பார்த்து விட்டு ராகவனின் மேல் பார்வையை மேயவிட்டார்கள். அப்போது பூபாலன் மெல்ல எழுந்து, எதையோ சொல்ல வாயெடுத்தான். 'ஒன்றும் பேச வேண்டாம்' என்னும் கருத்தில் சைகையில் காட்டிவிட்டு மண்டபச் சுவர்களையெல்லாம் பார்த்தார்கள்.

ராகவன் விளையாட்டாக சுவரில்வரைந்திருந்த புத்தர், இயேசு, காந்தி, பாரதி போன்றோரின் சித்திரங்களை பார்த்து விட்டு வெளியே நின்ற மற்ற கொமாண்டோக்களையும் அழைத்துக் காட்டி, எல்லோரும் சிங்களத்தில் எதையோ பேசிச் சிரித்தார்கள். பூபாலன் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பது போல அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றான்.



படிப்பகம்

www.padippakam.com



# 9

**பொா**லிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பிறகு படையெடுத்து வந்த பட்டாளக்காரர்கள் ஒரு வீடும் பாக்கியில்லாமல் தட்டிக் கொட்டி, உதைத்து அடித்து, எல்லா வீடுகளையும், தலைகீழாக அந்தக் கிராமத்தில் புரட்டிவிட்டுப் போய் விட்டார்கள். நல்ல வேளை பூபாலனின் வீட்டில் எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை.

மூத்தவன் ராகவன் சுவரில் எப்போதோ வரைந்திருந்த புத்தர் ஓவியம் அங்கே வந்தவர்களைக் கொஞ்சம் மனமாற்றம் செய்வித்ததோ? அல்லது சம்பளத்துக்கு மேலதிகமாக ஏன்தான் வேலை செய்வான்? என்ற அலுப்போ (சம்பளத்துக்குத்தானே இவர்கள் வேலைக்கு வந்தவர்கள் என்ற ஒரு கதை ஊருக்குள் அடிபட்டுள்ளது). இல்லையென்றால் இலைகுளைச் சட்டைக்குள்ளும் இரக்கம்-கலையுணர்வு இருந்திருக்க வேண்டும்? எப்படியோ அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள்.

www.padippakam.com



அன்று நடைபெற்ற இழப்புகளை அன்றே எவரும் அறிய முடியவில்லை. ஒருவித மயான அமைதி அந்தக் கிராமத்தில் உறைந்து போயிருந்தது. அடுத்தடுத்த நாட்களில்தான் பல உயிர், பொருள் இழப்புகள் நடந்திருப்பதை எல்லோராலும் அறிய முடிந்தது. அறிந்தும் என்ன? இழப்பு இழப்புத்தானே! எங்கும் அழுகுரல் சத்தங்கள். யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? எவர் மீது எவர் பிழை காண்பது? எது சரி? எந்த முடிவையும் எவராலும் எடுக்க முடியவில்லை. மூளை கலங்கிப் போன நிலை எல்லோருக்கும்.

ஒரு கூண்டுக்குள்ளிருந்து நாயைத் தப்ப வைத்தால் அடுத்த கூண்டுக்குள் தானாகவே அடைபட்டுக் கொள்ளும். "நாய் புலி" விளையாட்டாக மக்களின் அன்றாட வாழ்வு அழுகையோடும், புலம்பலோடும் சொல்லமுடியாக இழப்புகளோடும் சீரழிந்து கொண்டிருந்தது. உயிரைப் பொத்திப் பிடித்துக் கொண்டு எவ்வளவு காலத்திற்குத்தான் பயந்து பயந்து வாழ்வது?

"திடீரென ஒரு பிரளயம் எழுந்து எல்லோரையும் ஒரே நாளில் அழித்து விட்டால் நிம்மதியாகச் செத்துப் போகலாம்!" என்று ஒவ்வொருவரது மனங்களும் எண்ணிக் கொள்ளும் அளவிற்கு நாடு எங்கேயோ நரகலோகத்தை நாடிப் போய்க் கொண்டிருந்தது.

சற்றும் எதிர்பாராத விதமாக நாடு இப்படி சுடுகாடாக மாறியதால் அரசாங்க அலுவலகங்களோ மற்றும் தொழிற் கூடங்களோ எதுவும் இயங்காமல் படுத்துக் கொண்டன. இதற்கு காகிதத் தொழிற்சாலை மட்டுமென்ன விதிவிலக்கா, அதையும் மறு அறிவித்தலின்றி மூடி விட்டார்கள்.

பூபாலனுக்கு "முழிசாட்டம் " பிடித்துக் கொண்டது. ஒவ்வொரு மாதமும் எடுக்கின்ற சம்பளத்தை மாத்திரம் நம்பி வாழ்ந்தவனுக்கு இப்படி திடீர் பிறேக் சஞ்சலத்தை உண்டு பண்ணியது. கிட்டத்தட்ட ஒரு வருசம் பாரிசவாதக்காரனைப் போல இழுத்திழுத்து காலம் தவழ்ந்து கழிந்தது.

அப்பாடி! ஒரு பாடாக காகித ஆலை மீண்டும் இயங்கத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com



"இதோடு சரி! பெக்ரறி அழிந்துவிட்டது. இனிமேல் இந்தப் பெக்ரறிக்காரனெல்லாம் பிச்சையெடுக்க வேண்டியதுதான்." என்று பெக்ரறிச் சம்பளத்தையும், அற்றன்டன்ஸ் காசையும், போனஸையும் பார்த்துப் பார்த்து வெறும் வாய்மொச்சை தட்டியவர்களெல்லாம் பெக்ரறி இயங்கியதும் வாயைப் பிழந்தார்கள்.

எவ்வாறாயினும் இந்த இடைவெளிக்குள் பூபாலனின் குடும்பம் பட்டபாட்டைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. நல்ல வேளை பொலிஸ் நிலையத்தை உடைப்பதற்கு முன் யாரோ அரிசி, பருப்பு, மா, சீனி போன்ற மூட்டைகள் "ஸ்ரொக்" பண்ணி வைத்திருந்த ஸ்டோரை இரவோடிரவாக உடைத்ததினால் பூபாலன் வீட்டிலும் ஒவ்வொரு சாமான்களிலும் கொஞ்சம் கொஞ்சமாவது "ஸ்ரொக்" இருந்தது. இல்லையென்றால் காகித ஆலை பஸ்ஸில் பூபாலனின் எலும்புக் கூடுதான் ஏறியிருந்திருக்கும்.

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்பதைப் போல நாடு பழைய நிலைமைக்குத் திரும்பியது என்று பத்திரிகைகளிலும், வானொலியிலும் செய்தி வெளிவந்தாலும் நிஜவாழ்க்கையில் அப்படி ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவே யில்லை.

'ஏதோ பிறந்து விட்டோம். சாகும் வரை ஏதாவது சாப்பிட வேண்டும். அதற்கு வழியிருந்தால் சரிதான். அந்த வழி நல்ல வழியோ, குறுக்கு வழியோ எந்த வழியானாலென்ன' என்ற ஒரு உணர்வு எல்லோர் மனங்களிலும் புதிதாக உதயமாகிக் கொண்டது.

இலட்சிய வாழ்வு, தியாகம் அது இது என்ற கோஷங்களெல்லாம் எவர் வாயிலுமிருந்தும் வரவேயில்லை. அப்படி வந்தாலும் அதை நம்பவும் யாரும் தயாராகவுமில்லை. எல்லோர் மனங்களிலும் ஒருவித அலுப்பு-விரக்தி!

ஆற்றங்கரைகளிலும், புதர்களுக்கு மத்தியிலும் பல மனித உடல்கள் தேடுவாரற்று நாய், பூனைகளைப் போல இந்த மண்ணில் பல நாட்களாகக் கிடந்து நாற்றமெடுத்ததை இதற்கு முன்பு இங்கே யாருமே பார்த்ததில்லை.

அப்பாவிகளின் அவலச் சாவுகளும், வீணான அழிமதிகளும் ஊமைகளைக் கூட 'இதென்னடா வாழ்க்கை?'



படிப்பகம்

www.padippakam.com



என்று வாய் பேச வைத்தது.

இடுகாட்டை ஊடறுத்துச் செல்வதைப் போல தொழிற்சாலை பஸ் நடுக்கத்தோடு போய்க் கொண்டிருந்தது. பூபாலனின் விழிகள் மாத்திரமல்ல, அங்கிருந்த சகலரது விழிகளும் ஆமை முட்டைக் கண்களாக-உயிர்களை அவரவர் மடிக்குள் வைத்து, பொத்திப் பிடித்தபடி அப்படியே தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வழக்கமான கலகலப்பு, சலசலப்பு எதுவும் பஸ்ஸில் இருக்கவில்லை. ஒரு சாண் வயிற்றுக்காக அவர்களது எண்சாண் உடம்பையும் அடக்கி ஒடுக்கிக் கொண்டு மூச்சு விடக் கூடப் பயந்து நேரே 'றிங்கோ றோட்டி'ல் ஓடும் பஸ்ஸுக்குள் அவர்கள் பிரயாணம் செய்வதைப் பார்த்தால் பரிதாபமே உண்டாகும். அன்று பஸ்ஸில் நெரிசலும் இல்லை. எல்லோருக்கும் சீற்கூட இருந்தது.

'முதலில் போறவர்கள் போகட்டும். இவர்கள் போய் உயிரோடு திரும்பி வந்தால் அதன் பிறகு நாங்களும் போகலாம்.' என்ற எண்ணத்தில் பலர் வீடுகளிலேயே நின்று கொண்டதனால் அன்று வௌவால்கள் கூட அங்கே தொங்கவில்லை.

கடந்த ஒருவருட காலமும் மாதாமாதம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கையொப்பமிட்டு விட்டு சம்பளத்தை எடுத்துக் கொண்டு போனதைப் போல காகித ஆலை ஊழியர்களுக்கும் ஏதோ சுடுதண்ணீருக்குப் பச்சைத் தண்ணீரைப் போலென்றாலும் கொஞ்சம் பணம் கிடைக்க வழி செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணம் போதாதுதானென்றாலும் தொழிற்சாலையோடு சம்பந்தப்பட்ட பெரியவர்களின் உதவியைப் பாராட்டாமலும் இருக்க முடியவில்லை. இனிமேல் வேலை செய்து கணக்குப் பார்த்தால்தான் சம்பளம். அரசாங்கத்துக்கும் தனியார் துறைக்குமுள்ள வித்தியாசம் இப்படியான வேளைகளில்தான் எல்லோருக்கும் தெரியவருகிறது.

பூபாலன் இப்படியெல்லாம் சிந்தித்துப் பார்த்தபடி அப்படியே ஏங்கிப் போன நிலையில் இருந்தான்.

அவனுக்கு வேலைக்குப் போவதற்கே மனமில்லை. மூத்த பிள்ளைகளில் ஒருவரையாவது ரவுண் பக்கம் எந்த வேலைக்கென்றாலும் கொண்டுபோய் விட்டு விட்டு, அப்படியே



படிப்பகம்

www.padippakam.com



வீட்டிற்குள் புகுந்து வருசக் கணக்கில் படுத்து உருள வேண்டும் போல அவனுக்கு எண்ணத் தோன்றியது.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பஸ் மாத்திரமா? அதை விடவும் வேகமாகக் காலமும் ஓடியது.

பூபாலனுக்கு மனதைப் போல உடலும் தளர்ந்து போய்விட்டது. தனக்கொரு வேலை இல்லையே! என்று ஏங்கிய நாட்களை இப்போது எண்ணிப் பார்க்கிறான். தன்னை மனிதனாக்கிய, தன் குடும்பத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கிற காகித ஆலையை விட்டு விலக அவன் நினைக்கும் போதெல்லாம் கண்களில் நீர் வந்து முட்டிக் கொள்கிறது.

மனைவியிடம் கேட்டால், "அது உங்கள் விருப்பம்" என்கிறாள்". பிள்ளைகளுக்கு எல்லாம் சரிதான். அவர்களுக்குத் தேவை சாப்பாடு, உடுப்பு தேவையான நேரம் பணம். இவைகளுக்கெல்லாம் அப்பா என்ன செய்கிறார், எப்படி அவர் சம்பளம் பெறுகிறார்? என்பதையெல்லாம் அவர்கள் அறிந்து கொள்ளக் கூடத் தயாரில்லை.

சாப்பாடு இல்லையென்றால் முகத்தைச் சுண்டுவார்கள். சாப்பாடு உள்ளபோது படம் பார்க்கப் பணம் கொடுக்கவில்லை யென்றால் சாப்பிடாமல் படுப்பார்கள். பணக்காரப் பிள்ளைகளைப் போல உடுப்பு வாங்க வேண்டும். அவர்கள் போவதைப்போல, அவர்கள் பேசுவதைப் போல தாமும் செய்ய வேண்டும். அவர்களுக்கு உள்ளதைப் போல இவர்களுக்கும் றேடியோ, ரெலிவிஷன், டெக் எல்லாமே வேண்டும். காலத்தின் கோலம். நாட்டில் நடந்த கொடுமைகளையெல்லாம் சட்டென மறந்து இவர்களெல்லாம் பழையபடி என்ன துள்ளலைத் துள்ளுகிறார்கள்.

இன்றைய பிள்ளைகளுக்கும், அன்றைய பிள்ளை களுக்கும் பல விதத்திலும் நிறையவே வித்தியாசம்.

நாட்டில் நிலையான சமாதானம் நிலவவில்லை. போலியான நினைப்பில் காலம் ஓடிக் கொண்டிருந்தது. வழமையான அலுவல்கள் நடைபெற்றாலும், பயம் பயம்தான். பீதி பீதிதான். உண்மையான சமாதானம் நாட்டில் உண்டாகும் என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. 'சும்மா கிடந்த சங்கை



படிப்பகம்

www.padippakam.com



ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பதைப் போல நாடு போய்விட்டது. அமைதி காக்கும் படையென்று இந்தியன் வந்தும் நாடு சீராகவில்லை. இலங்கைப் படையாலும் நிரந்தர அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. அரசாங்கமும் இந்த இனப் பிரச்சினையை உள்ளசுத்தியாகத் தீர்த்து வைக்க விரும்பவில்லை. 'ஆண்டவனின் ஊரில் ஏண்டவனின் பாடு' என்ற கதையாக காலங்கள் நீண்டன.

'திருமணம் செய்யாமல் தனிக் கட்டையாக வாழ்ந்திருக்கலாம். எந்தப் பிரச்சினையுமே வந்திருக்காது. அப்படித்தான் வந்தாலும் ஒரே உயிர்தானே! மனைவி மக்களென்ற மனக் கவலைகள் இருந்திருக்காது! பாவம் மாலதி! அதை விடப் பாவம் பிள்ளைகள். இவர்களெல்லோரும் என்னைத் தானே மலை போல நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ம் ..." இப்படியே சிந்தித்துச் சிந்தித்து பூபாலனுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

தனக்காக அல்லாமல் தன் குடும்ப வாழ்விற்காக பூபாலன் விருப்பமும் இல்லாமல், வெறுப்பும் இல்லாமல் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



# 10

வாழ்க்கையில் எவ்விதப் பிடிப்புமில்லாமல் மக்கள், அவரவர் பாட்டுக்கு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நாட்டுப் பிரச்சினை வந்து, பல திடீர் மாற்றங்களை உண்டு பண்ணியதில் ஒரு முக்கியமான மாற்றம். தன் சொந்தச் சகோதரனையும் நம்பாமல் தனக்கு தனக்கென்று வாழும் சுயநலப் போக்கு பொதுவாகவே எல்லோரிலும் காணப்பட்டது. பக்கத்து வீட்டானுக்கு உயிர்தான் போனாலும் நமக்கு இல்லைத்தானே! நாம் தப்பித்தோம் என்ற எண்ணங்களும் எல்லோர் நெஞ்சிலும் பதிந்திருந்தது. அந்த நாட்களில் இப்படியா?

வெள்ளம் வந்தது. புயல் வந்தது. பல நஷ்டங்களையும் ஏற்படுத்தியது. ஆனாலும் ஏதோ நிவாரணமும் கிடைத்தது. இன்னொருவருக்கு மற்றவர் தோள் கொடுத்து உதவி பண்ணினார்கள்.

ஆனால் இந்த வன்செயல்கள்? பல நல்ல மனிதர்களையும் பொய் சொல்ல, மற்றவர்களின் பொருட்களை அபகரித்துக் கொள்ள, மற்றவர்களைக் காட்டிக் கொடுத்து தாம் தப்பித்துக் கொள்ளவே பழக்கி வைத்து விட்டது.

வீடுவாசலும், மண்ணாங்கட்டியும்! எதுவுமே வேண்டாமென்று உதறியெறிந்து விட்டு அகதிகளாக வெளியே ஓடித் தப்பித்துக் கொண்டவர்கள் போக, மற்றவர்களெல்லாம் எங்கே போவது? எப்படி வாழ்வது? யாரிடம் அடைக்கலம் புகுவது? என்ற கேள்விக்குறியோடுதான் வாழ்ந்தார்கள். இப்படி வாழ்ந்த குடும்பங்களில் பூபாலன் குடும்பமும் ஒன்று.

பல கிராமங்கள் கிராமங்களாகவே இல்லை. காடு வளர்ந்து, சனநடமாட்டமே இல்லாமல் பழைய கால- இடிபாடுகளுடன் காட்சி தரும் பழைய மன்னர்களின் ராஜதானிகளாகவே கிடந்தன. தப்பித்துக் கொண்ட சில கிராமங்களில் பூபாலனின் கிராமமான மட்டிக்களியும் ஒன்றானது.

எவ்வளவுதான் பல்லைக் கடித்தாலும் பூபாலனுக்கு



படிப்பகம்

www.padippakam.com



வேலைக்குப் போவதற்கே மனமில்லை. சந்திக்குச் சந்தி ஆமிக் 'கேம்பு'கள் வழி நீளத்திற்கும் பஸ்ஸை விட்டு இறங்கி ஏறும் தடைக்கற்கள். கட்டுச் சோற்றுக்குள்ளும் குண்டு, இருக்கிறதா என்ற சந்தேக 'செக்கப்'புகள் ஐடின்டிக்காட்டைக் காட்டிக் காட்டி அவன் முகவிலாசம் தொலைந்து விட்டது. எந்நேரமும் பயம். சுயமாகச் சிந்திக்கப் பேச முடியாது. அப்படி வாதாடினால் பயங்கரவாதியென்று ராத்திரியில் வந்து இனம் தெரியாதவர்கள் தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். ஒவ்வொரு நாளும் காரணகாரியமில்லாத றவுண்டப்புகள், முகமூடிகளுக்கு முன்னால் 'கிரேன் கிரேன்' என்று நடுங்கியபடி, உள்ள தெய்வங்களை யெல்லாம் அழைக்க வேண்டிய பரிதாப நிலை. இவைகளை யெல்லாம் தாண்டி வேலைக்குப் போனால் அங்கே மேலதிகாரிகளின் திட்டல்-பயமுறுத்தல்கள்.

ஒருநாளா இருநாளா? வாழ்க்கை பூராவும் இதே பல்லவிதான். எப்போது சமாதானத்தைக் காண்பதும், சந்தோசமாக வாழ்வதும்? இது நடக்கக்கூடிய காரியமாகவே பூபாலனுக்குப் படவில்லை.

அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

வேலையிலிருந்து விலகியாக வேண்டும்! றிட்டயராகும் வயது வரமுன்னால் விலகினால் கழிவுக்காசு கிடைக்காது. அதையெடுக்க இன்னும் சில வருடங்களைப் போக்காட்டியாக வேண்டும். அப்படியென்றால் அந்த நாள்வரை சாப்பாட்டுக்கு வழி? மீன் பெட்டி கட்டியாவது சமாளிக்க வேண்டியது தான்

அன்று வேலை விட்டு வந்ததும் வராததுமாக பூபாலன் மனைவியிடம் சொன்னான்.

"நான் வேலையால நிக்கப் போறன்!"

"ஏன்?"

"எனக்கு மனம் சரியில்ல!"

"சாப்பிட வழி?"

"எதையாவது செய்து பிழைக்க வேண்டியதுதான்".

"இப்ப நாடு ஓரளவுக்குச் சரியாப் பொயித்துத்தானே? மத்தவங்களும் விலகப் போறாங்களாமா?"

"மத்தவங்களப்பத்தி நாமேன் பாப்பான்? என்னால ஏலாது? அவ்வளவுதான்".

"மூத்தவன் ஏ.எல். சோதின எடுத்திருக்கான். பாஸ்



படிப்பகம்

www.padippakam.com



பண்ணித்தாளெண்டால் கனக்கக் காசு தேவப்படுமே! ரதியும் ஓ. எல்லப் பாஸ் பண்ணித்தாளெண்டால் ரைப்பிங்கையும் படிக்க வச்சிப்போட்டு ஆர்ரையும் கையக்காலப் புடிச்சாவது ஒரு வேலையில அவளச் சேத்துடலாம். அதுக்குப் பிறகு நீங்க வேலையால நிண்டாலும் அவ்வளவு காட்டாது''.

''என்ன இப்ப என்ன செய்யச் சொல்லுறா? அநியாயமாக உங்கட கண்ணிலயும் படாமப்போய்ச் சாகச்சொல்லுறயா?''

இதற்கு மேல் மாலதி பேசவேயில்லை. ''உங்கட விருப்பம். என்னெண்டாலும் செய்யுங்க'' என்று அவள் விலகிக் கொண்டாள்.

பூபாலன் போய் தனியாகக் குந்திக்கொண்டு தன் பாட்டுக்கு யோசித்தான்.

''மாலதி சொல்லுறதிலயும் ஞாயம் இருக்கத்தான். ம்... சரி. எல்லாம் ஆண்டவன் செயல்!'' என்று தனக்குத்தானே சொல்லியபடி எழுந்து வெளியே போனான்.

மீன் வியாபாரிகள் ஐந்தாறு பேர் 'பக்குஸ்' பெட்டிகள் நிறைய சூரன் மீன்களையெல்லாம் அடுக்கி வைத்துக் கட்டிக் கொண்டு வேகமாகப் பறந்தார்கள். அதைப் பார்த்ததும் மாலதியிடம் வந்து

''இஞ்ச மாலதி, இண்டைக்குச் சரியான மீன் புடிபட்டிருக்குப் போல கிடக்கு! ஒரு 'உம்பாரம்' சூரன் மீன்! யாவாரிமாரெல்லாம் அள்ளிக்கட்டிக் கொண்டு ஓடுறானுகள்'' என்றான் பூபாலன்.

''இண்டைக்கு மட்டுமா! நெடுகத்தான் இப்ப புடிபடுகுது! இஞ்ச நமக்குத்தான் ஒரே வெள்ளிக்கிழமையாக் கிடக்கு!''

''காசிருந்தாத் தாவண்டியம்மா. துறையடிக்குப் போய் வாங்கித்து வாறன் பிள்ள!''

''அங்க சின்னவூட்டுக்குள்ள மூலைக்க இருக்கிற அடிப்பானைக்குள்ள ஒரு அம்பது ரூபாக் கிடக்கு. எடுத்துக் கொண்டு போய் வாங்கித்து வாங்களன். பொழுதும் படப்போகுது! நாத்தல் மீனெண்டால் வேணாம். ராவைக்கும் ஆக்கிப் போட்டு, நாளைக்கும் உங்களுக்குக் கட்டுச்சோறு கட்ட அவிச்சி வைக்கலாம்!''

அந்தளவில் பூபாலன் காசை எடுத்துக் கொண்டு மடக்மடக்கென கால்நெட்டி முறிய நடந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



# 11

**வெ**ங்காள விரிகுடாக் கடலின் பேரிரைச்சல் காதை அடைத்தது. அங்கிருந்து வரும் கடல்காற்று நெஞ்சை நிறைத்தது. உயரமாக விரிந்தெழுந்து விழும் அலைகளுக்கு மேல் புள்ளுக்கூட்டம் பாட்டம் பாட்டமாகப் பறந்தன. இரண்டொரு கடல் தோணிகளும், இயந்திரப்படகுகள் சிலதும் கடலைக் கிழித்துக் கொண்டு வேகமாகக் கரையை நாடி வந்து கொண்டிருந்தான்.

ஆறும், கடலும் சங்கமமாகும் முகத்துவாரத்தின் எழில் கொஞ்சும் அந்தக் காட்சியை பூபாலன் பல நாட்களுக்குப் பிறகுதான் பார்க்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com



ஏகப்பட்ட சனக்கூட்டம், வியாபாரிகள், மீன்களுக்கு விலை கேட்கும் சத்தமும், மீனவனொருவன், "ஒருத்தரும் காசி தராமல் மீனில கை வைக்கப் போடாது!" என்று கத்தும் சத்தமும், கறிவாங்கப் போய் நிற்கும் ஊரவர்களின் "அண்ணே, தம்பி எனக்கொரு மீன் தா" என்ற இரைச்சலும் அந்த மட்டிக்களிக் கிராமம் இப்போதுதான் விழித்திருக்கிறது என்று சொல்லாமல் சொல்கிறது.

மடிக்குள்ளிருந்த பணத்தைக் கையில் எடுத்தபடி பூபாலன் மெதுவாக அங்கே நிற்கும் கூட்டத்தை விலக்கிப் பார்க்கிறான். அவனால நம்பவே முடியவில்லை. முழுவதும் சூரன் மீன்கள்.

"இது நல்லதுக்கில்லடா தம்பிமாரே! மீண்டும் ஒரு அழிவு வரப்போகுது!" என்று கூட்டத்தில் நின்ற ஒருவர் சொல்கிறார். உண்மைதான். இதுவரைக்கும் பூபாலன் இவ்வளவு தொகையான மீனை எப்போதுமே பார்த்ததில்லை. இதற்கும் அழிவிற்கும் என்ன சம்பந்தம்? "கலவரம் வந்து, கடலுக்குப் போக ஏலாமல் பஞ்சத்தோடும் பட்டினியோடும் கடன் வாங்கவும் முடியாமல் திண்டாடிய மீனவர்களுக்கு கடவுளாப் பாத்துக் கொடுத்திருக்கிறான்" என்கிறார் இன்னுமொருவர்.

அதுவும் சரிதான் என்று எண்ணிக் கொள்கிறான் பூபாலன்.

"எல்லாம் ஒரே சைஸ் மீன்தான், எதையெடுத்தாலும் முப்பது ரூபா தான்" என்று போட்டுக்குள் நின்று மீனவரொருவர் குரல் கொடுக்கிறார்.

போட்டை வளைத்து நின்ற கறிக்காரர்கள் காசைக் கொடுத்து ஆளுக்கு ஒவ்வொன்றைத் தூக்கி கொள்கிறார்கள்.

பூபாலனும் ஒரு மீனைத் தூக்கி கொண்டு ஐம்பது ரூபாயைக் கொடுக்கிறான். ஏற்கனவே பூபாலனுக்குத் தெரிந்தவர் அவர், அவசரத்தோடு, அவசரமாகப் பணத்தை வாங்கி, மிகுதியை பூபாலனின் கைக்குள் திணித்து விடுகிறார். பூபாலன் அந்தளவில் தள்ளி வந்து நின்று மிகுதிப் பணம் எவ்வளவு இருக்கிறது என்பதையறிய கையை விரித்துப் பார்க்கிறான். அங்கே இருபத்தைந்து ரூபா இருக்கிறது. தெரிந்தவர் என்பதற்காக பூபாலனுக்கு மாத்திரம் அந்த மீன் இருபத்தைந்து ரூபா. அதற்காக அந்த மீனவரை நன்றியோடு பார்த்துச் சிரித்து



படிப்பகம்

www.padippakam.com



விட்டு மெல்ல நடையைக் கட்டுகிறான்.

'இரவுக்கும் ஆக்கி, நாளைக்கும் ஆக்கலாம்' மீனை மேலே ஒரு தரம் தூக்கிப் பிடித்துப் பார்த்தபடி பூபாலன் திருப்தியோடு வந்து துறையடியில் குடைவிரித்து நிற்கும் கத்தாக்குக் கீழே நிற்கிறான்.

கால் வைக்க முடியாதளவிற்கு எங்கும் ஒரே மீன் குவியல்கள்.

"பொழுதுபட்டுப் போப்புதே! இவ்வளவு மீனையும் எப்பிடிக் கொண்டு போய் விற்கப் போகிறார்களோ?" என்று பூபாலன் எண்ணிக் கொண்டிருக்கும்போது மீன்களை வாங்கிக் குவித்திருந்த வியாபாரிகள் தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்கிறார்கள்.

"இஞ்ச சின்னவா, இவன் முருகுப்பிள்ளட பிறிச்சும் லோட்டாமா?"

"ஓ! அந்தப் பிறிச் மத்தியானத்தோடயே நிரம்பிப் போச்சி"

"அப்ப இப்ப நாம என்ன செய்யிற?"

"இவன் பாக்கியராசாட 'பிறிச்'சில கொண்டு போய்ப் போடுவமா?"

"சேச்சேச்சே அந்தப் பிறிச் மோசம்! நேத்து இவன் நாதன் வெச்ச மீனெல்லாம் நாறிப் பொயித்து, கூல் அறவே புடிக்கல்ல!"

"அப்ப என்ன செய்யிற? ஐஸ் அடிச்சிப் போட வேண்டியதுதான்".

"கூல் புடிக்குமா மச்சான்?"

"புடிச்சாலும், புடியாட்டிலும் அதவிட வேறு வழியில்ல. அது புடிக்கும். அண்டைக்கு இவன் தம்பிராசா ஆக்களும் ஐஸ்தான் அடிச்சிப் போட்டவனுகள். நல்லாப் புடிச்சி இருந்தது. நமக்கு மீன் நாறாமல் இருந்தாச் சரிதானே!"

"என்னென்டாலும் மச்சான் நாமளாவது ஒரு பிறிச் வாங்கத்தான் வேணும். ஆறு மாசத்துக்குள்ளேயே பிறிச் காசிக்கு மேலயே உழச்சிப் போடலாம்".

இதைக் கேட்டும், பார்த்தும் கொண்டிருந்த பூபாலன் யோசித்தான். "சை நமக்கிட்ட இந்த நேரம் ஒரு பிறிச் இருந்தால் பாடிப்பாடி உழைக்கலாம். ஆனா முப்பதாயிரம் நாப்பதாயிரம் வேணும்! ஆரிட்டப் போற?"

நேரம் அடித்துக் கொண்டு பறந்தது.

"சுணங்கினால் மீன் நாறினாலும் நாறிப் போகும். மாலதியும் கொம்புவாள். பொழுதுபோகுது" என்று எண்ணிய பூபாலன்



படிப்பகம்

www.padippakam.com



வேகமாக நடந்தபோது, காகித ஆலையில் அவனோடு வேலை பார்க்கும் குணராசா எதிர்ப்பட்டான். அவன் கையிலும் ஒரு சூரன் மீன் இருந்தது.

"மச்சான் நீ ஒரு விசயம் கேள்விப்பட்டயா? நம்மட பெக்ரறிக் கோப்பரேசன் கொம்பனியாப் போப்புதாம்!"

"கொம்பனியாப் போப்புதாமா? அப்பிடியெண்டால் என்னவும் நன்ம கிடைக்குமாடா நமக்கு?"

".அதென்னவோ தெரியா. ஆட்குறைப்புச் செய்வாங்களாம், விலகப் போறன் விலகப் போறனெண்டு சொல்லித் திரியிற உனக்கு அடிச்சிது லக்கு".

"விலகினால் புறவிடன்ட் பண்டெல்லாம் கிடைக்குமா?"

"கிடைக்குமாவா! உடனே கணக்க முடிச்சிப் போட்டுத்தான் ஆள உடுவானுகள். அது மட்டுமில்லாடா" மேலதிகமாக அவரவர் சேவிசிக்குத் தகுந்தபடி கொம்பன்சேசனென்றும் ஒரு தொகை கிடைக்குமாம்!"

"உண்மையைச் சொல் மச்சான். மெய்தானா இந்தக் கத?"

"நானென்ன எடுத்து வெச்சா சொல்லுறன். நேத்து றேடியோவில சொன்னதாம். இண்டைக்குப் பேப்பரில வந்திருக்கு"

"எதுக்கும் நாளைக்கு வேலைக்குப் போனால் அங்க எல்லாம் தெரிய வரும்தானே! நீ நாளைக்கு வருவாதானே?"

"இதென்ன கத! நான் வருவேன்"

"அப்ப சரி மச்சான் நான் வரப்போறன். வீட்டில தேடப்போகுதுகள்."

"சரி சரி பொயித்து வா. அடிச்சிருக்கு உனக்கு சான்ஸ்"

அந்தளவில் பூபாலன் நடந்தான். குணராசா சொன்ன செய்தியும், மீன்களைக் குளிரூட்டி வைக்கும் 'பிறிச்' பற்றி துறையடியில் வியாபாரிகள் கதைத்த கதையும் பூபாலனின் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டேயிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



# 12

கச்சான் காற்றின் வேகம் சற்று அதிகரிக்கத் தொடங்கியது. தென்னை மரங்களெல்லாம் பேயாட்டம் ஆடின. கிணற்றடியில் குலை தள்ளிப் போய் நின்ற வாழைமரம் நிலத்தில் விழவா? விழ வேண்டாமா? என்று கேட்பதைப் போல மேலும் கீழும் சாய்ந்தாடியது.

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு சாயமயிலே நீ சாய்ந்தாடு", என்று மெல்லப் பாடியபடி மாலதி வாழை மரத்தைப் பெலன் கொண்ட மட்டும் தூக்கி நிமிர்த்தி, முட்டுக்கம்பை வாழையோடு சேர்த்து நல்ல பிடிப்பாகச் 'சப்போர்ட்' கொடுத்தாள். முற்றமெல்லாம் ஒரே குப்பை மயம்.

மண்டபத்திற்குள் எட்டி நேரத்தைப் பார்த்தாள். ஒன்பது மணியாகியிருந்தது. பத்து மணியாவதற்குள் எப்படியும் வளவுவாசலைக் கூட்டிப்பெருக்கி விடலாம் என்று எண்ணியபடி வாருகலை எடுத்து முற்றத்தைப் பெருக்கினாள். அவள் கைகள் குப்பை கூட்டினாலும் மனம் வேறெங்கோ தாவியபடியிருந்தது.


படிப்பகம்

www.padippakam.com



'ரதி ஒரு மாதிரியாக ஓ. எல். சோதனையில பாஸ் பண்ணித்தாள். இந்த ஓ.எல். லோட ஆரு இப்ப வேல தரப்போறா? அவள மூத்தவனப் போல ஏ.எல். படிப்பிக்க ஏலா. ஒரு ஆறு மாசம் ரைப்பிங்கப் படிப்பிச்சி விட்டால் போதும். எங்கெண்டாலும் ஒரு இடத்தப்போய்க் குந்திக் கொள்வாள். மூத்தவன் ராகவனத்தான் வளவு வாசல வித்தெண்டாலும் பட்டம் பெறவைக்க வேணும். இந்த மனிசனும் வேலையால விலகப்போறனெண்டு கிடந்து அவதிப்படுறார். பாவம்! அவர்தான் என்ன செய்வார்? இந்த நாட்டுப் பிரச்சினைக்குள்ள வேல வெட்டிக்குப் போய் வாறெண்டாச் சும்மாவா? வீட்டில கிடக்கிற எனக்கே இவ்வளவு பயமெண்டால் தடை முகாம்களைக் கடந்து போய் வாறவங்களுக்கு எவ்வளவு பயமாயிருக்கும். இந்தியப் படை இருந்த நேரத்தில இவர் சோட் லீவில் வரக்குள்ள ஓடினதாமெண்டு இவரப் புடிச்சிவெச்சி அவனுகள் அடிச்ச அடி இப்பவும் நெஞ்சிக்குள்ள நோகுதாமெண்டு சொல்லுவார். அப்படியேதும் நடந்து அவருக்கு என்னவுமெண்டால் நானும் பிள்ளைகளும் ஆத்தில கடல்ல உழுந்துதான் சாகவேணும். ம்.... கடவுள் என்னத்த நினைச்சிக் கொண்டிருக்கிறாரோ'

தன் குடும்பச் சுமைகளை நெஞ்சில் சுமந்தபடி வளவுவாசல்களைக் கூட்டிப் பெருக்கி கைகால்களை அலம்பிக் கொண்டு மண்டபத்திற்குள் அவள் வந்தபோது நேரம் சரியாகப் பத்து மணி.

'இப்ப குசினிக்க போயிருந்தாத்தான் பிள்ளைகள் பள்ளியால வரக்குள்ள சாப்பாட்டக் குடுக்கலாம்' என்று எண்ணிக் கொண்டு மாலதி அரிசியை எடுத்தபடி குடத்தடிக்கு வரும்போது காகம் தெரு வாசலில் நின்று கரைந்தது.

'மூத்தவண்ட ஏ.எல். முடிவு வந்திருக்கும் போல கடவுளே முருகா என்ட புள்ளைக்கு நல்ல முடிவா வந்திரவேணும்' என்று அவள் எண்ணி முடிக்கவும் அங்கே மூத்தவன் ராகவன் வந்து சேரவும் நேரம் சரியாகவே இருந்தது.

"என்ன மனே, சோதினப்பாடு?" ஆவலோடு கேட்டாள்.

"நாலு பாடத்திலும் 'பி' வந்திருக்கம்மா" என்றான் அவன் மகிழ்ச்சியோடு,



படிப்பகம்

www.padippakam.com



மாலதிக்கு வந்த சந்தோசத்திற்கு அளவேயில்லை.

"மனே, நீ நிண்டுக்கோ. இவடத்த தபால் கத்தோருக்குப் போய் பெக்ரறிக்கு ரெலிபோன் எடுத்து அப்பாட்டச் சொல்லித்து வாறன்! இதக்கேட்டா அவர் சந்தோசப்படுவார்". என்றபடி தபால் நிலையத்திற்குப் போக ஆயத்தப்பட்டாள்.

"வேணாம்மா அப்பா பின்னேரம் வருவார்தானே!"

"நீ சும்மா இரு! நான் ஓட்டத்தில போய், ஓட்டத்தில வாறன்!"

பக்கத்திலிருக்கும் உப தபால் கத்தோருக்குப் போய் பூபாலனுக்கு ராகவனின் சோதனை முடிவைச் சொல்லிவிட்டு வரும்போது முந்தானைச் சேலைத் தலைப்பால் அவள் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ராகவன் உடுப்பை மாற்றியபடி "அம்மா ரதி எங்கே போனவள்?" என்று கேட்டான்.

"அவளும் பள்ளிக்குத்தானே போனவள் ஏன் கேக்கிறா?"

"அங்க போய் இவள் என்னத்தப் படிக்கிறா? ஏ.எல். கிளாசில இருக்கிறதுக்கு கிறடிற் காணாதே! வீட்டில இருந்தாலும் படிக்கலாம்!"

"வீட்டில இருந்துதான் அவள் படிக்கப் போறாள்! இங்க இருந்தா ரேடியோக்குக்கிட்டதான் கிடப்பாள். படிக்க மாட்டாள்".

"ஏனம்மா இவள ஏ.எல் படிக்க வைக்காம நித்தாட்டிப் போட்டு, டைப்பிங் சோட்ஹேன்ட் என்று படிப்பிச்சி விட்டால் பிரயோசனமாயிருக்கும்".

"நானும் அப்படித்தான் மனே இப்ப கொஞ்சம் முன்ன வர நினச்சனான். நீயே சொல்லிப் போட்டா படிச்சிப்படிச்சி காலத்தையும், காசையும் மண்ணாக்கிறதக் காட்டிலும் தேவையான படிப்பப் படிச்சித்து ஒரு வேலையில சேர்ர நல்லது. எதற்கும் அப்பா வரட்டும் கதச்சிப் பாப்பம்".

"இண்டைக்கு என்னம்மா கறி?"

"காலம்புற இவடத்த இவன் பாக்கியராசா சூரன் மீன் கொண்டு வந்தான். ஒரு இருபது ருபாக்கு வாங்கி வெச்சிருக்கன்".

"எத்தின சூரன் மீனம்மா இருந்தது?"

"பத்து ரூபாய்க்கு எட்டாம். பத்தாப் போட்டுத்தாவன் எண்டன். இல்லெண்டுத்தான் மனே! இருபது ரூபாய்க்கு சரியாக



படிப்பகம்

www.padippakam.com



எண்ணி பதினாறு மீனத் தந்தான். என்ன செய்யிற? அப்பாக்கு நாளைக்கு கட்டுச் சோறு கட்ட பின்னேரமாப் பாத்து என்னெண்டாலும் வாங்கத்தான் வேணும்'.

பேச்சோடு பேச்சாக மாலதி குடத்தடியில் குந்தியிருந்து அரிசரிக்கத் தொடங்கினாள்.

கச்சான் காற்று மண் வாரி இறைத்தது.

''அம்மா, நானொருக்கா ரவுண் பக்கம் பொயித்து வாறன்'' என்றபடி ராகவன் சைக்கிளைத் தள்ளப் போனான்.

''இப்பதானே வந்தனீ! பின்னேரம் ஆறுதலாகப் போகலாமே! உங்களையெல்லாம் வெளியால அனுப்பிப்போட்டு நான் 'கிரேன் கிரே'னென்டு இங்க கிடந்து தவிக்கிறதெல்லாம் உங்களுக்கு எங்க தெரியப் போகுது! கவனம்! போறதும்! வாறதும்!''

அந்தளவில் ராகவன் போய்விட்டான்.

மாலதி சோறு, கறி, பொரியலென்று சாப்பாட்டை முடித்துவிட்டு மண்டப வாசலடியில் வந்திருந்து வெற்றிலை வட்டாவைத்தூக்கி வைத்துக் கொண்டு வாய் நிறையப் போட்டுக் குதப்பினாள்.

கச்சான் காற்றின் வேகம் அப்போது கொஞ்சம் குறைந்திருந்தது.

'இந்த முற நல்ல கச்சான் காத்து அடிக்குது. சரியான மாரி கொண்டாடப் போகுது!' என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டபோது சல சல....... சர சர.... என்ற சத்தத்தோடு கிணற்றடியில் நின்ற வாழை மரம் குலையோடு சரிந்து விழுந்தது.

''கடவுளே! வாழைக்குல இன்னும் சரியாக முத்தையுமில்ல. காத்தடிக்கக்குள்ள உசும்பாம நிண்ட மரம் காத்தடிச்சி ஓஞ்ச பிறகுதானே உழுந்திருக்கு! என்ன புதினம்டா இது! நான் வெச்ச முட்டுக் கம்புதான் பிலனில்லாம முறிஞ்சிப் பொயித்து. இன்னைக்கு அந்த மனிசன் வேலையால வந்தாரெண்டால் கொம்பப் போறார்''. என்று புறுபுறுத்தபடி மாலதி கத்தியை எடுத்து வாழைத் தடங்கல்களை வெட்டிக் கொண்டிருக்கும்போது தெருக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தாள். அங்கே ராகவன் வந்து கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



"அம்மோ, தம்பி ராமு பள்ளியால வந்துத்தானா?" என்று ராகவன் தாயிடம் கேட்டான்.

அவளுக்கு 'திக்' என்றது.

"இல்ல! ஏன் மனே?" என்று சந்தேகத்தோடு கேட்டாள்.

"பள்ளியெல்லாம் விட்டுத்து. வரக்குள்ள ஏத்தித்து வருவமெண்டு பள்ளியடியில போய் நிண்டன், ஆளக் காணல்ல. தம்பியோட படிக்கிற பொடிகளிட்டக் கேட்டன். ராமு இண்டைக்கு ஸ்கூலுக்கு வரல்லெண்டு சொன்னானுகள். எல்லா இடமும் தேடிப் பாத்தன். காணவேயில்ல".

"கடவுளே! கிணத்தடி வாழ சரிஞ்சி விழக்குள்ள நினச்சன். இண்டைக்கு என்னவோ இஞ்ச நடக்கப் போகுதெண்டு. அது சரியாப்பொயித்து! எங்க மனே ராமு போயிருப்பான்?"

"இவனுக்குக் கூட்டாளிமார் கனக்கப் பேர்! கூட்டத்தோடு சேந்துதான் எங்கெண்டாலும் போயிருப்பான்".

"கடவுளே! இண்டைக்கு அவர் வந்து கேட்டாரெண்டால் நான் என்ன பதில் சொல்லப்போறன்? இந்தத் தெறிப்பான் எங்க போனானோ தெரியல்லையே, மனே, ஒருக்காப்போய் அப்பாக்கு வாழச்சேனைக்கு ரெலிபோன் பண்ணி சொல்லியுடுறயா?"

"வேணாம்! அப்பா வரட்டும், இப்ப சொன்னா அவர் ஏங்கிப் போவார்? நான் சாப்பிட்டுப்போட்டு, இவண்ட கூட்டாளிமார்ர வீடுகளுக்குப் போய் விசாரிச்சிப் பாத்தித்து வாறன்! கெதி பண்ணிச் சோத்தத் தாங்க!"

"அந்தா குசினிக்க போட்டு மூடிவெச்சிருக்கன். போய் எடுத்துச் சாப்பிடு! எனக்கு மூளையெல்லாம் விறச்சி விறச்சி வருகுது!" என்றபடி விறாந்தைப் படிக்கட்டில் சரிந்து கொண்டாள் மாலதி.



படிப்பகம்

www.padippakam.com



# 13

வானம் பொலுபொலுவென அழத் தொடங்கியது.

இளைய மகன் ராமு காணாமல் போனதைத் தாங்காமல் பூபாலன் அழுதான். மாலதி அழுதாள். ராகவன், ரதி எல்லோருமே அழுதார்கள். அதைத்தான் அவர்களால் செய்ய முடிந்தது.

இவர்களைத் தேற்ற உற்றமென்றும், சுற்றமென்றும், அல்லை அயல் நண்பர்களென்றும் தினமும் வந்து தேற்றிவிட்டுப் போனார்கள். அவர்களாலும் அதைத்தான் செய்ய முடிந்தது. இப்போது இந்த வானம் அழுகிறதே இதை யாரால் தேற்ற முடியும்? தேற்றினாலும் அது தேறவா போகிறது? அதைப் போலவே சின்னவன் ராமு தொலைந்த துயரத்தை யார் தேற்றியும் தாங்க முடியாமல் பூபாலனும், மனைவி மக்களும் அழுது கொண்டேயிருந்தார்கள்.

இப்போதெல்லாம் பூபாலன் பழைய பூபாலனாகவே இல்லை. எவரோடும் அவ்வளவான பேச்சுக் கதையில்லை. கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில். அதுவும் முன் போல வளவளப்பு சளசளப்பு இல்லை. மாலதியும் கிட்டத்தட்ட அப்படித்தான். சுட்டிப் பயல் ராமு இல்லாமல் அந்த வீடே உறங்கிப் போய்க் கிடந்தது.

தேடாத இடமெல்லாம் தேடிப்பார்த்த பிறகு சின்னவன் ராமு இயக்கத்தில்தான் போய்ச் சேர்ந்துவிட்டான் என்ற முடிவிற்கு எல்லாருமே வந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



மாலதியால் இதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

ஊர் சொல்வதைப் போல பூபாலனாலும் வெளியே சொல்ல முடியவில்லையென்றாலும் அதை நம்பினான். சின்ன வயதிலேயே விளையாட்டுத் துப்பாக்கி வாங்கி வருவதற்கு அவன் பூபாலனிடம் ''அப்பா எனக்கு ஏ.கே. போட்டி செவன் வாங்கிவர வேண்டும்'' என்றவன் வளரவளர பூபாலன் கண்டு கேட்டறியாத போர் விமானங்கள் பற்றியும், குண்டு, ஷெல் வீச்சுப் பற்றியும், மெஷின்கன்னை எப்படி இயக்குவது என்றும் எல்லாம் தெரிந்த சுவானித் தம்பியர் போல சொல்லி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியவன். எதற்கும், யாருக்கும் பயமில்லாத துணிச்சல் மிக்கவன். அப்போதெல்லாம் தாய் மாலதி கண்டிப்பாள். ராகவன், ரதி ஆகியோர் அதட்டுவார்கள். ஆனால் பூபாலன் மாத்திரம் 'அவன் சின்ன பிள்ளைதானே' என்று எல்லோரையும் கண்டித்துவிட்டு, ராமுவைத் தூக்கி வைத்துச் செல்லம் பொழிவான். இன்றைக்கு அதெல்லாம் விபரீதமாக முடிந்து விட்டது.

திடீரென ஏற்பட்ட ராமுவின் பிரிவு பூபாலனையே மிகவும் தாக்கியது.

ராமு இப்படியெல்லாம் சொல்லிக் கொள்ளாமல் போனதற்கு முழுக் காரணமும் பூபாலன்தான் என்று எல்லோருமே அவன் தலையில் பழியைப் போட்டு விட்டார்கள். அவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

''வீட்டுக்கு ஒரு இளைஞன் வேண்டுமென்று கேட்டால் நாமென்ன கொடுக்கவா போகிறோம்? இப்போது அவனாகவே போய் விட்டான். நமது குடும்பத்திற்கும், போராட்டத்துக்கும் ஒரு பங்குண்டு என்று துணிந்து சொல்லலாம். அவன் செத்தாலும் வாழ்ந்தாலும் கடவுளைப் பொறுத்தது. ஏதோ நான் முற்பிறப்பில் பட்ட கடமையைத் தீர்க்க எனக்கு மகனாக அவன் வந்து பிறந்தான். போனான் என்று ஆறுதல்பட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை! என்று பூபாலன் மனைவி மக்களுக்குச் சொல்லி அவர்கள் அவன் மேல் போட்ட பழியை ஓரளவிற்துக் குறைத்துக் கொள்ள முயன்றான். ஆனாலும் அவன் மனம்



படிப்பகம்

www.padippakam.com



ராமுவின் பிரிவைத் தாங்கிக் கொள்ளாமல் தவித்ததை எவரும் அறிய மாட்டார்கள்.

இந்தத் துயரத்தினால் மூத்தவன் ராகவன் யூனிவர்சிற்றிற்குத் தெரிவு செய்யப்பட்டு போனது கூட அவனுக்கு அவ்வளவான மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

எதிலும் பிடிப்பில்லாதவனாக நடைப்பிணம் போல தாடியையும் வளர்த்துக் கொண்டு அவன் திரிவதைப் பார்க்கப் பார்க்க மாலதிக்கு வெப்பிசாரமாக இருந்தது. வேலையை விடுவதா? அல்லது தொடர்ந்து செல்வதா? என்ற போராட்டத்தில் அங்குமிங்கும் அலைந்த அவன் மனம், ராமுவின் பிரிவோடு ஒரு நிலைக்கு வந்து நின்றது.

'கூட்டுத்தாபனம் கொம்பனியாகப் போகிறது. ஆட்குறைப்பு கட்டாயம் நடக்கும். விரும்பியவர்கள் விண்ணப்பஞ் செய்யலாம்' என்ற கருத்துப்பட உலாவிய கதைகள் எங்கும் பரவி, கடைசியில் ஒருநாள் சுற்றறிக்கையுடன் வந்து நின்றது.

பூபாலன் எல்லோரையும் முந்திக்கொண்டு முதல் ஆளாக அவன் விண்ணப்பத்தைக் கையளித்தான்.

"இங்க பூபால், உன்னுடைய இளைய மகனின் பிரிவால் நீ மிகவும் கலங்கிப் போயிருக்கிறாய். அதனால் நீ வேலையை விட்டு விட்டு வீட்டில் போய் நின்றால் மேலும் துன்பம்தான் உன்னைப் போட்டுவாட்டும். இங்கே எங்களோடு சேர்ந்து உழைத்தால் உன் கவலைகளைப் படிப்படியாக மறந்து போய் விடலாம். அதோடு உன் மூத்த பையன் யூனிவர்சிற்றி படிப்பு. அவனுக்கும் நிறையப்பணம் தேவைப்படும். எவ்வளவு காலத்துக்குத்தான் கழிவுக்காசி உன்னிடம் தங்கப் போகிறது? கோப்பறேசன் கொம்பனியானால் மேலும் பல நன்மைகள் கிடைக்கும். நீயும் திறமையான தொழிலாளி. நன்றாக யோசித்துப் பார். வேலையை விட்டு விலகும் எண்ணத்தைக் கொஞ்சம் தள்ளிவை" என்றெல்லாம் நண்பர்களும், அவன் வேலை பார்க்கும் அந்த காப்பன்றி செக்ஷன் பெரியவர்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். பூபாலன், பாம்பைப் பிடித்துக் கொண்ட குரங்கு கடைசிவரையும் விடாமல் வைத்துக் கொண்டிருப்பதைப் போல 'விலகியே தீருவேன்' என்று



படிப்பகம்

www.padippakam.com



விடாப்பிடியாக நின்றான்.

எப்பொழுதும் அடிபிடிக்காரர்கள், குடித்துவிட்டுக் கொம்புபவர்கள், பொலிஸ், ஆமி, இயக்கம் என்று யாரைக் கண்டாலும் எல்லோரையும் முந்திக் கொண்டு ஓடியொழிக்கும் பூபாலனுக்கு இப்படியொரு துணிச்சல் எப்படி வந்தது? என்று எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள்.

பூபாலன் பெக்ரறிக் கதை முடிவடைந்தது.

பிரியாவிடைபெற்றுக் கொண்டு எந்தவித மனத்தாங்கலும் இல்லாமல் திரும்பினான்.

'புறவிடன்ட் பண்ட்' காசு வருவதற்கு இன்னும் சில மாதங்கள் இருந்தன. அந்தக் கால இடைவெளிக்குள் குடும்பத்தை நடத்தப்பணம் வேண்டும். கையில் ஒரு சதமும் மிச்சமிருக்கவில்லை. செக்ஷனில் அவனோடு வேலை பார்க்கும் சக தொழிலாளர்கள் பிரியாவிடைப் பார்ட்டிக்காக ஒரு லிஸ்ட் போட்டு சேகரித்த பணத்தில், செலவு போக மீதிப் பணமாக ஒரு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை பூபாலனிடம் கையளித்தார்கள். அந்தப் பணம் எத்தனை நாளைக்குப் போதுமானது? ஆகவே வாழ்க்கைச் செலவிற்காக மாலதியின் சங்கிலி, காப்பு எல்லாம் வங்கியில் அடைபட்டன. 'கிட்டத்தட்ட பூபாலனின் சம்பளப்படி ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அளவில் அவனுக்குக் கிடைக்கும். அது கைக்கு வந்து சேர்வதற்குள் ஒரு லட்சம் செலவாகி விடும் போலிருக்கிறது'. என்று மனைவி மாலதி விளையாட்டு விளையாட்டாகச் சொன்னது அந்தக் குடும்பத்திற்குள் பெரிய விரிசலையே உண்டுபண்ணி விட்டது. இதை யாருமே எதிர்பார்க்கவில்லை.

எவ்வளவு மரியாதையாக அன்பாக பேசிக் கதைத்துப் பழகியவர்கள் 'நான்'- 'நீ', 'போடா'- 'போடீ' என்ற சொற் பிரயோகங்களைப் பாவித்து கொம்பிக் கூத்தாடியதைப் பார்த்து எல்லோருமே வாயில் கை வைத்தார்கள்.

இவர்கள் திடீர் மோதலுக்கு அடிப்படைக் காரணம் இல்லாமலில்லை. பூபாலன் ராமுவின் மறைவிற்குப் பின் சாடை மாடையாகக் குடிக்கப் பழகிக் கொண்டான். இப்போது வேலையை விட்ட பின் அந்தப் பழக்கம் மேலும் அதிகரித்தது.

மாலதி எதைச் சொன்னாலும் ஏச்சுத்தான். பிறகு அடிபிடி



படிப்பகம்

www.padippakam.com



சண்டையில் வந்து முற்றுப்பெறும்.

பூபாலனின் மனதை வாட்டிக் கொண்டிருக்கும் சம்வங்கள் ஒன்று இரண்டாகி மூன்றாக வந்து நின்றது.

பட்டாளக்காரர்களைக் கண்டால் உண்டாகும் இனம் புரியாத பீதி, ராமுவின் பிரிவு உண்டாக்கிய கலக்கம். இது போதாதென்று இப்போது 'போடா வெளியே' என்று எதையும் யோசியாமல் மாலதி ஒருநாள் ஏசிய ஏச்சின் தாக்கம்.

இவை மூன்றும் பூபாலனை முதலாம் தரக் குடிகாரனாக மாற்றிவிட்டது.

காலை, மாலை, மதியம் என்று நன்றாகவே குடித்தான். எப்பொழுது பார்த்தாலும் வீட்டில் மனைவியோடும், பிள்ளைகளோடும் ஒரே சண்டைதான்.

திருமணம் முடித்து மூன்று பிள்ளைகள் தலைமுறைக்கும் கை நீட்டியறியாத பூபாலன் மாலதியின் உடம்பெல்லாம் காயங்கள் ஏற்படும் வரை அடித்தான். உதைத்தான். ஒருநாள் மிக மோசமாக அவன் நடந்து கொண்டது, மாலதிக்கு மாத்திரமல்ல பிள்ளைகளுக்கும் பிடிக்கவில்லை.

"நீ நடத்தை கெட்டவள் தானேடி" என்று பூபாலன் குற்றம்சாட்டி ஏசியதை மாலதியால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

'இதென்ன பஞ்சமா பாதகமான கதை' என்று அக்கம்பக்கத்தவர்களும் குசுகுசுத்துக் கொண்டார்களே தவிர வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. 'புருசன் பெண்சாதி சண்டை நாளைக்குச் சரியாப்போயிடும்; இடையில் நாம் போய் வாய் வைத்தால் பிறகு பழியெல்லாம் நமக்குத்தான்' என்ற எண்ணத்தில் பேசாமல் இருந்து கொண்டார்கள். 'நீ நடத்தை கெட்டவள்தானேடி' என்று அன்று பூபாலன் மிருகத்தனமாக மாலதியைத் தாக்கியபோது ராகவனும், ரதியும் பூபாலனைத் தள்ளிவிட்டு தாயின் பக்கம் நின்று, தந்தையென்ற உறவையும் மறந்து கன்னா பின்னாவென்று ஏசத் தொடங்கி விட்டார்கள்.

"இவனோட இனியும் வாழேலாது. குடிகாரன்! வாங்க பிள்ளைகள் நாம் எங்கெண்டாலும் போவம்!" என்று இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு இரவோடிரவாக மாலதி அவளுடைய தூரத்துக் கிராமத்தில் வாழும் ஒன்றுவிட்ட



படிப்பகம்

www.padippakam.com



அண்ணனிடம் போய்விட்டாள்.

இப்படி நடக்குமென்று பூபாலன் எதிர்ப்பார்க்கவேயில்லை. அவர்கள் அங்கிருந்து போன பின்னால் பூபாலன் முற்றத்திலேயே விழுந்துபடுத்துக் கொண்டான். வெறி பறந்த நிலை. நித்திரையே வரவில்லை. அந்த நேரத்திலும் அவனுக்கு சின்னவன் ராமுவின் நினைவு வந்தது.

“என்ர பிள்ளை இந்நேரம் இருந்திருந்தால் என்னை விட்டுப்போட்டு ஓடியிருப்பானா, என் பக்கத்திலேயே இருப்பான். குடிவெறியெண்டு அவளுக்குத் தெரியும். நான் ஏதோ தெரியாத்தனமாக ஏசிப் போட்டன். அதுக்காகப் போடா வெளியால எண்டு ஏசலாமா. ஏசினா நான் உடுவனா? இவளும் ஒரு பொஞ்சாதியா? போகட்டும் போறளவில போய் திரும்பி வரட்டும்” - இப்படி பூபாலன் வாய் புலம்பினானே தவிர தனக்காக தன்வாழ்நாளைத் தியாகம் செய்து கொண்டிருந்த மாலதியை ‘நடத்தை கெட்டவள்’ என்று சொல்லி விட்டோமே என்று அவன் சிந்தித்துப் பார்க்கவில்லை. அதன் தாக்கம் அவளை எவ்வளவு பாதித்திருக்கும் என்பதைக் கூட அவனால் அந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

ஒருவாரம் கடந்தும் மனைவி, மக்கள் எவருமே திரும்பவில்லை.

குளிப்பது, குடிப்பது, கடைகளில் போய்ச் சாப்பிடுவது இப்படியே அவன் பொழுது கழிந்தது.

‘நன்றாக வாழ்ந்த குடும்பம். இப்படிச் சிதறிப் போய் விட்டதே!’ என்று பலரும் பரிதாபப்பட்டுக் கொண்டார்கள். மாலதியும், பிள்ளைகளும், ஓடிச்சென்று அடைக்கலம் புகுந்த வீட்டுக்காரனான அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரன் மாலதியின் வாயால் முழு விபரத்தையும் கேட்டுவிட்டு ‘இவனைக் கோடேற்றிப் பிரித்து விட வேண்டும்’ என்று கச்சை கட்டிக் கொண்டு நின்றானே தவிர சமரசம் செய்து வைக்க அவன் தானும் முயற்சிக்கவில்லை. அவனும் ஊரறிந்த குடிகாரன். பாவம் மாலதி! அவன் கொடுத்த கயிற்றை அறியாத்தனமாக விழுங்கிக் கொண்டாள். மொத்தத்தில் கஷ்ட காலம் அவர்கள் குடும்பத்தைப் போட்டு ஆட்டாமல் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. இந்தச் சிக்கலுக்குள் பூபாலனின்



படிப்பகம்

www.padippakam.com



கொடுப்பனவுகள் யாவும் வந்து சேர்ந்தன. அவன் சற்று உசாரானான். அவனை மனச்சாட்சி உறுத்தியது. அதன்படி நடப்பதே நல்லது என்பதும் அவனுக்குப் புலப்பட்டது. வெளிக்கிட்டுக் கொண்டு வங்கிக்குச் சென்றான். இரண்டு பிள்ளைகளுக்கும் அவரவர் பெயரில் கணக்குகளைத் திறந்து, சரி சமமாக ஒரு தொகையைப் போட்ட கையோடு மிகுதியில் கொஞ்சப் பணத்தை மாலதியின் பெயரிலும் கட்டிவிட்டு மற்றதை அவன் பெயரில் அன்றாட செலவிற்கு எடுப்பதற்காகப் போட்டுவிட்டு வந்தான்.

பூபாலனுக்குப் பணம் கிடைத்த செய்தி ஊரவர்களுக்குத் தெரியாதபோதும் கொஞ்ச நாளாக அவனுடைய போக்கில் சிறுமாற்றம் ஏற்பட்டிருப்பதை அவதானித்தார்கள்.

காலை, மதியம், இரவென்று தினமும் குடித்து வெறித்தவன் இப்போதெல்லாம் இரவில் மாத்திரம் குடிக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டான். என்றாலும் ஒழுங்கான சாப்பாடு இல்லை. பலவேளைகளில் சாப்பாடு இல்லாமலேயே படுத்து விடுவான். இரவில் கொஞ்சம் ஓவராகப் போட்டுவிட்டால் “மகனே ராமு! மகனே ராமு! அப்பாவையும் வந்து கூட்டித்துப் போடா!” என்று பலத்த சத்தம் போட்டுக் கத்துவான்.

நாட்கள் நகர நகர பூபாலனுக்கு தான் நடந்து கொண்ட விதம் பிழையென்பது பிடிபடத் தொடங்கியது. மாலதியை அடித்திருக்கலாம். ஆனால் ‘நடத்தை கெட்டவள் என்று ஏசியிருக்கவே கூடாது’ என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வான். நாட்கள் பல கடந்தும் மனைவி மக்கள் திரும்பவே யில்லை. எப்படியும் அவர்கள் தன்னைத் தேடி வரத்தானே வேண்டும். இன்றைக்கு வருவார்கள், நாளைக்கு வருவார்கள் என்று எதிர்ப்பாத்துப் பார்த்துப் பார்த்து அவர்கள் வராமல் விட்டதனால் அவனுக்கு பலத்த யோசனை பிடிக்க ஆரம்பித்தது.



படிப்பகம்

www.padippakam.com



# 14

வெயில் 'சுள்'ளென்று எரித்தது. மாரிக்கால வெயிலுக்கு எப்போதுமே ஒரு வரவேற்பு இருக்கும். பொதுவாக மனிதர்களின் மனங்கள் ஒரு நிலையில் இருப்பதில்லை. எதையும் எப்போதும் ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பதுமில்லை. வெயில் காய்ந்தால் அதைத் தாங்கிக் கொள்ளாமல் 'என்ன வெயிலப்பா இது? இன்னும் மழையைக் காணவில்லையே' என்று ஏங்குவார்கள். மழை பெய்யத் தொடங்கினால் 'சைக்-கொஞ்ச நேரமாவது இந்த மழை வெட்டார்ந்து வெயில் எரிக்காதா?' என்று பரிதவிப்பார்கள்.

தொடர்ச்சியாகப் பெய்த மழை அன்று கொஞ்சம் ஈவு கொடுத்தது. பூபாலன் சைக்கிளை 'மெட்ராஸ் கபே'க்குப் பக்கத்தில் வைத்துவிட்டு உள்ளே போய் இரண்டு இட்டலிகளோடு சம்பலையும் சேர்த்து வயிற்றுக்குள் தள்ளிவிட்டு 'பிளேன்டி'யையும் குடித்து அன்றைய காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டான்.

நேரம் ஒன்பது மணி.

நேரே 'பிறிச்' செய்யும் முருகேசரைப் போய்ச் சந்தித்தான். மீன்களை குளிரூட்டி வைக்கும் பிறிச் செய்வதில் மகா சமர்த்தர் முருகேசர். வெளியில் வாங்கும் கொம்பனிப் பிறிச்சை விட முருகேசர் செய்யும் பிறிச் திறமானது. நீண்ட காலம் நின்று பிடிக்கும். இதெல்லாம் பூபாலன் பலரிடம் கேட்டறிந்த விஷயங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



முருகேசரிடம் விஷயத்தைச் சொன்னான்.

அளவு, சைஸ், பெற்றன் எல்லாம் கேட்ட பிறகு 'முப்பத்து மூவாயிரம் பிடிக்கும், ஒரு மாதத்திற்குள் முடித்துத் தருவன், முதலில் பதினைந்தாயிரம் அட்வான்ஸ் பிடிக்கும்' என்றார் அவர்.

'சரி'யென்று கையோடு கொண்டு போன இருபதாயிரத்தில் பதினைந்தாயிரத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டு, நம்பிக்கையோடு திரும்பினான்.

வேலையை விட்டு விலகும்போது மேலதிகமாக அவன் வேலை பார்த்த வருடங்களைக் கணக்கிட்டு 'கொம்பன் சேசனாக' நாற்பதாயிரம் கிடைத்தது. இந்தப் பணத்தை அவன் தனியாக வைத்திருந்தான். அதுதான் இப்போது 'டீப்பிறிசராக' உருமாறப் போகிறது. முருகேசரிடம் 'அட்வான்ஸ்' கொடுத்துவிட்டு பாஞ்சாலை றோட்டால் வரும்போது சைக்கிள் அவனையுமறியாமல் எதிரேயிருந்த 'கிங்ஸ் ஹொட்ட'லடியில் போய் நின்றது. சைக்கிளைச் சாத்திவிட்டு நன்றாக 'கிக்' ஆகும்வரை குடித்துவிட்டு எழுந்தான். மத்தியானம் சாப்பாடு வேண்டும். வரும்போது 'றசீதியா, ஹொட்ட'லில் ஒரு பிரியாணிப் பார்சலையும் வாங்கிக் கொண்டான். சைக்கிள் கிண்ணறம் பாடியது.

வீட்டுக்கு வந்து உடுப்புகளை மாற்றிக் கொண்டு பிய்ந்து போய்க் கிடந்த சாய்வு நாற்காலியில் தலையணையைப் போட்டுச் சாய்ந்து கொண்டான். மனைவி, பிள்ளைகளின் நினைவு வந்தது.

'இவர்களுக்கு எவ்வளவு வைராக்கியம். அவள் மாலதிக்குத்தான் அப்படியென்றாலும் பிள்ளைகளுக்குமா அந்த வைராக்கியம் இருக்க வேண்டும்? எல்லாம் நான் விட்டபிழைதான். போய் ஒருக்கால் அவர்களைக் கூட்டிக் கொண்டு வருவோமா? சே! அப்படிப் போனால் என்னைப் பற்றி மனைவி மக்கள் மாத்திரமல்ல, ஊரும் நையாண்டி செய்யும். வாற நேரம் வரட்டும். வந்தால் அதற்குப் பிறகு எவ்வளவு ஆத்திரம்தான் வந்தாலும் அவர்களை எதுவும் ஏசக் கூடாது' இப்படிப் பலவாறாக எண்ணியபடி பூபாலன்



படிப்பகம்

www.padippakam.com



இருக்கையை விட்டு மெல்ல எழுந்தான்.

இன்னுமொரு 'கால்' அடித்தால்தான் பிரியாணியைச் சாப்பிடலாமென்று அவன் மனம் சொல்லிற்று.

வீட்டைப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டு அந்த மட்டிக்கழிக் கிராமத்தில் கள்ளக்களவில் சாராயம் விற்கும் அரசனிடத்தில் சென்றான்.

"வாங்க பூபாலண்ணே கன நாளைக்குப் பிறகு... என்ன வெள்ள வேணுமா? கறுப்பு வேணுமா?.." என்று பூபாலனை சிரித்த முகத்தோடு வரவேற்றான் அரசன்.

அவன் வெள்ளை என்று குறிப்பிட்டது விஷ சாராயத்தைத்தான். மற்றச் சாராயத்தை விட மலிவு விலை. உள்ளூர் தயாரிப்பு.

"உனக்குத்தான் தெரியுமே நான் வடி குடிக்கிறல்ல! மற்றதில் ஒரு கால் தா!" என்றான். அரசன் ஊற்றிக் கொண்டுவந்து கொடுத்தான்.

மறுபேச்சுப் பேசாமல் ஒரு பெரிய கிளாசில் அதை ஊற்றி, ஒரே இழுவையில் முழுவதையும் இழுத்து விட்டு, "இந்தா காசி" என்று பணத்தைக் கொடுத்தான்.

அரசன் பணத்தை வாங்கிப் பெட்டியில் போட்டுவிட்டு, "அண்ணே, மெய்தான் உங்கட்டக் கேக்கோணுமெண்டிருந்தனான். இப்ப உங்கட பிரச்சினையெல்லாம் எப்படியிருக்கு? என்னவோ உங்கள வழக்கு வெச்சி உங்கட மனிசி பிரியப்போறதாமெண்டு கதையடிபட்டுது. மெய்தானா?" என்று கேட்டான்.

"நானும் கேள்விப்பட்டன். ஆனா அதில உண்ம இருக்காது. இது என்ன வெருட்டுறதுக்குக் கட்டியுட்ட கத. உனக்குத் தெரியும்தானே. என்ட மனிசிட ஒன்றவிட்ட அண்ணனைப் பத்தி. அவனும் ஒரு மனிசனா! சரி, நமக்கென்னத்துக்கு அவன்ட இவன்ட கத. எனக்கும் இப்ப காலம் சரியில்ல அரசன். ரெண்டு மூணு இடத்தில சாத்திரம் கேட்டன். ஏழரச் சனி பிடிச்சிருக்காம். இந்த வாற பங்குனியோட கழிஞ்சி பொயிடுத்திடுமாம். எனக்கெண்டால் நம்பிக்கையில்ல! நீ இன்னொரு ட்றாம் தா! இருக்கிற கவல கஷ்டத்துக்க



படிப்பகம்

www.padippakam.com



எவ்வளவத்தான் குடிச்சாலும் வெறிக்குதில்ல''. இதைக் கேட்டுக் கொண்டே சாராயத்தை அவன் கேட்டபடி ஊற்றிக் கொடுத்தான் அரசன். அதையும் வாங்கி ஒரே மூச்சில் தொண்டைக்குள் ஊற்றிக் கொண்டான் பூபாலன். அதை அவதானித்த அரசன் சொன்னான்.

"பூபாலண்ணே, இப்பிடி ஒரேயடியா முழுச் சாராயத்தையும் தொண்டைக்க ஊத்துறீங்களே! ஈரலத் தாக்கும்'' என்றான்.

"என்ன செய்யிற அரசன்! இப்ப எல்லாம் அவசரம்! ஆற அமர்ந்திருந்து கதச்சிக் கதச்சிக் குடிக்க இது காலமா? இப்பவும் எதால ரோந்து வாறானுகளோ, தெரியாது'' என்று பூபாலன் சொல்லியபடி "இந்தா அரசன் இப்பெடுத்த சாராயக் காசி'' என்றான்.

"மெய்தான் பூபாலண்ணே, உங்கட இளைய பொடியனப் பத்தி இன்னும் சரியாக ஒரு முடிவு தெரியா எலுவா?''

அவ்வளவுதான் பூபாலனின் கண்கள் குளமாகின.

"என்ர பிள்ள எங்க இருக்கிறானோ! இல்லாட்டிச் செத்துத்தான் பொயித்தானோ. ஒண்டுமே தெரியாதரசன்! தேடித்தேடி அலுத்து, நான் எல்லாத்தையும் மறந்து பொயித்தன். அவன் பிள்ள இருந்திருந்தா நான் இப்படியா அலஞ்சி திரிவன். ம்... எல்லாம் கால பலன்!'' என்று மூக்கைச் சீறினான்.

"அண்ணே, இதுக்காக நீங்க கவலப்படத்தேவல்ல. அவன் எங்கயும் இல்ல. அங்கதான்... சரியான இடத்திலதான் போயிருக்கான். அவன்தான் உண்மையான வீரத்தமிழன். எதுக்கு இருக்கிறமே நாமெல்லாம்... நம்மையெல்லாம் வேற லிஸ்றில தான் சேக்க வேணும். நான் உண்மையைத் தான் சொல்லுறன். இவனுகள் செய்யிற அட்டாதுட்டித்தனத்தப் பாத்துப்போட்டு நானும் உங்கட பொடியனப்போல போகத்தான் ஆசப்பட்டனான். நமக்கும் ஆயிரத்தெட்டுக் காவடிகள். அத நினச்சி என்ர எண்ணத்த விட்டுத்தன். நீங்க வேலயயும் விட்டுத்தயளாமெண்டும் கேள்விப்பட்டன். சும்மா இருந்து என்ன செய்யப்போறயள்? ஏதாவதொரு தொழிலப்பாக்கத்தானே வேணும்! உங்களுக்கென்ன! கைத்தொழில் தெரியும். நாமதான் ஒண்ணும் செய்துக்க ஏலாம இந்தச் சாராயத் தொழிலச்செய்யிறன''.



படிப்பகம்

www.padippakam.com



"வயது போன காலத்தில ஓடாவித் தொழில் செய்யிறது கஷ்டம் அரசன். நான் ஒரு 'டீப் பிறிசர்' வாங்கித் தொழில் செய்யத்திட்டம் போட்டிருக்கன்".

"என்ன?"

"நம்ம ஊரிலதானே நல்ல மீன் பிடிபடுது. அதனாடி இவன் முருகுப்பிள்ளையைப் போல ஒரு பிறிச்ச வாங்கி மீனக் குளிர் பண்ணிக் கொடுத்தால் நம்மட சோத்த நாயும் தின்னாது!"

"சோக்கான தொழில்! செய்யுங்கண்ணே! நானும் இந்த நரகல் தொழில உட்டுப்போட்டு மீன் யாவாரம் செய்யப் போறன்.!"

"அப்ப சரி அரசன் நான் வரப் போறன்!"

"சரியண்ணே, என்னவோ சண்டையக் கிண்டயப் புடிக்காம பொஞ்சாதி புள்ளையைக் கூட்டி வந்து சந்தோசமா வாழப் பாருங்க. சண்டையும் வாறதான் சமாதானமும் வாறதான். அது வாழ்க்க! இஞ்ச வீட்டிலயும் சண்ட அடிபிடிதான். என்ன செய்யிற! எல்லாப் பொண்டுகளும் ஒரே மாதிரித்தான். நாமதான் கொஞ்சம் உட்டுக்கொடுக்க வேணும். இதையெல்லாம் தெரிஞ்சிதானே சிவபெருமானும் பார்வதிய தன்ர உடலோட சேத்திருக்கிறார். ஏதோ 'அஜஸ்ற்' பண்ணுங்க. சரி நேரம் பொயித்து, பொயித்து வாங்க!" என்றான் அரசன். அந்தளவில் பூபாலன் சைக்கிள் சாரைப் பாம்பாக அங்குமிங்கும் நெளித்து ஓட ஒருமாதிரியாகச் சமாளித்துக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



# 15

தெரு நீளத்திற்கும் நாய்களின் பயங்கர சத்தம். பள்ள வளவில் தேங்கிக் கிடக்கும் மழை நீரில் கிடந்து ஓய்வில்லாமல் இரையும் தவளைகளின் சத்தம். தூரத்தில் சித்திரை வருடப்பிறப்பன்று கேட்கும் சீனா வெடிகளைப் போல திக்குத்திக்காக துப்பாக்கி வேட்டு சத்தங்கள்.

பூபாலன் பிரியாணிப் பார்சலை எடுத்து மளமளவென்று சாப்பிட்டு விட்டு மண்டபத்திற்குள் விழுந்து படுத்துக்கொண்டான். நித்திரை வருவதாயில்லை. 'கும்'மென்ற இருட்டில் அவனுக்கு விதவிதமான எண்ணங்கள் உருவாகி பயத்தை உண்டு பண்ணியது.

'இந்த ஆமியோட திரியிற இயக்கக்காரனுகளுக்கு நான் தட்டத்தனிய கிடக்கிறது நல்லாவே தெரியும். 'பண்ட்' காசி எடுத்த விசயமும் சாடை மாடையாகத் தெரிஞ்சிருக்கும். சில வேளை அவனுகள் வந்து துவக்கக் காட்டி என்ன வெருட்டி' இதற்கு மேல் சிந்தித்துப் பார்க்கவே பூபாலனால் முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



'என்னதான் வந்தாலும் சரி, விடிஞ்சதும் முதல் வேலையாக வெக்கத்த ரோசத்தப் பாக்காமப் போய் மாலதியின் கால்கள்ள விழுந்தாவது அவளையும், பிள்ளைகளையும் கூட்டித்து வரவேணும். அவள் வந்த பிறகு பண்ட் காசிர விபரங்களைச் சொல்லி, அவளுடைய ஈட்டிலிருக்கும் மாலை காப்புகளையும் எடுக்க வேணும். எதுக்கும் விடியட்டும்' என்று எண்ணியபடி படுத்த பூபாலனுக்கு நெஞ்சு, வயிறெல்லாம் குத்துவலி எடுக்கத் தொடங்கியது. இடது கையும் மணிக்கட்டு வரை கடுகடுத்தது. கூசாவில் நிரப்பி வைத்திருந்த குளிர்ந்த நீரை வயிறு முட்டக் குடித்தான். முற்றத்தில் இறங்கி சற்று உலாத்தினான். எதற்கும் சரி வரவில்லை.

'இப்போது மாலதி இருந்தால் துடிச்சிப் போவாள். அவள், பக்கத்திலிருந்து பச்சதண்ணியத் தந்தாலும் சீவனக் கொண்டு போக வந்த நோய் கூட ஓடிப் போயிரும். மனைவியின் துணையும், அவள் சேவையும் இப்படி அவள் இல்லாத போதுதான் உணர முடிகிறது. நான் அவளை அடித்தது, வம்பு தும்பாகவெல்லாம் ஏசியது கொடும! அதுக்குத்தான் கடவுள் என்ன இப்படிப்போட்டு தனிமையில சித்திரவதப் படுத்துகிறார்!'என்றெல்லாம் அவன் மனம் வேதனை நிறைந்த அந்த நேரத்தில் கூட எண்ணிப் பார்த்து வருத்தப்படத்தான் செய்தது. குத்து வலி தணிந்தபாடாகத் தெரியவில்லை. சட்டென மீண்டும் மண்டபத்திற்குள் வந்து ஏதாவது பெனடோல், டிஸ்பிறின் இருக்கிறதா என்று பார்த்தான்.

மேசையில் ஒரு ரின்னுக்குள் இரண்டு பெனடோல் கிடந்தது. அப்படியே அதையெடுத்து விழுங்கித் தண்ணீரைக் குடித்தான். குத்துவலி எதற்கும் மசியவில்லை. என்ன செய்யலாம்...? என்று யோசித்தபோது பக்கத்து வீட்டு மாணிக்கத்தின் நினைப்பு வந்தது. சட்டென வேலியோரம் சென்று 'மாணிக்கம், தம்பி மாணிக்கம்" என்று குரல் கொடுத்தான்.

சத்தம் கேட்டு மாணிக்கம் வந்தான்.

"என்ன பூபாலண்ண?"

"எனக்கு கொஞ்சம் சுகமில்ல. நெஞ்சு வயிறெல்லாம் குத்து வலியாக் கிடக்கு!"



படிப்பகம்

www.padippakam.com



அதைக் கேட்டதும் சாப்பாட்டு பீங்கான்களோடு மாணிக்கத்தின் பிள்ளைகளெல்லாம் அங்கே வந்தார்கள். அவன் மனைவி செண்பகமும் ஓட்டத்தில் வந்தாள்.

"உரமாயிருக்காண்ண?" பரிவோடு கேட்டாள் செண்பகம்.

"ஓம் பிள்ள, உலுவாரிசியும், வெள்ள வெங்காயமுமிருந்தால் கொஞ்சம் போல அவிச்சித்தா பிள்ளை".

அந்தளவில் செண்பகம் ஓடிப்போய் அதைச் செய்து கொண்டு வந்து துரித கதியில் கொடுத்தாள்.

நின்ற நிலையிலேயே குடித்து விட்டு, நெஞ்சை உருவிவிட்டான் பூபாலன். "என்னண்ணே இப்ப எப்படியிருக்கு?"

"கொஞ்ச நேரம் போனாத்தான் தெரியும் பிள்ள!"

"பாப்பம், இதுக்குச் சரிப்பட்டுவராட்டி விடியவும் ஆசுபத்திரிக்குத்தான் கொண்டுபோய்க் காட்டவேணும்!"

"அப்படித்தான் செய்ய வேணும். எங்க இப்ப இந்த இரவு நேரத்தில ஒரு காரக் கரத்தையப் புடிச்சி ரவுண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாமா? சாகிற வருத்தமெண்டாலும் விடிஞ்ச புறகுதான் போகலாம்!"

"மெய்தானாண்ண உங்கட இளையபுள்ள ரதியும் கலியாணம் முடிச்சித்தாளாம். இவடத்தயிருந்த எங்களுக்கும் ஒருவாத்த சொல்லலையே!"

"இப்படி செண்பகம் சொன்னதும் பூபாலனுக்குத் தூக்கிவாரிப் போட்டது."

"கடவுளே தம்பிரானே எனக்கு ஒரு இழவும் தெரியா பிள்ள! இப்ப நீ சொல்லித்தான் கேள்விப்படுறன். ம்... இப்ப நான் எல்லோருக்கும் நாயிலையும் கேடாப் பொயித்தன். நடக்கட்டும். நடக்கட்டும். எங்க போய் முடியப் போகுதெண்டுதான் பாப்பமே!"

"நாங்க உங்களுக்கும் தெரியுமாக்குமெண்டுதான் நினைச்சிருக்கம்".

"இல்ல பிள்ள. சத்தியமாத் தெரியாது. ஆராம் மாப்பிள்ள?"

"எல்லாம் ஒண்டுக்க ஒண்டுதான். மாலதிட ஒண்டவிட்ட அண்ணன்ட மகனாம். சீ-ரி-பியில ட்றைவர் வேலையாம். உங்கட பிரச்சினைக்குள்ள பிரச்சினையாக நல்ல காரியமும் நடந்து பொயித்து. இனியுங்களுக்கு கை இளப்பாத்தி தானே!"



படிப்பகம்

www.padippakam.com



"இதனாடித்தான் பிள்ள செண்பகம், இவள் மாலதி இவ்வளவு நாள்பட்டும் இஞ்ச வீட்ட வரல்ல! ம்... எல்லாம் என்னால வந்த வினை!"

"என்னவோ நல்ல காரியம்தானே நடந்திருக்கு. நீங்களும் இனிமேபட்டுக் கனக்கக் குடியாதிங்க. அவள் மாலதி பாவம். அப்பாவி. நல்ல பிள்ள. கூப்பிட்டா வருவாள். உங்களுக்குப் பயத்திலதான் அவள் அங்கயிருக்காள்".

"எனக்கு இதெல்லாம் தெரியாதா பிள்ள! என்ன செய்யிற! எனக்கும் கால பலன் சரியில்ல!"

"அதுதானே! நாங்களும் உங்களப்பத்தி பிழையா நினைக்கல்ல. மிதிச்சாப் புல்லும் சாகாம நடக்கிற மனிசன் ஏன் இப்பிடி ஆகித்தாரெண்டு நானும் இவரும் நேத்தும் கதச்சனாங்கதான். காலம் சரியில்லாட்டி அது ஆரையும் பாக்காதண்ண. இப்ப எப்பிடி நெஞ்சுக் குத்து?"

"கொஞ்சம் தணிஞ்ச மாதிரிக் கிடக்கு. இவள் பிள்ள ரதிட கலியாணத்தப் பத்திக் கேட்ட பிறகுதான் வேற வருத்தமெல்லாம் வரும் போலயிருக்கு!"

"ஒண்டையும் யோசியாமப் போய்ப்படுங்க. எல்லாம் சரியாப் பொயித்திடும். அப்பிடி என்னவும் உரமாயிருந்தா எங்கள எழுப்புங்க! இவடத்த 'கேம்ப்பு'க்கு அயிக்கன் லாம்பக் கொளுத்தித்துப் போய் விசயத்தச் சொல்லி இவன் ஏரம்புட ஓட்டோவையெண்டாலும் புடிச்சித்துப் போகலாம்!"

"ஓம்புள்ள பெரிய உபகாரம். மாணிக்கம் நான் வாறன்" என்றபடி பூபாலன் பழையபடி வந்து படுத்துக் கொண்டான்.

அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போன நிலை. நாட்டில் வேறு பிரச்சினை. வீட்டில் வேறு பிரச்சினை! நாட்டுப் பிரச்சினைதான் முடிந்தாலும் வீட்டுப்பிரச்சினை இந்த நாளில் முடியாது போல அவனுக்குப்பட்டது. அன்றிரவெல்லாம் நித்திரையே இல்லாமல் படுக்கையில் கிடந்து புரண்டான்.



படிப்பகம்

www.padippakam.com



# 16

ஒரு வாரம் ஆசுபத்திரி வாட்டிலிருந்து சிகிச்சை பெற்று விட்டு பூபாலன், மாலதியோடு ஒட்டோவில் வந்து இறங்கினான். ரதி-கணவன் எவரும் ஆசுபத்திரிக்குக் கூட வந்து பூபாலனைப் பார்க்கவில்லை. ராகவனும் வரவில்லை. மாலதி எவ்வளவோ சொல்லியும் அவர்கள் ஒரேயடியாக மறுத்துவிட்டார்கள். அவர்கள் பிள்ளைகள். கல் மனம். அப்படி மாலதியால் இருக்க முடியுமா? ஆயிரம்தான் என்றாலும் முதன் முதல் தொட்டுத் தாலி கட்டிய புருசனல்லவா?

பூபாலனை வாட்டில் கொண்டு போய் வைத்தவன் மாணிக்கம்தான். அன்றிரவு மாணிக்கமும், மனைவி செண்பகமும் கொடுத்த கை மருந்துக்கு குத்துவலி கொஞ்சம் குறைந்திருந்தாலும் விடிந்ததும் மீண்டும் தாங்க முடியாத வலி எடுக்கத் தொடங்கியது. உடனடியாக மாணிக்கம் ஏரம்பின் ஒட்டோவில் பூபாலனை ஏற்றிக் கொண்டு ஆசுபத்திரியில் கொண்டு போய்க் காட்டினான். அவனைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர், “அளவுக்கு மீறிய குடியால் ஈரலைத் தாக்கிவிட்டது. வாட்டில் வைத்துத்தான் சுகமாக்க வேண்டும். இன்னும் ஒரு சில நாள் தாமதித்திருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும்!” என்றார்.



படிப்பகம்

www.padippakam.com



வாட்டில் வைத்த கையோடு மாணிக்கம் பூபாலனின் விருப்பத்தின் பேரில் மாலதிக்குத் தந்தி கொடுத்திருந்தான். தந்தியைக் கண்டதும் அவள் துடித்துப் பதைத்து ஆசுபத்திரிக்கு ஓட்டத்தில் வந்தாள். பெண்கள் மனமே இப்படித்தான். சண்டை பிடிப்பார்கள். சச்சரவுபடுவார்கள். ஏசுவார்கள். கோபித்துக் கொண்டு ஓடுவார்கள். ஆனால் கணவனுக்கு ஏதுமென்றால் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். துடிதுடித்துப் போவார்கள். ஆண்களை விடப் பெண்கள் மனதில்தான் ஆண்டவன் இரக்கம், பாசம் என்பதை அளவிற்கதிகமாகவே வைத்திருக்கிறான்.

மாலதிக்கு தன் கணவன் பூபாலனைப் பற்றி நன்றாகவே தெரியும். அவன் இல்லாமல் அவளும், அவள் இல்லாமல் அவனும் எப்போதுமே பிரிந்து தனித்தனியாக வாழ முடியாதபடிதான் அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்ந்தார்கள். இடைநடுவில் எதிர்பாராத விதமாக அவர்கள் குடும்பத்தில் உண்டான பிரச்சினையால் பூபாலன் மாத்திரமல்ல, மாலதியும் மனமுடைந்துதான் போயிருந்தாள். பூபாலன் ஆண்பிள்ளை என்பதால் கவலைகளை மறக்க குடித்தான். வெறித்தான்! தன் இஷ்டப்படியெல்லாம் வாழ்ந்தான். ஆனால் மாலதியால் அப்படியெல்லாம் வாழ முடியுமா? அவள் அன்று கோபித்துக்கொண்டு போகும்போது உடுத்தியிருந்த உடையோடுதான் இன்றும் இருக்கிறாள். நெற்றியில் குங்குமத் திலகம் பளிச்சென்று தெரிகிறது. விழியிரண்டும் நீரிறைக்க இத்தனை நாளும் அவள் வாழ்ந்த வாழ்க்கையைப் பூபாலன் அறியமாட்டான். ஒழுங்கான குளிப்பில்லை. சரியான சாப்பாடில்லை. நிம்மதியான நித்திரையில்லை. பூபாலனுக்குத் தெரியுமா?

ரதியின் திருமண விஷயத்தில் கூட அவள் பங்கில்லை. அவர் இல்லாமல் திருமணம் செய்வது முறையில்லையென்று தான் அவள் இறுதிவரை வாதாடினாள்.

அவளுடைய அண்ணனின் வற்புறுத்தலினாலும், ரதியும்-அவள் கணவனும் ஆளையாள் தாமாகவே விரும்பிக் கொண்டதினாலும் எல்லோரும் ஒரு பக்கம் நிற்க மாலதி மறுபக்கம் தனித்து நின்றும், அவள் வெற்றி பெறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



எப்படியோ ஒரு பாடாக திருமணப் பதிவு அங்கேயே நடந்து முடிந்தது. இதையெல்லாம் அவள் தன் கணவனுக்குச் சொல்லி அவன் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்காவிட்டால் அவள் மனம் ஆறவே ஆறாது. அந்த முடிவோடுதான் அவளிருந்தாள்.

பூபாலனும், மாலதியும் ஓட்டோவை விட்டிறங்கி வீட்டிற்கு வந்தார்கள். பூபாலன் எதுவும் பேசாமல் மெதுவாக வந்து மண்டபத்திற்குள் அமர்ந்தான்.

மாலதி அழத் தொடங்கி விட்டாள். நடந்த சம்பவங்களையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லி அவன் கால்களில் விழுந்தாள்.

அவன் அவளை அப்படியே அணைத்தெடுத்து "மாலதி நான் தான் உன் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். நான் அன்று உன்னை ஏசி, அடித்து, நடத்தை கெட்டவள் என்றெல்லாம் அவதூறாக ஏசியதற்கு ஆண்டவன் எனக்கு நல்ல தண்டனையைக் கொடுத்து விட்டான். நான் இனிமேல் சத்தியமாகக் குடிக்கப் போவதில்லை. எல்லாம் இந்தக் குடியால் வந்த வினைதான்" என்று சொல்லியபோது பூபாலனும் அழுதே விட்டான்.

"நான் இல்லாதபடியால்தானே நீங்க உங்கட விருப்பத்துக்கு குடிகுடியென்று குடிச்சி உங்கள நீங்களே கெடுத்துக் கொண்டயள்? உங்களுக்கு என்னவுமென்றால் என்னால தாங்கேலுமா? நீங்களாவது பிள்ளைகள நம்பித்தான் பிற்காலத்தில வாழப்போவதாக அடிக்கடி சொல்லுவீங்க! நான் எவரையுமே நம்பல்ல, பிள்ளைகளெல்லாம் அவர்கள் பாட்டுக்கு ஒன்டையொண்டத் தேடியெடுத்துத்து ஓடிப் போயிருங்கள். ஆனா எனக்கு உங்கள விட்டால் வேறு ஆரிருக்கா!"

அவள் மனமுருகிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு பூபாலன் சொன்னான். "மாலதி, என்னவோ நடந்ததெல்லாம் நடந்து முடிஞ்சிப் பொயித்து! இனிமே நீ எதச் சொல்லுறயோ அதுக்கு நான் ஓம்தான்!"

"என்னெண்டாலும் தலையாடாம வாலாடுறதா? அது முறையல்ல"

"நானிப்ப தலையுமில்ல! வாலுமில்ல எல்லாமே நீதான். அந்தா அலுமாரிக்க மேல்தட்டில வங்கியில போட்ட தொகை



படிப்பகம்

www.padippakam.com



போக மிச்சப்பணம் கொஞ்சத்த வெச்சிருக்கன். பிறிச்காரனுக்கு பதினெட்டாயிரம் கொடுக்க வேணும். வங்கியில ஈடுவெச்ச உண்டமால, காப்புகளையும் எடுக்க வேணும். நீ எது செய்யப்போறயோ செய்!''

"இதைக் கேட்டதும் என்ன நீங்க பிறிச்சிக்கெல்லாம் ஓடர் கொடுத்துப் போட்டயளா'' என்று ஆவலோடு கேட்டாள்.

அவன் ஆதியோடந்தமாக 'புறவிடன்ட் பண்ட்' வந்தது முதல் 'பிறிச்'சுக்கு அட்வான்ஸ் கொடுத்தது ஈறாக முழுவதையும் அவளுக்குச் சொன்னான். அவள் அதைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை.

"எனக்கு உங்களப் பத்தித்தெரியும். எவ்வளவுதான் என்றாலும் மத்தவங்களப் போல நீங்க வீண் செலவு செய்ய மாட்டீங்க. ஆனா நீங்க பிள்ளைகளுக்கு அவங்கட கணக்கில பணம் போட்டிருக்கத் தேவல்ல. எனக்கும் நீங்க கொஞ்சப் பணம் போட்டிருக்கிறதாகச் சொல்லுறீங்க. எனக்கும் வேணாம். பிறிச்வெச்சித் தொழில் செய்து நம்மளால காலம் தள்ளேலுமெண்டு நான் நினைக்கவில்ல. நாளைக்கு உங்களுக்கு ஏதும் காலுக்குக் கைக்கு பொல்லாப்பு வந்துத்தெண்டால் செலவழிக்கக் காசி வேணும். முழுப் பணத்தையும் உங்கட பேருக்கே போட்டு வையுங்க. உங்களுக்கென்ன பென்சனா வரப்போகுது? இந்தக் காச நம்பித்தானே நம்மட சீவியமெல்லாம் போக வேணும். மூத்தவனுக்கு அவன்ட படிப்புக்குக் கொஞ்சத்தக் குடுக்கலாம். இன்னும் ஒரு வருசம் போனா அவன் புள்ள உழச்சித் தருவான். இளையவளுக்கும் கையில ஏதாவது கொஞ்சத்தக் குடுத்துடுங்க. என்ன நான் சொல்லுறது சரிதானே?''

"சொல்லு, சொல்லி முடி''

"நடந்ததெல்லாம் நடந்து பொயித்து. உங்கள்ளையும் பிழதான்! எங்கள்ளையும் பிழதான்! இனிமே அதக் கிண்டிக் கிழறிப் பிரயோசனமில்ல. வாற ஒரு நல்ல நாள் பெருநாள்ள ரதியையும், மருமகனையும் கூட்டிக் கொண்டு வந்து இந்த வீட்டில் வைப்பம், ஊடுவாசல் எல்லாத்தையும் அவங்கட பேருக்கு மாத்தி எழுத வேணும். எல்லாத்தையும் எழுதிக்குடுத்த பிறகு நாம இவங்களோட ஒட்டிக்கொண்டிருக்கிறது சரியில்ல. நமக்கெண்டு நீங்க முதல் எடுத்துப் போட்ட அந்தக் கடக்கரக் கொளனி வளவில சின்னதாக வெண்டாலும் ஒரு அறையைக் கட்டித்து அங்க



படிப்பகம்

www.padippakam.com



போயிர வேணும். அங்கயிருந்து பிறிச்ச வெச்சித்துத் தொழிலப் பாக்கலாம். இந்தத் தொழிலுக்கு அந்த இடம்தான் பொருத்தம். நாம ஒண்டு நினைக்கிறதும் அந்த மாமாங்கர் என்னத்த நினைச்சிக் கொண்டிருக்கிறாரோ தெரியாது'' மாலதி சொல்லிக் கொண்டே போனாள். பூபாலன் மூச்சுமில்லாமல் பேச்சுமில்லாமல் அவன் பாட்டுக்கு இருந்தான்.

''என்ன நீங்க நான் சொல்லிக் கொண்டே போறன். நீங்க பேசாம உம்மெட்டுத்து இருக்கிறீங்க?'' என்றாள்.

''மாலதி, நீ சொன்ன எல்லாத்தையும் நான் ஒத்துக் கொள்ளுறன். ஆனா வங்கியில பணத்தையெல்லாம் பிரிச்சிப் போட்டிருக்கிறனே அதில கை வைக்கமாட்டன். எனக்கும் பெத்தவன் எண்ட முறையில ஒரு கடமயிருக்கு. பிள்ளைகள் அவங்கட கடமையைச் செய்தாலும் சரி, செய்யாமல் போனாலும் சரி, என்னால முடிஞ்சத நான் செய்திருக்கன். அதில எனக்குத் திருப்தி. மற்றபடி நீ சொன்ன மத்த விசயங்களைச் செய்து முடிக்க எனக்கும் பூரண சம்மதம்!''

இதைக் கேட்டதும் மாலதி கொஞ்சம் யோசித்தாள்.

''என்ன மாலதி யோசிக்கிறா?''

''ஒண்டுமில்ல. பிள்ளைகளைப் பத்தித்தான் யோசிக்கிறன். இப்பிடியெல்லாம் நீங்க பிள்ளைக்கெண்டு எவ்வளவோ பாசத்தோட செய்திருக்கிறீங்க. ஆனா அதுகள் உங்கள பாக்கல்லையே. என்ன சாதிப் பிள்ளைகள் இதுகள். உங்கட ரோசமும் முற்கோபப் புத்தியும் அதுகளுக்கும் இருக்கு!''

''பிள்ளையள உட்டுத் தள்ளு மாலதி. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லெண்டு சும்மாவா சொல்லியிருக்கிறாங்க. அவங்களுக்கெல்லாம் தாய் தகப்பன்ட அருமபெரும இப்ப தெரியாது. அவங்களும் ஒரு தாய் தந்தையான பிறகுதான் எல்லாம் தெரியும். சரி உட்டுப்போட்டு போய் சோத்தக் கறிய ஆக்கு! என்றான் பூபாலன்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு சோற்றைக் கறியைச் சமைத்து தன்கையால் கணவனுக்கு உணவு பரிமாறப் போகிறோமே என்று எண்ணிக் கொண்ட மாலதி, பூரித்த உள்ளத்தோடு எழுந்து நடந்தாள். பூபாலன் அப்படியே கைகளை தலைக்குப் பின்பக்கம் கட்டியபடி படுத்துக் கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com



# 17

வெகுவிரைவிலேயே மாலதி சொல்லியபடி காரியங்க ளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறிக் கொண்டிருந்தன.

ரதியும்-கணவனும் வீட்டில் வந்து புதுக் குடித்தனம் நடத்தத் தொடங்கி விட்டார்கள்.

பின் வளவை மூத்தவன் ராகவனின் பெயருக்கு மாற்றி உறுதி முடித்தாயிற்று.

—கடற்கரைக்—கொளனி—வளவுத்—துண்டில்—பிறிச்சை வைப்பதற்கு ஒரு சிறிய அறையும், அவர்கள் சீவிக்க இன்னொரு அறையையும் கற்களால் அத்திவாரம் போட்டு, தகரத்தால் கூரை, சுவர் என்று ஒப்பேற்றியாகிவிட்டது. கரண்டும் எடுத்து லைற்றும் பளிச்சென்று மினுங்கியது.

இனிமேல் பிறிச் வருவதுதான் தாமதம்.

'பிறிச் வேலை முடிந்துவிட்டது. கொண்டு போகலாம்' என்று பிறிச் செய்தவர் விசளம் அனுப்பியும் விட்டார்.

"ஒரு நல்ல நாள் பாத்துத்தானே எடுத்துவர வேணும்" என்று மாலதி சொன்னதால் அந்த நாளுக்காகக் காத்துக் கொண்டிருந்ததில் நாட்கள் ஓடி விட்டன.



படிப்பகம்

“சரி இன்றைக்கு நல்ல நாள். நான் போய் பிறிச்சை ஏற்றிக் கொண்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு பூபாலன் வெளிக்கிடத் தொடங்கினான்.

மாலதி அலுமாரிக்குள்ளிருந்து ரூபா பதினெட்டாயிரத்தையும் எண்ணிக்கொண்டு வந்து கணவனின் கையில் கொடுத்தாள். அவன் பணத்தை வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டு சைக்கிளில் ஏறி விரைந்தான்.

‘இன்றைக்குப் பிறிச் வரும்’ என்ற செய்தி அந்தக் கிராமமெல்லாம் அடிபட்டு ரதி-கணவன் காதுகளிலும் விழுந்தது.

‘இஞ்ச வாங்களேன். இண்டைக்கு அப்பா பிறிச்சக் கொண்டு வரப்போறாராம். நாமளும் ஒருக்காப் போய் பாத்தித்து வருவமே!’ என்று ரதி கணவனை அழைத்தாள்.

அவனும் மறுப்புத் தெரிவிக்காமல் ‘சரி புறப்படு’ என்றான். அவர்களுக்கு பூபாலன் மேல் கோபமில்லை. அவருக்குத் தெரியாமல் அவர் இல்லாமல் தாங்கள் மணம் முடித்துக் கொண்டதால் ஒரு இனம் புரியாத கூச்சம் இருந்தது. இவ்வளவு பணிவிடைகள் நடந்து முடிந்தும் கூட பூபாலனும் மகளோடோ அல்லது மருமகனோடோ முகம் கொடுத்துப் பேசியதேயில்லை. இதைப் பார்த்து அப்பாக்கு இன்னும் நம்மோடு கோபம்தான் என்று அவர்கள் பிழையாக நினைத்துவிட்டார்கள். பேச்சுக்கதையெல்லாம் மாலதியோடு மட்டும்தான். பூபாலனும் எவ்வளவுதானென்றாலும் அவர்களோடு பேசச் சங்கடப்பட்டான். அவனுக்கு உள்ளூரப் பேசுவதற்கு எவ்வளவோ விருப்பம். ஆனால் முதலில் யார் பேசுவது என்ற பிரச்சினைதான். தன்மானத்தை எப்போதுமே விட்டுக் கொடுக்காத சுபாவம் அவனுக்கு. அதை மாற்ற வேண்டும் என்று யோசித்தாலும் அவனையுமறியாமல் அந்தச் சுபாவம் முன்னுக்கு வந்து நின்று கொள்ளும். நீரடித்து நீர் விலகுமா? இவர்கள் ஊமை நாடகம் எத்தனை நாளைக்கு நிலைக்கப் போகிறது?

நீண்ட நாட்களுக்குப் பிறகு என்ன நினைத்தானோ தெரியாது. ராகவனும் திடீரென்று ஹொஸ்டலிலிருந்து அங்கே வந்து சேர்ந்தான். எல்லோரையும் ஒருமித்துக் கண்டதும் மாலதிக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. பம்பரமாகச் சுழன்றாள்.

ரதியின் கணவன் சிவராமன் துறையடிக்குச் சென்று

www.padippakam.com



பெரிதாக ஒரு பாரை மீனை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான்.

தாயும், மகளுமாக சமையல் வேலைகளை ஆவுறு பூவுறு வேகத்தில் செய்து கொண்டிருந்த போது ரவுண் பக்கம் பெரிதாக ஒரு வெடிச் சத்தம் கேட்டது.

நேரம் காலை பத்து மணியிருக்கும்.

“மாமாங்கப் பிள்ளையாரே!” என்று குசினிக்குள் இருந்தபடியே கத்திக் கொண்டு வெளியே வந்தாள் மாலதி.

“எங்கேயோ கண்ணிவெடி வெடிக்க வச்சிருக்கானுகள்!” என்றான் சிவராமன்.

“இல்லத்தான் இது சிலிண்டர் வெடி!” என்றான் ராகவன். இதற்கிடையில் புசுபுசுவென ஊரெங்கும் கதை பரவத் தொடங்கி விட்டது.

ரவுணில் சிலிண்டர் வெடியாம். ராணுவத்தினர் சென்ற வாகனத்துக்கு வச்சதாம். செத்தவர்கள் விபரம் தெரியாது. பல பொதுமக்கள் சுடுபட்டுச் செத்துக் கிடக்கிறாங்களாம். பல கடைகளும் சாம்பலாம்.

அந்தளவில் மாலதி எல்லா வேலைகளையும் அப்படியப்படியே போட்டுவிட்டு முற்றத்தில் கொட்டிப் பரப்பிய குருத்து மண்ணில் வந்து குந்திக் கொண்டாள்.

“பிள்ளையாரே! அவருக்கு ஒண்டும் நடந்திருக்கப் போடாது”. என்று அவள் வாய், ஓயாமல் சொல்லிக் கொண்டே யிருந்தது. மந்திரம் போல திரும்பத் திரும்ப அதையே ஜெபித்தாள்.

நேரம் பதினொரு மணிக்கும் மேலாகிப் போய்விட்டது. ‘பிறிச்’செடுக்கப் போன பூபாலனை இன்னும் காணவேயில்லை. ரவுணிலிருந்து தப்பியோடி வந்தவர்களின் கதைகளைக் கேட்கக் கேட்க மாலதியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவள் நிலையைப் பார்த்து மற்றவர்களும் சொல்வதறியாது திகைத்துப் போய் நின்றார்கள்.

போய்ப் பார்த்து வரலாம் என்றாலும் அது முடியாத காரியம். என்ன செய்யலாம் என்று கைகளைப் பிசைந்து கொண்டிருந்தபோது, பூபாலன் சைக்கிளில் வேகமாக வந்து



படிப்பகம்

www.padippakam.com



இறங்கினான். மாலதி ஓடிப்போய் சைக்கிளைப் பிடித்தபடி அழத்தொடங்கிவிட்டாள்.

"மாலதி, ஏன் அழுறா? நான்தான் இந்தா வந்து நிக்கிறனே" சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் பூபாலன்.

எவரும் எதுவும் பேசவில்லை.

ரதி, கணவன் சிவராமன், மூத்த மகன் ராகவன் எல்லோரையும் கண்டபோது மனதிலிருந்த கவலைகள் பூபாலனுக்கு அரைவாசி குறைந்தது போல தெரிந்தது.

அவன் உயிர் பிழைத்து வந்தாலும் அவன் முகத்தில் நிறைவான மகிழ்ச்சியைக் காணவில்லை. அதை மாலதி அவதானித்தாள். இவருக்கு ஏதோ நடந்திருக்கிறது! அதைச் சாப்பிட்ட பிறகு கேட்கலாம் என்று எண்ணிக் கொண்டு மெல்ல நடந்து மீண்டும் குசினிக்குள் சென்று அடைந்து கொண்டாள்.

'பிறிச்' சம்பந்தமாக எவரும் பூபாலனிடம் கேள்வி எழுப்பவில்லை. எல்லோரும் பூபாலனுக்கு ஏதோ நடந்து விட்டதென்றே நினைத்தார்கள். மாமனார் வந்ததும் சிவராமன், முற்றத்தின் ஓரமாக நின்ற நிழல் மையோரின் கீழ் பாயைப் போட்டுக்கொண்டு இருந்து கொண்டான். அதைப் பார்த்து ராகவனும் போய் பக்கத்தில் அமர்ந்தான்.

கடற்கரைக் காற்று புசுபுசுவென வீசியது.

பூபாலன் சேட்டைக் கழற்றி வெளிக்கொடியில் போட்டு விட்டு, உள்ளே கிடந்த கதிரையொன்றில் இருந்து கொண்டான். அவன் பார்வை முன்னால் தொங்கிய படத்தின் மேல் மேய்ந்தது.

ராமு சின்னப் பையனாக இருந்த போது அவனோடு சேர்ந்து பூபாலன் எடுத்துக் கொண்ட புகைப்படம் அது.

அதைப் பார்க்கப் பார்க்க பூபாலனுக்கு மனம் தத்தளித்தது. "நீ மாத்திரம் இன்று இல்லையே மகனே! இப்போது நீ மீசை முளைத்த இளந்தாரியாக இருப்பாய்! எப்படி ராமு எங்களையெல்லாம் மறந்து வாழ உன்னால் முடிந்தது? நீ துணிச்சல்காரன்தான்! வீரத்தமிழன்தான்! இந்த நாட்டில் இப்படிக் கிடந்து சீரழிந்து செத்துப் போறதைக் காட்டிலும் நீ எடுத்துக் கொண்ட முடிவுதாண்டா சிறந்தது" பூபாலனின் கண்களிலிருந்து பொல பொலவெனக் கண்ணீர் வழிந்தது. மற்றவர்கள் பார்த்தால் வித்தியாசமாக நினைப்பார்கள் என்று, எவரும் பார்ப்பதற்கு முன் அதைத் துடைத்துக் கொண்டான். மதியச் சாப்பாடு முடிய



படிப்பகம்

www.padippakam.com



ஒரு மணிக்கும் மேலாகிவிட்டது.

எல்லோரும் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாக இருந்தபோது பூபாலன் வாயைத் திறந்தான்.

“மாலதி, நமக்கு இனிமேல் பிறிச்சே வராது. நமக்காக செய்து வைத்திருந்த பிறிச் எரிந்து நாசமாகிவிட்டது. அது மாத்திரமல்ல, அந்தப் பிறிச் செய்த முருகேசரும் சுடுபட்டு இறந்து போனார். நான் தப்பியது அரும்பொட்டு. நல்லவேளை பக்கத்திலயிருந்த புடவைக் கடைக்கார இஸ்மாயில்ற தயவில அவரோடயே தங்கித்தன். என்னசெய்யிற? நமக்கு பதினைந்தாயிரம் கையோட நட்டம்!”

இதைக் கேட்டதும் மாலதி அதிர்ந்தே போனாள். பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை. மற்றவர்களும் வாய் திறக்கவில்லை. இது பற்றி எதைச் சொன்னாலும் அப்பாவுக்கு கோவம் வரும் என்று தலையைக் குனிந்து கொண்டார்கள்.

“ம்... என்ன செய்யிற? என் வாழ்க்கையில இழப்புக்கள்தான் வந்து கொண்டிருக்கு!” என்று கவலைப்பட்டுக் கொண்ட பூபாலன், திடீரென தொண்டையைச் செருமி கனைத்து விட்டுக் கொண்டு, “மாலதி இதெல்லாம் எனக்கு ஒரு இழப்பாடி? பிள்ளையான என் பிள்ள ராமுவையே இழந்து இத்தனை வருசம் நான் உயிரோட சீவிக்கல்லையா! ஒண்டு போனா இன்னொண்டு வரும்! உட்டுத் தள்ளு” என்று வீராப்புடன் பேசியபடி மூலைக்குள் அசைவில் தொங்கிய பாயை எடுத்துக் கொண்டு பிறிச் றூமிற்குள் போய்ப் படுத்துக் கொண்டான்.

அவன் பேச்சும், சொல்லும் அவன் மனம் மிகவும் நொந்து போயிருப்பதாக எல்லோருக்கும் வெளிக்காட்டியது.

நெருப்புத் தணலாக எரித்த சூரியன் மேற்குப் பக்கம் போக அந்தவளவில் எங்கும் நிழல் சூழ்ந்து கொண்டது. தாயும் பிள்ளைகளும் பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருக்க நேரம் போனதே தெரியவில்லை.

கருக்கல் விழுந்து கொண்டுபோனது.

ரதியும்-கணவனும் போகப் புறப்பட்டார்கள். அவர்களோடு ராகவனும் செல்ல ஆயத்தப்பட்டான். அதை அவதானித்த மாலதி “தம்பி, நீயும் போப்புறயா? நிண்டு நாளைக்குப் போவன். ஊரான் புறத்தியானப் போல ஓடப் பாக்கிறா?” என்றாள். அந்தளவில் அவன் நின்று கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com



“அம்மா, நாங்க பொயித்து வாறம்! விடியச்சாமம் இவர் வேலைக்குப் போக வேணும்'' என்றாள் ரதி.

“இஞ்ச பிள்ள, இன்னும் நீ சின்னப் பிள்ளையா? அப்பாதான் மன வெப்பிசாரத்தில் பேசாமயிருக்கிறாரென்றால் நீயும் இருக்க வேணுமா? அந்தா பிறிச் றூமுக்க படுக்கார். போய் அரட்டிச் சொல்லிப் போட்டுப் போங்க. அவர் எவ்வளவு தானெண்டாலும் என்னக் காட்டிலும் உங்களோடதான் அவருக்குச் சீவன்! அப்பரப் போல வைராக்கியம் இவளுக்கும்! போ! ரெண்டு பேருமாப் போய்ச் சொல்லிப் போட்டுப் போங்க!''

ரதி கொடுப்பிற்குள் சிரித்தபடி பயந்து பயந்து நெல்லுப்பாயின் பக்கமாக நெருங்கிச் செல்லும் திருட்டுக் காக்கையைப் போல பூபாலனுக்குப் பக்கத்தில் போய் நின்று “அப்பா! அப்பா!'' என்றாள். அவன் பேசவில்லை. மெதுவாக குனிந்து அவன் கையை உலுப்பி “அப்பா... அப்பா!'' என்றாள். பேச்சும் இல்லை. மூச்சும் இல்லை. அவ்வளவுதான்.

“அம்மோ! அம்மோ! ஓடி வாங்க! அப்பா செத்துப் போனார்'' என்று பயங்கரக் குரலெழுப்பி கத்திப் புரண்டாள் ரதி. மாலதி சன்னதம் பிடித்தபடி ஓடிவந்தாள். வந்த வரத்தில் அவள் வைத்த சத்தம் அக்கம் பக்கத்தவர்களுக்கு மாத்திரம் கேட்கவில்லை. பக்கத்தில் தினமும் ஓயாமல் இரைந்து கொண்டிருக்கும் கடலுக்கும் கேட்டது. அவள் கதறிய பரிதாபத்தைப் பார்க்க முடியாமல் அந்தக் கடலலைகளும் கரையை மோதி மோதியடித்து ஒப்பாரி வைக்கத் தொடங்கின. இந்தக் கடலலைகள்தான் ஒருவேளை ஓய்ந்தாலும் அப்பாவி மனிதர்களின் துன்ப அலைகள் எப்போதுமே ஓய்வதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



மட்டக்களப்பு மட்டிக்கழிக் கிராமத்தில் பிறந்து அமிர்தகழியில் திருமணம் செய்து வாழும் செல்லையா-குணரத்தினம் கவிதைத் துறையில் தனது எழுத்துப் பணியை ஆரம்பித்து, படிப்படியாக இலக்கியத்தின் எல்லா வடிவங்களிலும் எழுதி வெற்றி கண்டவர்.

இதுவரை 12 நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் 6 நாவல்கள் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றுள்ளன. 'தெய்வ தரிசனம்', 'சொந்தம் எப்போதும் தொடர் கதைதான்' ஆகிய இரு நாவல்கள் நூலுருப் பெற்றிருக்கின்றன.

மட்டக்களப்பு பேச்சுவழக்கைப் பயன்படுத்தி தரமான கவிதை படைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள இவர் இதுவரை பல இலக்கியப் போட்டிகளில் எண்பத்தைந்திற்கும் மேற்பட்ட பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வுள்ள இவர் 'அமிர்தகழியான்' எனும் புனைபெயரில் நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதி வருகிறார்.

வாழைச்சேனைக் காகித ஆலையில் எழுதுவினைஞராகக் கடமை பார்த்தவர் தற்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிர் பத்திரிகையில் கடமை புரிகிறார். 60 வயதைக் கடந்த பின்பும் இன்னும் ஓயாது இளமைத்துடிப்புடன் எழுதி வரும் செ. குணரத்தினம் பழகுவதற்கு இனியவர்.

த. கோபாலகிருஷ்ணன்
(செங்கதிரோன்)

**ISBN No : 955-8637-04-1**

அச்சுப்பதிப்பு : கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13. தொலைபேசி : 432477

படிப்பகம்